# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–16, இதழ் – 4<br>Volume - 16, Issue - 4 | பங்குனித் திங்கள்<br>March 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |





PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு
திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஒரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND

a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999

reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**

**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244

hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048

(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


ஓட்டல்
சாரதாராமின்
36 வது
ஆண்டு விழா
15.11.2024
THANK YOU
for being with us
நன்றி!
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு – குறள் (86)
பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.
hotel saradharam
Saradharam's LAKSHMI VILAS HERITAGE HOTEL
villa SENTOSA AT PONDICHERRY
saradharam residency kattumannarkoil
Incredible India


DAC
DREAM ASCEND CONQUER
Now It's Women's Turn
Book Your Home in
Your Woman's Name to Avail
FREE
REGISTRATION
CHARGES!
VALUE UPTO
8*
LAKHS
NOW
IT'S TIME TO TAKE A
TURN
APARTMENTS | VILLAS | PLOTS
Tambaram | Manapakkam | Madambakkam | Medavakkam | Pallikaranai | Pammal | Porur | Sholinganallur
Guduvanchery | Navalur | Kuthambakkam | Coimbatore
*T&C Apply
For Website
www.dacdevelopers.com
100+ PROJECTS
3M+ SQFT CONSTRUCTION
2800+ HAPPY FAMILIES
93003 93003

# வாழ்க மணமக்கள்







மணமக்கள்

**A. மகேந்த்ரன்,** B.E., M.B.A., – **V. வர்ஷினி,** B.Tech.

மணநாள்

**16.02.2025 ஞாயிற்றுக்கிழமை**

**ராணி மகால் திருமண மண்டபம்,** காவேரி நகர், மயிலாடுதுறை.

திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி விழாவினை சிறப்பித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்.

**மணமகன் பெற்றோர்**

**S. ஆனந்தன்** (மணக்குடி)

**A. சித்ரா** (கருவாழக்கரை)

**மணமகள் பெற்றோர்**

**B. வளவன்** (வரவுகுடி)

**T. வாணி** (நாங்கூர்)

மயிலாடுதுறை

9442741419

# வாழ்க மணமக்கள்

*மண நாள்*
**19.01.2025**
**( ஞாயிறு )**
**ஸ்ரீராம் மஹால்**
**ஆர்ச் கேட்,**
**நெய்வேலி.**



*வரவேற்பு நாள்*
**21.01.2025**
**( செவ்வாய் )**
**ஸ்ரீ விமலாம்பிகை**
**திருமண மஹால்,**
**மயிலாடுதுறை.**

Captain **Dr.G.ராம்நிவாஸ்** M.B.B.S., **Dr. T.காயத்ரி** M.B.B.S., M.S. (O&G)





எங்கள் இல்ல திருமணம் மற்றும் வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது இதயங்கனிந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம்.

என்றென்றும் அன்புடன்,

**G. திருமாவளவன்**
**D. வரலட்சுமி**
நெய்வேலி

**Agri.G. கணேசன்**
**G. சிவகாமசுந்தரி**
மயிலாடுதுறை.

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

- ❖ பிறந்தநாள் விழா, மஞ்சள் நீராட்டு விழா மாணவ / மாணவிகளின் Get together போன்ற சிறிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு ஏதுவாக எங்கள் விடுதி அமைந்துள்ளது.
- ❖ மருத்துவ காரணங்கள் மற்றும் தற்காலிகமாக சில நாட்கள் தங்க சமையலறை வசதியுடன் கூடிய தங்குமிடம் எங்களிடம் உள்ளது. இவ்வசதி வேண்டுவோர் மேற்கண்ட செல் நம்பர்களை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
- ❖ Free Driver Accommodation Available

**இதழின் உள்ளே....**




சங்க நிகழ்வுகள் .......................................................11–19

கல்வி – ஒரு கருத்துப் பரிமாற்றம்............................... 21

தடை உத்தரவுகள்...........................................................25

வாழ வைக்கும் வாழை இலை........................................26

வார்த்தைகள் பிரயோகம்................................................ 41

சங்கப் பலகை ................................................................. 44

மணமகன் / மணமகள் தேவை ........................... 48–51

சிறுவர் பகுதி............................................................. 52–55



**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**

**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு ''கார்காத்தார் ஒப்புரவு'' நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



அனைத்து கார்குலச் சொந்தங்களுக்கும் கார்காத்தார் ஒப்புரவின் இனிய வணக்கங்களும், வாழ்த்துக்களும்.

2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 5ஆம் நாள் நமது நாட்டின் தலைநகராம் புதுதில்லியில் தேர்தல் நடைபெற்று, அதன் 70 தொகுதிகளுக்கான முடிவுகள் பிப்ரவரி 8ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. பாரதிய ஜனதா கட்சி 26 வருடங்களுக்குப் பிறகு தலைநகரின் மாநில ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ளது. ஷாலிமர்பாக் தொகுதி வேட்பாளரான திருமதி ரேகா குப்தா, முதன்முறை சட்டமன்ற உறுப்பினர், முதல் மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பிப்ரவரி 19ஆம் நாள் டெல்லியின் ஒன்பதாவது முதல்வராக பதவி ஏற்றுள்ளார். அவர் திருமதி. சுஷ்மா சுவராஜ், காங்கிரஸின் ஷீலா தீக்ஷித், ஆம் ஆத்மியின் ஆதிஷி போன்ற பெண் முதல்வர்களை அடுத்து, நான்காவது பெண் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். திருமதி ரேகா குப்தா அவர்கள் நன்முறையில், சிறப்பாக அரசினை ஏற்று நடத்த வாழ்த்துகிறோம்.

அமெரிக்காவின் மிக முக்கியமான பதவியான டைரக்டர், F.B.I. ஆக 45 வயதான இந்திய வம்சாவளி திரு. காஷ் படேல் எனும் காஷ்யப் ப்ரமோத் வினோத் படேல் அவர்கள், அமெரிக்க அதிபர் திரு. டிரம்ப் அவர்களால்நியமிக்கப்பட்டுள்ளதுஇந்தியர்களுக்கான நமக்குப் பெருமையே. Director, Federal Bureau of Investigation எனும் மிக உயரிய பதவியில் இந்தியர் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார். அவரையும் வாழ்த்துவோம்.

Dr. K.M. செரியன் அவர்களின் மறைவு மருத்துவ உலகத்திற்கு ஒரு பேரிழப்பு ஆகும். 'Father of Indian Cardiac Surgery' என அழைக்கப்பட்ட டாக்டர் K.M. செரியன் அவர்கள் ஜனவரி 25ஆம் தேதி பெங்களூரில் காலமானார். இந்தியாவின் முதல் பைபாஸ் அறுவை சிகிச்சையினை 1975–ல் மேற்கொண்ட இவர், இதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையினையும் வெற்றிகரமாக மேற்கொண்டதுடன், இந்தியாவின் குழந்தைகள் இதய மருத்துவத் துறையிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இவருக்கு நமது இந்திய அரசு 1991ல் பத்ம விருது

கொடுத்து கௌரவித்துள்ளது. அவரின் ஆத்மா சாந்தி அடைய ஈசனைப் பிரார்த்திப்போம்.

மார்ச் மாதம் 8ஆம் தேதி உலக மகளிர் தினம் அகிலமெங்கும் கொண்டாடப்படுகிறது. மகளிர் பல துறைகளிலும் முதன்மைப் பொறுப்பினை ஏற்று திறம்பட செயலாற்றுவது கண்டு நாம் பெருமை கொள்வதுடன் மகளிர் தின நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். நடந்து கொண்டிருக்கும் Champion Trophy இந்தியா வெற்றி பெறும் என நம்புகிறோம். இம்மாதம் I.P.L. ஜுரம் இந்தியா முழுவதும் பரவி, நம்மை ஆகர்ஷிக்க உள்ளது. வரவேற்போம்.

நமது கார்குல மாணவச் செல்வங்கள் நன்முறையில் தேர்வுகளை எழுதி, நிறைய மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். ஏப்ரல் 14ஆம் நாளன்று குரோதி வருடம் விடைபெற, ஸ்ரீவிசுவாவசு வருடம் பிறக்க உள்ளது. கார்குலச் சொந்தங்கள் அனைவருக்கும் இனிய தமிழப் புத்தாண்டு வாழ்த்துக்களை கார்காத்தார் ஒப்புரவும், சென்னை கார்காத்தார் சங்கமும் தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்!!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

**அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,**
**எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.**
**என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.**

**- கார்காத்தார் ஒப்புரவு**

# சங்க நிகழ்வுகள்

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர்

22.2.2025 அன்று சங்க கட்டட வளாகத்தில் கூட்டம் தலைவரது வரவேற்பு மற்றும் மலர்ச்சி இறைவணக்கப் பாடலுடன் துவங்கியது. சோழா பவுன்டேஷன் திரு. M.K. சுந்தரம் அவர்களது தந்தையார் O.T. முத்தைய்யாபிள்ளை வயது 105 அவர்களது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

செயலாளர் திரு. G. தியாகராஜன் அவர்கள், சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையையும் தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளையும் விவரித்து பதிவு செய்யப்பட்டது. சங்க பொருளாா் திரு. V. செல்வகுமாா் நிதிநிலை விவரத்தினை சமா்ப்பித்தாா்கள். சென்ற மாத கூட்டத்தில் தீா்மானித்தபடி கல்வி உதவி தொகை ரூ. 5000/– மிதுன்சன்செய்க்கு வழங்கப்பட்டது. சுமாா் 35 உறுப்பினா்களை உள்ளடக்கிய சுற்றுலா குழு சேவை செம்மல் திரு. G. தியாகராஜன், செயலாளா் தலைமையில் அந்தமான் சென்று தாயகம் திரும்பியதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சங்கம் பரிந்துரைத்த சுமாா் 15 மாணவா்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கிய தலைவா், CREW அறக்கட்டளைக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தும் எதிா்வருகிற 23.3.2025 அன்று நங்கநல்லூா் ''வாழ்க வளமுடன்'' சிற்றரங்கத்தில் ''மகளிா் தினம்'' கொண்டாடுவது என்றும் தீா்மானிக்கப்பட்டது.

சங்க இணைச்செயலாளா் திரு. S. மதிவாணன் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது. சங்க ஆலோசகா் திரு. V. சண்முகசுந்தரம் – மல்லிகா குடும்பத்தினரால் இரவு உணவு வழங்கப்பட்டது.

நன்றி! வாழ்க வளமுடன்!

– சரவணன், தலைவா்.

### அண்ணாநகர்

சங்க கூட்டம் 16–2–2025 அன்று ''நான் ஒரு ஐஏஎஸ் அகாடமியில் நடைபெற்றது. தலைவா் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவா்கள் கூட்டத்திற்கு வந்திருந்தவா்களை வரவேற்றாா்கள்.

இந்த மாதம் 8–ந் தேதி திருக்கடையூரில் அறுபதாம் கல்யாணம் செய்து கொண்ட நமது மயிலாப்பூா் கண்ணன் வனஜா தம்பதியினா் கூட்டத்திற்கு வந்து பெரியவா்களிடம் ஆசி பெற்றுக்கொண்டாா்கள். அவா்களுக்கு சங்கத்தின் சாா்பில் சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

செயலாளா் தனது உரையில் மகா கும்பமேளாவில் நடந்த விபத்துகளை பற்றியும், டெல்லி இரயில் நிலையத்தில் கூட்ட நெரிசலில் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் குறிப்பிட்டு எப்போதும் கூட்ட நெரிசலில் செல்வதை தவிா்க்க வேண்டும் எனவும், திருமுறை பாடுதல் நிகழ்ச்சி ஏழு முறை வாட்சப் மூலம் நடத்தப்பட்டுள்ளது எனவும் அதில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும், திருமுறைகளை நாம் பாடினால் நம் சந்ததியினா் பிற்காலத்தில் பாடுவாா்கள் எனவும் புதிய உறுப்பினா்களை அடையாளம் கண்டு சங்கத்தில் சோ்க்க செயற்குழு உறுப்பினா்கள் முயற்சி எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டாா்கள்.

நகரங்களில் உள்ளவா்கள், அதுவும் புதிய கேட்டடு கம்யுனிட்டி அபாா்ட்மெண்ட்களில் இருப்பவா்கள் நம் இனத்தின் அடையாளமான காா்காத்தாா் ஒப்புரவு இதழை வாங்கி நம்மை அடையாளப்படுத்திக்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நிறைவாக அரும்பாக்கம் திரு. வெங்கடேசன் அவா்கள் கூட்டம் நடத்த இடம் அளித்த அகாடமியின் இயக்குனருள் ஒருவரான நங்கநல்லூா் திரு. தியாகராஜன் அவா்களுக்கும், மணிவிழா தம்பதியினா் கண்ணன் வனஜா ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டாா்.

என். ஆனந்தகணபதி,
செயலாளா்.
9094682811

**பெருங்களத்தூர் :**

04–01–2025 அன்று சிவாலி ஹாலில் சங்க பொதுக்குழு கூட்டம் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் செல்வி. R. ஷமிதா இறைவணக்கத்துடன் துவங்கியது. துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். சங்கச் செயலாளர் திரு. G. ராஜகோபலன் அவர்கள் 2024–ம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்க பொதுக்குழு ஏற்றுக்கொண்டது. பொருளாளர் திருமதி. R. சாந்தி 01–01–2024 முதல் 31–12–2024 வரையிலான சங்க வரவு செலவு கணக்குகளை படிக்க பொதுக்குழு ஏற்றுக்கொண்டது.

பொதுக் குழுவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சங்கத்தின் ஆண்டு சந்தா 2025–ம் ஆண்டு முதல் ரூபாய். 300/– வசூலிக்க செயற்குழு முடிவு செய்ததை பின்னேர்ப்பு செய்யப்பட்டது.

2. சங்கத்தின் இரண்டாவது துணைத்தலைவர் பதவியை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

2025 மற்றும் 2026–ம் ஆண்டிற்கான நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களை வழக்குரைஞர் திரு. C. சுவாமிநாதன் அவர்கள் தேர்தல் அதிகாரியாக இருந்து நடத்தினார்கள். கீழ்கண்ட புதிய நிர்வாக குழு மற்றும் செயற்குழு போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டது.

தலைவர் திரு. R. கார்த்திகேயன் துணைத்தலைவர்கள், திருவாளர்கள் S. சீனிவாசன், K. நெடுஞ்செழியன், செயலாளர். திரு. G. இராஜகோபாலன், இணைச்செயலாளர்கள் திருவாளர்கள். V. சேகர், V. பாலசுப்பிரமணியன், பொருளாளர் R. சாந்தி, செயற்குழு உறுப்பினர்கள், திருவாளர்கள். B. கார்த்திகேயன், B. பாபு, R. சுமதி, G. முத்துக்குமாரசுவாமி, V. பரணி, K. சங்கரி, A. பட்டாபிராமன், V. ரவீந்திரன். இணைச்செயலாளர் திரு. V. சேகர் நன்றி நவில பொதுக்குழு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

மாலை சிற்றுண்டியாக சிவப்பரிசி கொழுக்கட்டை, மோதகம், காபி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

சங்கத்தின் 6–ஆம் ஆண்டு விழா மாலை 5.15 மணியளவில் சிவாலி ஹாலில் கார்குல மகளிர் ஐவர் குத்துவிளக்கு ஏற்ற, செல்விகள் R. ஷமிதா, V. ரோஸ்மிதா இறைவணக்கம் பாட தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையிலும் மாநில கூட்டமைப்பின் தலைவர், திரு. K.K.R.K. சுரேஷ் (எ) ராஜசுந்தரம் பிள்ளை அவர்கள் முன்னிலையிலும் மிக சிறப்பாக துவங்கியது. துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் அனைவரையும் வரவேற்க, செயலாளர் திரு. G. இராஜகோபாலன் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார்கள்.

சென்னை கார்காத்தார் சங்க தலைவர் திரு. சோமசுந்தரம், KBF–ன் தலைவர் திரு. M. பாலமுருகன் KBF-ன் கையேடு மற்றும் சலுகை கூப்பனை வழங்கியும் மாநில கூட்டமைப்பின் ஆலோசகர் திரு. சபா சிவகுமார் மாநில கூட்டமைப்பின் துணைத்தலைவர் திரு. B.T.R. சிவகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். CREW அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகர் திரு. டி.என். முத்துக்குமாரசாமி அவர்கள் சங்கம் தனியாக ஒரு நாள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி ஏராளமான பரிசுகளை ஆண்டு விழாவில் வழங்குவது சிறப்புக்குரியது என்று பாராட்டி, ஆறு மாணாக்கர்களுக்கு ''எதிரே உன் ஏணி'' என்ற புத்தகம் வழங்கி படிக்கும் திறனை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பித்தார்கள். கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது வாழ்த்துரையில் திரு. K. சரவணபிரகாஷ் அவர்களை பாராட்டி, அவர்களின் மகன் திரு. அர்சுன் கல்யாண் இந்திய செஸ் அணிக்கு மிகச் சிறந்த பயிற்சியாளர்களில் ஒருவராக உள்ளதை சிறப்பித்து கூறினார்கள்.

நமது கார்குல சொந்தம் திரு. K. சரவணபிரகாஷ் அவர்களை (உரிமையாளர் கல்யாண் கிராண்ட் ஹோட்டல் திருவசந்தம் ரெஸ்டாரண்ட் கிளாம்பாக்கம்) அனைவரும் பாராட்டி கௌரவித்தார்கள்.

மகளிரை ஊக்குவிக்கும் விதமாக போட்டிகளில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்ற நான்கு மகளிர்க்கு சிவாலி பொட்டிக்கின் ரூ. 500/– மதிப்புள்ள கூப்பனை உரிமையாளர் திருமதி. M. சுசித்ரா சார்பாக Dr. M. மதுமிதா அவர்கள் வழங்கினார்கள். திரு. K. சரவணபிரகாஷ் தனது ஏற்புரையில் வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்து நமது சமுதாய மக்களுக்கு தன்னால் இயன்றதை செய்வதாக கூறியுள்ளார்கள். திரு. KKKR. சுரேஷ் அவர்கள் நமது முன்னிலை உரையில் சங்கம் ஆறாவது ஆண்டு தொடர்ந்து சிறப்பாக செயலாற்றி வருவதை பாராட்டி வாழ்த்தினார்கள்.

திரு. ஆனந்தம் செல்வகுமார் தனது சிறப்புரையில் ''வாழ்க்கை ஓர் பூந்தோட்டம்'' என்ற தலைப்பில் இன்றைய சூழ்நிலையில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எப்படி எளிதாக தீர்க்கலாம் என்பதை உதாரணங்களுடன் விளக்கி கூறினார்கள்.

70 வயது பூர்த்தியடைந்த திருவாளர்கள் S. வரதராஜன், R. முருகேசன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக இணைச்செயலாளர் திரு. V. சேகர் அவர்கள் நன்றி நவில ஆண்டு விழா இனிதே நிறைவுற்றது. விழாவில் கலந்து கொண்ட கார்குல சொந்தங்கள் அனைவரும் இரவு உணவினை தமது சொந்தங்களுடன் கலந்து உண்டு மகிழ்வுடன் கலைந்து சென்றனர்.

செயற்குழு கூட்டம் 23–02–2025 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் 04–01–2025 அன்று நடைபெற்ற நமது சங்க பொதுகுழு மற்றும் ஆறாவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொண்டார்கள். செயலாளர் நமது சங்கத்தில் புதியதாக 16 உறுப்பினர் குடும்பங்கள் இணைந்து மொத்தம் 201 குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு சங்கம் வளர்ந்துள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள். பொருளாளர் சங்க நிதி நிலை அறிக்கையை படித்து விடுபட்ட உறுப்பினர்களிடமிருந்து சந்தாதொகையினை வசூலிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து சங்கம் பரிந்துரைக்கும் மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வரும் CREW அறக்கட்டளை தலைவர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்க நிதி நிலையை உயர்த்த கலந்து ஆலோசிக்கப்பட்டது. ஆன்மீக/இன்ப சுற்றுலா செல்ல செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் பகுதியில்உள்ளஉறுப்பினர்களிடமிருந்துகருத்துகளை கேட்டறிந்து அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டது. நிறைவாக பொருளாளர் திருமதி. R. சாந்தி அவர்கள் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் நிறைவுற்றது.

- G. ராஜகோபாலன், செயலாளர்.

## இளையபெருமாள் நல்லூர்

20–02–2025 அன்று மாத கூட்டங்கள் இரு சங்கங்களிலும் நடைபெற்றன. உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் நீக்கம் செய்யப்பட்டது.

கார்குல மக்களின் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் அருள்மிகு பிணி தீர்த்த அம்மன் கோயில் தை மாத பூஜை (10–2–2025) சிறப்பாக நடந்தேறியது. அது சமயம் உணவுக்கூடம் மற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே குளியலறை மற்றும் கழிவறைகளுடன் கூடிய கட்டிடம் அறங்காவலர்கள் கு. கோவிந்தராசு & ச. சிவசங்கர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டமைக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

மகளிரணி முதல் வருடத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது. மகளிரணி தலைவி திருமதி. சம்பூர்ணா இனியன், செயலாளர் திருமதி. சாந்தா வைத்தியலிங்கம், பொருளாளர் திருமதி. லஷ்மி பாலசுப்பிரமணியன் ஆகியோர் வருட கணக்குகளை சரிபார்த்து உறுப்பினர்களிடம் தெரியப்படுத்தினர் மகளிரணி உறுப்பினர்கள் தங்களுடைய சேமிப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு பற்றி அறிந்து கொண்டதாக பெருமிதம் கொண்டனர்.

நிறைவாகநமது சங்கமாணவ செல்வங்களுக்கு கல்லூரிகட்டணம்செலுத்தபேருதவிசெய்தநம்கார்குல வள்ளல் திரு. ச. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள் காணிக்கையாக்கப்பட்டது.

– கு. பாலசுப்ரமணியன்,
செயலாளர்.

## சீர்காழி

செயற்குழு கூட்டம் 5–2–2025 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டத்தில் திரு. T. முரளிதாஸ், (தண்ணீர் பந்தல், கொள்ளிடம்) என்பவர் புதிய உறுப்பினராக சேர்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

சங்கத்தின் 22–வது ஆண்டு விழா 20–4–2025 ஞாயிற்றுகிழமை நடத்துவது என்றும்,

21–வது மங்கல சந்திப்பு 15–6–2025 ஞாயிற்றுக்கிழமை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. S. ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

– சி. அகோரம்,
செயலாளர்.

## மணிக்கிராமம்

சங்க கூட்டம் 10–2–25 அன்று திருமேனி அழகர் கோவிலில் நடைபெற்றது. சங்க தலைவர் திரு. G. அன்பழகன் அவர்கள் சிவபுராணம் வாசிக்கவும், செயலர் திரு. T. கபிலன் அறிக்கை வாசிக்கவும், பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது.

குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு பற்றியும் அவசியத்தை பற்றியும் கௌரவத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

சங்க உறுப்பினர் திரு. S. சுரேஷ் அவர்கள் சஷ்டியப்த பூர்த்தி 5–2–25–ம் தேதி புதன்கிழமை திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பொன்னாடை அணிவித்து சந்தனமாலை போட்டு வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டது. கார்குல சொந்தங்கள் அனைவரும் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடினார்கள். உறுப்பினர்களுக்கு டீ, பிஸ்கட் வழங்கப்பட்டது. இறுதியாக பொருளர் திரு. S. பரமநாதன் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,
தலைவர்.

## இளந்தோப்பு

சங்க கூட்டம் 12–02–2025 முன்னாள் தலைவர் ஆசிரியர் S. செல்வநாயகம் தலைமையில் துவங்கியது.

தலைவர் தமது உரையில் மண்டல செயலாளர் அவர்கள்சீரியமுயற்சியால்மார்கழிமாதம்30நாட்களும் திருப்பள்ளி எழுச்சி சிறப்புற நடைபெற்றமைக்கு S. சீனுவாசன் அவர்களுக்கும் ஒத்துழைப்பு கொடுத்த கார்குல சொந்தங்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

பொருளர் தமது உரையில் விரைவில் இளந்தோப்பு சங்கத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்க உள்ளதால் நிலுவையில் உள்ள ஆண்டு சந்தாவினை அனைவரும் செலுத்த வேண்டுகோள் விடுத்தார்கள்.

வரும் 3 ஆண்டுகளுக்கும் இளைஞர்களை புதிய பொறுப்பாளர்களாக நியமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மண்டல செயலாளர் தமது உரையில் சங்கம் சிறப்பாக செயல்பட காரணமாக இருந்த அனைவரையும் பாராட்டினார்கள்.

சங்க வளர்ச்சிக்கு தேவையான அனைத்துப் பணிகளும் செய்ய எல்லோருடைய ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அனைத்து ஊர்களிலும் தொடர்ந்து நடைபெற்று வரும் கூட்டங்கள், மாநாடு போன்றவற்றிற்கு கலந்து கொண்ட அனைவரையும் மண்டல செயலாளர் தனது உரையில் நன்றி தெரிவித்தார்கள்.

26–02–2025 அன்று வர இருக்கும் மகா சிவராத்திரியில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும்,

16–2–2025 ஞாயிறு அன்று மகாசங்கடஹர சதுர்த்தி விழாவினை வெகு சிறப்பாக யாகத்துடன் நடத்துவதும் உறுதி செய்யப்பட்டது.

துணைத்தலைவர் V. குருநாதன் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

V. ராஜசேகரன்,
செயலாளர்.
9444610907

## மயிலாடுதுறை

செயற்குழு கூட்டம் 02–02–2025 அன்று கார்குழலி ஞானசேகரன் இணைச்செயலர் மகளிரணி அவர்களின் இறைவணக்கத்துடன் திரு. தி. ரவிக்குமார் துணைத்தலைவர் அவர்களின் வரவேற்புரைக்குப்பின்சீ. தில்லைநாயகம் செயலர் கடந்த மாத அறிக்கையினை வாசித்திடவும் ந. முத்துகுமரசாமி பொருளர் மூன்று இனங்களில் பராமரிக்கப்படும் சங்க வரவு செலவினை பதிவு செய்தார். சில திருத்தங்களுடன் வரவு செலவினம் கைத்தட்டல் மூலம் ஏற்கபட்டது. தலைவர் B. ராமசந்திரன் அவர்கள் உரையில் தனது கருத்தாக சிலவற்றினை பதிவு செய்தார். உடன் ஒட்டு மொத்தமாக அனைத்து உறுப்பினர்களும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் தி. ரவிக்குமார்

துணைதலைவர் இதற்கு தன் கருத்தாக தலைவர் கருத்துக்களை மறுத்து கூறி நிறைவு செய்தார். பின்னர் திருமதி. அகிலா ரெத்தினகுமார் மகளிரணி செயலர் பிப்ரவரி 4–ஆம் தேதி சங்க கட்டிடத்தில் திருவாசகமுற்றோதல் நிகழ்வுக்கு அனுமதியும் ஒத்துழைப்பும் வேண்டிடவும் திருமதி. வசந்தி பன்னீர்செல்வம் மகளிரணி பொருளர் வரவு செலவு கணக்கினை வாசிக்கவும் பின்னர் திருவாசக முற்றோதல் நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு மதிய உணவினை தான் ஏற்பதாக மேனாள் தருமைக் கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு ஏற்றுக்கொண்டார். பின்னர் முற்றோதல் நிகழ்வுக்கு கட்டிடம் அளித்திட அனுமதியும் ஒத்துழைப்பு நல்கிடவும் ஒருமனதாக ஏற்கபட்டது.

கட்டிடத்தில் சில பராமரிப்பு. மேல் தளத்தில் சாப்பாடு கூட நாற்காலிகளை புதியதாக தரமானதாக வாங்கிடவும், நம் இன பொருளாதார குறைவுடைய ஆண்/பெண்களுக்கு ஏற்பு திருமணம் செய்திட, பகுதி கூட்டங்களும், புதிய செயற்குழு உறுப்பினர்கள் சேர்க்கை பிற இனங்கள் ஜனவரி 26 குடியரசு தினத்தன்று மாவட்ட ஆட்சியரால் சிறப்பு பெற்றவர்களுக்கு சிறப்பு செய்திடவும் வைத்திட்ட அனைத்து தீர்மானங்களும் ஏற்கப்பட்டு,

கடந்த மாதத்தில் இயற்கை எய்திய நம் கார்குல சொந்தங்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி எழுந்து நின்று செய்யப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் துணை தலைவர் தி. ரவிக்குமார் அவர்களின் நன்றியுரையுடன் செயற்குழு கூட்டம் நிறைவுற்றது.

- S. தில்லைநாயகம்,

செயலாளர்

## மயிலாடுதுறை மகளிரணி :

26–01–2025 அன்று மயிலாடுதுறை மகளிர்அணி ஏற்று நடத்திய குடியரசு தினவிழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மகளிரணி இணைசெயலர் திருமதி. கார்குழலி ஞானசேகரன் இறைவணக்கம் பாட விழா இனிதே துவங்கியது. செயலர் திருமதி. அகிலாண்டேஸ்வரி ரத்னகுமார் வரவேற்புரையும், வாழ்த்துரையும் வழங்கினார்கள். சங்கத்தின் தலைவி திருமதி. சுகுணாதேவி சபேசன் தேசியகொடி ஏற்றி வாழ்த்துரை வழங்கினார்கள். மயிலாடுதுறை நகர சங்கத்தலைவர் திரு. பா. ராமச்சந்திரன், துணைத்தலைவர் திரு. தி. ரவிக்குமார், திரு. திருஞானசம்பந்தம், ப. சுவாமிநாதன், இராம. ஆனந்தன், பா. சுவாமிநாதன், திருமதி. கோமதி ரத்தினகுமார் ஆகியோர் குடியரசு தினத்தைப்பற்றி சிறப்புரையாற்றினார்கள். திருமதி. சித்ரா சிவக்குமார் கொடிபாடல் பாடினார்கள். மகளிரணி பொருளாளர் திருமதி. வசந்தி பன்னீர்செல்வம், இணைச்செயலர் திருமதி. சுந்தரி கணேசன் விழாவிற்கு வருகைப்புரிந்த அனைவரையும் வரவேற்று உபசரித்தனர். விழாவில் நகர சங்க மேனாள், இன்னாள் பொறுப்பாளர்களும் மகளிரணி மேனாள், இன்னாள் பொறுப்பாளர்களும் பெரும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவரும் சேர்ந்து தேசியகீதம் பாடி கொடிவணக்கம் செய்தனர். மகளிரணி துணைத்தலைவி விஜயா மதியரசன் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது. வருகை புரிந்த அனைவருக்கும் இனிப்பு, தேநீர் வழங்கப்பட்டது.

மகளிரணி பொறுப்பாளர்கள்.

## செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் 06–02–2025 அன்று நேரு நகரில் வசித்து வரும், திரு. சூ. இரவிச்சந்திரன் (B.D.O. ஓய்வு) அவர்கள் இல்லத்தில் சங்க தலைவர் திரு. கி. இராமநாதன் பிள்ளை தலைமையில் திருமதி. பூஜா முத்துகுமரசாமி இறைவணக்கமம்பாடிட, கூட்டத்தை ஏற்று நடத்தும் இல்லத்தார் திரு. சூ. இரவிச்சந்திரன் பிள்ளை அவர்கள் வரவேற்பும், சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் வரவு செலவு கணக்கை தாக்கல் செய்தும், சென்ற மாத கூட்டறிக்கை திரு. குரு. முத்துகுமார் அவர்கள் வாசித்திட கூட்டம் இனிதே தொடங்கியது.

சங்க தலைவர் அவர்கள் பேசுகையில் 18–01–2025 அன்று மயிலாடுதுறையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகள், தீர்மானங்கள் பற்றி விளக்கமாக கூறினார்கள்.

சங்க உறுப்பினர் திரு. A.M. சேகர் பிள்ளை அவர்கள் ''மொழி ஆளுமை'' பற்றி மிகவும் சிறப்பான உரையை ஆற்றினார்கள்.

திரு. நடனம் பிள்ளை அவர்கள் பேசுகையில் நமது சங்க உறுப்பினர் தங்களது வாழ்க்கை வரலாற்றை கூற வேண்டும் என்று கூறியதை அடுத்து திரு. ச. நெடுஞ்செழியன் கூறியதை மேற்கோள் காட்டியும் கூட்டம் ஏற்று நடத்தும், இல்லத்தாரின் குடும்பத்தை பற்றியும் சிறப்பான கருத்தை கூறினார்கள்.

மேலும், மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா விவசாய சங்க முக்கிய நிர்வாகி "திரு. S. குஞ்சிதபாத பிள்ளை" அவர்கள் **6–02–2025** அன்று இயற்கை எய்தினார். அன்னார்க்கு இரங்கல் தீர்மானமும், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கூட்டம் நடத்திய இல்லத்தார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் ஆண்களுக்கான பரிசு சங்க துணைத்தலைவர் திரு. பாலாஜி அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. உமாமகேஸ்வரி அவர்களுக்கும் இல்லத்தாரால் வழங்கப்பட்டது. இல்லத்தார் வழங்கிய இரவு விருந்தில் அனைவரும் கலந்து கொண்டார்கள். சங்க செயலர் திரு. ச. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கி. இராமநாதன், தலைவர்.

## பரசலூர் :

**02–02–25** அன்று சங்க கூட்டம் சித்தி விநாயகர் தெரு S.M. விஜய் – விஜயலட்சுமி இல்லத்தில் விஜயலெட்சுமி இறைவணக்கம் பாட, S.M. விஜய் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் பிள்ளை சென்ற மாத அறிக்கையும், பொருளர் S.M. விஜய் பிள்ளை நிதிய அறிக்கையும், தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதிய அறிக்கையும் வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள்.

சங்க உறுப்பினர் நெடுஞ்செழியன் – சித்ராவின் மகன் N. அஸ்வின்ராஜ் – அபிநயா திருமணத்திற்கு, சங்க பொறுப்பாளர்கள் மற்றும் கிராம சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சங்கத்தின் சார்பில் பரிசு பொருள் வழங்கப்பட்டது.

சங்க உறுப்பினர்களின் **3** பிள்ளைகளுக்கு சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலுக்கான பரிசு ஆண்களுக்கான பரிசு A. கமலஹாசன், பெண்களுக்கான பரிசு G. பானுமதிக்கும் முறையே S.M. விஜய் – விஜயலட்சுமி வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் S.M. விஜய்க்கு G. நெடுஞ்செழியனும், விஜயலெட்சுமிக்கு இராசாத்தி அம்மாளும் சால்வை அணிவித்தனர்.

A. ஜெயக்குமார் பிள்ளை நன்றியுரை கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன், செயலாளர்.

**9894960438**

## ஆக்கூர்

சங்கக் கூட்டம் **16–2–2025** அன்று சிவன் கோவிலில் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் முன்னிலையில், கௌரவத்தலைவர் திரு. Dr. K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நல்லாசிரியர், திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்கள் இறைவணக்கத்துடன் வரவேற்புரையாற்றி கூட்ட நிகழ்வுகளை தொடங்கிவைத்தார்கள். செயலர் திரு. R. கோவிந்தராசு பிள்ளை சென்றக் கூட்ட அறிக்கையினை வாசித்தார்கள். பொருளர் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பிக்க, சங்கம் அதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

சங்கத் தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை, ஆருத்ரா தரிசன விழா, சிறப்பாக நடத்தியமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்து உரிய வரவு – செலவு கணக்கினை சமர்ப்பித்தார்கள். கூட்டத்தில் ஆக்கூர் சிவன் கோவில் கும்பாபிஷேக தேதி குறித்து ஆலோசிக்கப்பட்டது. நன்கொடையாளர்களை நேரில் சென்று சந்திப்பது குறித்து முடிவு செய்யப்பட்டது.

திரு. A. பாலன் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப்பின் அடுத்தக்கூட்ட அறிவிப்புடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- G. செல்வக்குமார்.

**9942480320**

## 80. இராதாநல்லூர்

சங்க கூட்டம் **9–2–25** அன்று சங்க தலைவர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க இணைச்செயலர் காழி

G. சந்தோஷ்குமார் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிப்ரவரி 2025–ல் பிறந்த நாள் மற்றும் திருண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்தும்,

80. இராதாநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் 7–வது ஜென்ம நட்சத்திர திருவிழா 26–01–2025 அன்று சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கி நன்கொடை வழங்கிய அனைவருக்கும் நன்றியும்,

80. இராதாநல்லூர் இராசு பிள்ளை குடும்ப வாரிசும் நமது சங்க செயலாளருமாகிய திரு. R.M.A. இராஜா முத்தையா அவர்கள் ஆண்டு தோறும் உறுப்பினர்களுக்கு பஞ்சாங்கம் வழங்கி வருவதை இவ்வாண்டும் ஸ்ரீ விசுவாவசு வருட பஞ்சாங்கம் வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டது,

பொருளாளர் M. சீனிவாசன் அவர்களால் சங்க வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது,

சங்க செயலர் R.M.A. இராஜா முத்தையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

T. முத்துகுமரசாமி,
தலைவர்.
9443645646

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு சங்க கூட்டம் 16.02.25 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை வரவேற்றுப் பேசிய தலைவர் கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்.

1. 'CREW TRUST' சென்னை மூலம் மேலும் ஒரு மாணவி அகிலாண்டேஸ்வரி D/o. திரு. நாகநாதன் கீழப்பெரும்பள்ளம் அவர்களுக்கு ரூ. 17000/– கல்வி உதவித்தொகை பெறப்பட்டதற்கு சங்கம் சார்பில் மேற்படி அறக்கட்டளைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

2. சங்க குடும்ப உறுப்பினர்களில் Late. சுப்பையாப்பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. யோகம் அம்மாள் அவர்கள் 26.01.2025 அன்றும், Late. மாணிக்கம்பிள்ளை அவர்களின் மகன் திரு. சந்தானம்பிள்ளை அவர்கள் 27.01.2025 அன்றும், தலைச்சங்காடு திரு. கருணாநிதி ஆசிரியர் ஓய்வு அவர்களின் மனைவி திருமதி. ஜெயகாந்தம் அவர்கள் 12.02.2025 அன்றும் இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்தனை செய்துகொண்டு, இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செய்யப்பட்டது. பின்னர் நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவேறியது.

பால. இலட்சுமணன், தலைவர்
9443783743

## பூம்புகார் - மேலையூர்

சங்க கூட்டம் 09–02–2025 அன்று திரு. M. பரணிதரன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

மகளிர் அணி துவங்குவது பற்றி ஆலோசனை பெறப்பட்டது. பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு உதவித்தொகை வழங்க நிதி சேமிப்பது குறித்து ஆலோசனை செய்து, உறுப்பினர்கள் அனைவரும் முடிந்த அளவு நிதி வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு முதல் உறுப்பினர் சந்தா ரூ. 300 ஆக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கிய திரு. S. ரகுநாத் அவர்களுக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

வெள்ளையனிருப்பு தெரு ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. V.S. சந்தானம், பூம்புகார் தருமகுளம் திரு. கணேசன் பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. ராஜேஸ்வரி, பெருமாள் கோவில் தெரு திருமதி. தனம் அவர்களின் மகன் திரு. சேரன் ஆகியோர் இறைவனடி சேர்ந்தமைக்கு உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- R. வெங்கடேசன், பொருளர்.
8886467000

## நெடுங்காடு

கோட்டுச்சேரி திருமதி. குருலஷ்மி செல்வம் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கம் திரு. K.S. கணபதி சுப்பிரமணியன் அவர்கள் பாட நடைபெற்றது.

மண்டலச் செயலர் செயற்குழு கூட்ட அறிக்கையினை வாசித்தார். நமது சங்க உறுப்பினர் திரு. செல்வம் அவர்களின் குடும்பத்திற்கு ரூ. 50,000/– வழங்க உள்ள மாநில சங்கத்திற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது சங்க பொருளாளர் திரு. கந்தன் அவர்களின் புதல்வி திருமணம் அமைந்ததற்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

K.V. மேட்ரிமோனிக்கு திரு. கந்தன் நன்றி தெரிவித்தார்கள்.

பரிசுக் குலுக்கலில் :III – ராஜேஸ்வரி கண்ணன், II – சந்திரசேகர் – வரிச்சிக்குடி, I – K.S. கணபதி சுப்பரமணியன் – வரிச்சிக்குடி அவர்களுக்கு பரிசுகள் கிடைத்தன.

திரு. S. ரெங்கநாதன்,

செயலாளர்.

## திருவாரூர்

சங்க செயற்குழு கூட்டமும் மகளிரணியினரின் திருவிளக்குப் பூஜையும் **9–2–25** வெள்ளியன்று மிகவும் சிறப்புடன் திருவாரூர் தருமையாதீன ராஜாங்க கட்டளை அரங்கில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக செயற்குழு கூட்டம் மாலை **5.00** மணிக்கு சங்க துணைத்தலைவர் திரு. S. முத்துக்குமாரசாமி பிள்ளை தலைமையில் நடந்தது. கடவுள் வணக்கமாக திருமுறை பாராயணம் எல்லோராலும் பாடப்பட்டது. சங்க செயலாளர் சென்ற கூட்ட அறிக்கையும் பொருளாளர் (பொறுப்பு) திரு. பொன்னுசாமி நிதிநிலை அறிக்கையும் வாசித்தார்கள். பின்னர் அனைவருக்கும் சங்கம் சார்பில் பிஸ்கட் தேநீர் வழங்கப்பட்டது.

மாலை **6.30** மணிக்கு சங்கம் நடத்தும் கார்குல குரு சன்னதியில் தை கடைவெள்ளி விளக்கு பூஜை சுமார் இருபத்துஐந்து மகளிர் கலந்து கொள்ள சிறப்புடன் நடந்தது. அனைவரும் குரு, விநாயகர், முருகன் சன்னதிகளுக்கு தீப ஆராதனை நடந்த பின் அவர் அவர்கள் விளக்குக்கு தீபாரதனை செய்து வழிபட்டார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் எவர்சில்வர் டப்பாவில் நைவேத்தியம் சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது. பூஜைக்கான தேங்காய், பழம், பூ, மாலை, குங்குமம், சூடம், வத்தி அனைத்தும் திரு. அருள் அவர்கள் குடும்பத்தினராலும், சர்க்கரை பொங்கல், வடை போன்றவை திரு. சோமசுந்தரம் மணிமேகலை, கலையரசி கண்ணபிரான் குடும்பத்தினராலும் வழங்கப்பட்டது. விளக்கு பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் இரவு விருந்து வழங்கப்பட்டது.

திரு. கண்ணபிரான் பிள்ளை நன்றி கூறி நிறைவு செய்தார்கள்.

– அ. சோமசுந்தரம்.

## கும்பகோணம்

மாதாந்திர கூட்டம் துணைத்தலைவர் எம். பாலகுரு, கவிபாரதி நகர் அவர்கள் இல்லத்தில் **26–01–25** அன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு M. பாலகுரு அவர்கள் தலைமையில் தங்க பசுபதி அவர்கள் இறைவணக்கம் பாட வை. ராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். செயலாளர் S. விஜயகுமார் அவர்கள் பொங்கல் விழாவை சிறப்பாக நடத்திக்கொடுத்த குழு தலைவர் சந்திரமோகன் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு இந்த பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பெண்ணாடம் மற்றும் சீர்காழி சொந்தங்கள் குடந்தைச் சொந்தங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். மேலும் ஏ.எஸ். பழனி அவர்களின் நிதி நிலை அறிக்கையும் தாக்கல் செய்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. மங்கல சந்திப்பு பற்றிய ஆலோசனையும் நடைபெற்றது. தங்கபசுபதி அவர்களின் சிற்றுரை மிக சிறப்பாக அமைந்தது. பசிப்போர் புசிக்க குழு தலைவர் குணசீலன் அவர்கள் குழு அறிக்கையையும் தாக்கல் செய்து நன்றியையும் கூறினார்கள்.

- S. விஜயகுமார், செயலாளர்

## திருவிடைமருதூர் :

சங்க கூட்டம் **12–02–25** அன்று திருப்பணிப்பேட்டை திரு. K. சுந்தர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆயிரம் பிறைகண்ட திரு. V. கலியமூர்த்தி பிள்ளை அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார்கள்.

கூட்டத்தில் சங்க செயலர் திரு. க. பொற்செழியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்பர். ஆக சங்கத்தின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். மேலும் சங்கத்தின் மேனாள் தலைவர் திரு. G. சந்திரசேகரன் அவர்கள் தன் சொந்த அலுவல் காரணமாக விலகுவதாகவும், விலகிய தலைவர் பொறுப்புக்கு புதிய தலைவராக திரு. சுந்தர் பிள்ளை அவர்களை முன்மொழிந்தார். வந்திருந்த அனைவரும் ஒரு மனதாக ஆமோதித்தனர்.

பின் புதிய தலைவர் திரு. K. சுந்தர் அவர்கள் ஏற்புரை ஆற்றி சங்கம் சிறப்பாக செயல்பட துணை நிற்பேன் என உறுதி அளித்தார். கூட்டத்தில் சங்க வரவு செலவு கணக்கை பொருளாளர் திரு. T.S. இராஜமோகன் அவர்கள் வாசித்து சமர்ப்பித்தார்கள்.

மேலும் கூட்டத்தில் சங்கம் சிறப்பாக

செயலாற்றிட திருவாவடுதுறையை சேர்ந்த திரு. V. செல்வநாயகம், திரு. K. செல்வம், திரு. சங்கர் ஆகியோரும் சூரியனார் கோவிலை சேர்ந்த திரு. K. இளஞ்செழியன், திரு. S. ரவி, திரு. தா. ரவிச்சந்திரன் ஆகியோரும் திருமாந்துறையை சேர்ந்த திரு. R. துரைராஜ், திரு. T. செந்தில், திரு. G. சுகுமார் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். நம் சங்க தீவிர உறுப்பினர் திரு. K. அருள் அவர்கள் தாயார் திருமதி. K. ஜெயகாந்தம் அவர்கள் மறைவிற்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதிய தலைவர் சார்பாக வருகை தந்த கார்குல உறவுகள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி அளிக்கப்பட்டது.

திரு. K. இளஞ்செழியன் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– க. பொற்செழியன், செயலர்.

## தஞ்சாவூர்

சங்க நிர்வாகக் குழு கூட்டம் 15–02–2025 அன்று சங்கத் துணைத்தலைவர் திரு. S.மோகன்குமார் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்தலைவர் திரு. S. ஜெயச்சந்திரன் தலைமை ஏற்க, செயலாளர் திரு. S. மதியழகன் அவர்களால் சென்ற கூட்ட நடவடிக்கைகள் படிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

நமது சங்க உறுப்பினர் திரு. M. ஞானகுருபரன் அவர்களுடைய தந்தை புலவனூர் திரு. T. முத்தையன் திருமதி. சாரதாம்பாள் அவர்களுடைய **90** வயது பூர்த்தி அடைந்த தம்பதியருக்கு சால்வைஅணிவித்து கௌரவிக்கப்பட்டது. **20–10–2024**–ந் தேதி கூட்ட முடிவுக்கேற்ப **80** வயது பூர்த்தி செய்த அனைவரும் பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மகளிர் அணி கூட்டம் மார்ச் மாத **23**–ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவது எனவும், அக்கூட்டத்தை மகளிர் தினமாக கொண்டாடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தஞ்சை நகர கார்காத்தார் சங்க மூலம் அனுப்பப்பட்ட கல்வி உதவித்தொகை மனுக்கள் எட்டும் **(8)** அனுமதிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு உள்ளதற்கு “CREW TRUST”-க்கு தஞ்சை நகர கார்காத்தார் சங்கம் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டது.

திரு. R. சண்முகம், பொருளாளர் நன்றி தெரிவித்தும், நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கிய திரு. S. மோகன்குமார் மற்றும் திருமதி. உஷாராணி அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள கூட்டம் இனிதே முடிவுற்றது.

S. ஜெயச்சந்திரன், தலைவர்.

Cell : 9952564790

## மதுரை :

**16–2–2025** அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் மு. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். முனைவர். K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மாநில துணைத்தலைவர் S. உமையொருபாகம் மற்றும் துணை செயலாளர் N. இராமலிங்கம், S. சுந்தரராஜன் & செயற்குழு உறுப்பினர் R. பசுங்கிளி மகளிர் அணி தலைவி U. குமாரிலெட்சுமி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நமது மூத்த சங்க உறுப்பினர் கூத்தியார்குண்டு தெய்வதிரு. மாணிக்கம் பிள்ளை என்ற சுப்ரமணியன் அவர்களின் மனைவி திருமதி. ஜெயா அவர்களின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நமதுசங்கம்பதிவுசம்மந்தமாகஆலோசனைகள் பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்க பொருளாளர். வழக்கறிஞர். S. முருகன் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன், செயலாளர்.

**9443831474**

## ஈரோடு

சங்க மாவட்ட செயற்குழு கூட்டம் திரு. அ. தேவேந்திரன் மாவட்ட தலைவர் தலைமையிலும் திரு. ச. பூபதி மண்டல செயலாளர் முன்னிலையிலும் **9–2–25** அன்று திரு. E.A. சுதாகர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**24–25**–ம் ஆண்டு சந்தாவை முழுமையாக வசூல் செய்வது எனவும், மாநில மையத்திற்கு அளிக்க இருக்கும் உறுப்பினர் படிவத்தை முழுமையாக்குவது எனவும், ஆண்டு விழாவினை மே கடைசியில் நடத்துவது எனவும், பேமிலி ட்ரீ புத்தகத்தை விரைந்து அச்சிட்டு முடிக்க முயற்சி செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதில் **15** உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். திரு. D. குமார் இணைசெயலாளர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

அ. மதியழகன், செயலாளர்.

# நகர கார்காத்த வேளாளர் சங்கம் சீர்காழி

பதிவு எண்.102/2019

## 21-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர்! வணக்கம்.

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் **21-வது** மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது **15.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை** சீர்காழி, தேர்வடக்கு வீதி **சங்க கட்டிடம் (சி.எம்.டிரஸ்ட்)** தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்குபெற விரும்புபவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ.600/-ஐ** விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **30.05.2025**க்குள் அனுப்பிட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் Nagara Karkatha Velalar Sangam என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடத்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

**கி.ஜெயச்சந்திரன் பிள்ளை,** தலைவர் 63697 29337

**சி.அகோரம்பிள்ளை,** செயலாளர் 94861 94225

**சே.ரவிச்சந்திரன்,** பொருளாளர் 97903 19517

**இராம.முரளி பிள்ளை,** நிறுவனர், சி.எம்.டிரஸ்ட், 94420 85841

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**திரு.கல்.சுகுந்தவனநாதன்**
11, தியாகராஜ நகர்,
சீர்காழி - 609110.
செல்: 94420 83310, 86108 78905

**திரு.S.பிரகாசம்,** M.Com.,
5, R.N.காம்ப்ளக்ஸ், ரயில்வே ரோடு,
கொள்ளிடம் - 609102. சீர்காழி தாலுக்கா
**for GPay** செல் : 7395865318

**தொடர்புக்கான நேரம்: காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை**

## விண்ணப்ப படிவம்

| | |
|---|---|
| பெயர் | ........ |
| ஆண் / பெண் | ........ |
| பிறந்த தேதி | ........ |
| உயரம் (செ.மீ) | ........ |
| நட்சத்திரம் | ........ |
| கோத்திரம் | ........ |
| நிறம் | ........ |
| கல்வித்தகுதி | ........ |
| பணி விபரம் & ஊதியம் | ........ |
| தந்தைபெயர் | ........ |
| பூர்வீகம் | ........ |
| பணி விபரம் | ........ |
| தாயார் பெயர் | ........ |
| பூர்வீகம் | ........ |
| பணிவிபரம் | ........ |
| உடன் பிறந்தோர் | ஆண் ☐ பெண் ☐ |
| விருப்பம் மற்றும் இதர தகவல்கள் | ........ |
| தொடர்பு முகவரி தொலைபேசி உலாபேசி மற்றும் அஞ்சலக குறியிட்டு எண்ணுடன் | ........ |
| மின் அஞ்சல் முகவரி | ........ |

## கல்வி - ஒரு கருத்துப் பரிமாற்றம்

என் அனுபவத்தில் நான் அறிந்து கொண்டவற்றை ஒப்புரவு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். இளம் சிறார்களுக்குக் கல்வி கற்பிப்பது என்பது மனதுக்கு மிகவும் இன்பம் தரும் ஒரு அனுபவம். Pre-Primary, Primary வகுப்புகளின் ஆசிரியர்களுக்கு மிக உயரிய பொறுப்பு உள்ளது. குழந்தைகளின் கள்ளம் கபடமற்ற தன்மை, ஆர்வம், உற்சாகம், அனைத்தையும் அறிந்து கொள்ள துடிக்கும் துடிப்பு என இவைகளை ஒரு சிறிதும் குறையவிடாமல், அவர்களுக்குப் போதிப்பது என்பது ஒரு கலை. இந்த இளம் பருவத்திலேயே அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், தேசபக்தியையும், சமுதாயத்திற்கு கேடு நினையாத நினைப்பினையும், பெரியவர்களிடம் மரியாதையையும் புரியும்படி கற்பிக்க வேண்டியது நமது தலையாய கடமை.

குழந்தைகள் சக்தியின் இருப்பிடம். அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே அமைதியாக இருக்கச் சொல்வது; இதைச் செய், அதைச் செய்யாதே! என கட்டளை இடுவது நமக்குத் தோல்வியையே தரும். அவர்களின் கவனிப்புத் தன்மை மிக குறைந்த நேரமே இருக்கும். அதனால் ½ மணி நேரத்திற்கு ஒரு முறை பாடத்தை (or) விளையாட்டை மாற்ற வேண்டும். 2 வயதில் இருந்து 6 வயது வரை இருக்கும் குழந்தைகளுக்கு கதை கேட்பதிலும், மற்றவர்களைப் போன்று நடித்துக் காண்பிப்பதிலும் ஆர்வம் அதிகமிருக்கும். அதனால் வகுப்பில் Role-Playக்கு சில மணித்துளிகள் செலவிடுவது மிகவும் அவசியம், மேலும் அவர்களின் ஆக்கபூர்வமான சிந்தனையைத் தூண்ட Science Corner, Library போன்றவை Play School-ல் இருப்பது இன்றியமையாததாகும். 5 Cup தண்ணி ஊத்தினா, இந்த mug நிரம்பிவிட்டது என குழந்தை ஓடி வந்து ஆசையாக சொன்னால், அதை அலட்சியம் செய்ய வேண்டாம். அந்த குழந்தைக்கு அது ஒரு பெரிய கண்டுபிடிப்பு. அப்படியா? எங்கே காட்டு! என ஆர்வமாக கேளுங்கள்.

வீட்டிலும், பள்ளியிலும் மொழியைக் கட்டளை இடவும், அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுமே பயன்படுத்தினால், குழந்தைகளும் மற்றவர்களை அதிகாரம் செய்யவே உபயோகிப்பர். மேலும் மற்றவர்கள் கூறுவதைத் தான் செய்யத் தெரியுமே தவிர, தானே ஒரு முடிவு எடுக்க, ஒரு வேலையைச் செய்ய முடியாதவர்களாக வளர வழி செய்து விடும். குழந்தைகளை ஊக்குவிக்கும் எண்ணத்தில், அவர்கள் எதைச்செய்தாலும் புகழாதீர்கள், அது அவர்கள் செய்யும் ஒவ்வொரு சிறிய செயலுக்கும் மற்றவர்களிடமிருந்து கைத்தட்டலையும், பேஷ்! பேஷ்! சபாஷ்! எனும் பாராட்டுகளையும் எதிர்பார்க்க வைத்துவிடும். அவர்களின் சிந்தனைகளை, செயல்களை மதியுங்கள்; பாராட்டுங்கள். (Appreciation is needed but not the praise and prize)

எல்லா குழந்தைகளும் ஒன்று போல் இருப்பதில்லை; வளர்வதில்லை (Physical as well as mental). 5 வயதில் ஒரு குழந்தை எழுத்துக் கூட்டி படிக்கலாமெனில், சில குழந்தைகள் 4 வயதிலேயே படிக்க ஆரம்பிக்கலாம்; சிலர் 6 வயதிலும் ஆரம்பிக்கலாம். அதனால் ஒரு குழந்தையை மற்றொரு குழந்தையுடன் ஒப்பிடுவது சரியல்ல; நல்லதும் அல்ல. 10 வயதில் குழந்தைகளின் மூளை 80% வளர்ந்து விடும். அதனால் அவர்களின் சிந்திக்கும் திறனை இந்த வயதிற்குள் எவ்வளவு விரிவாக்க முடியுமோ, அந்த அளவிற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும் விரிவாக்க முயற்சிக்க வேண்டும். இதற்கு நம் தேர்வு முறையில் மாற்றம் தேவை. மனப்பாடம் செய்வதையும், ஆசிரியர்கள் கொடுத்த கேள்வி பதிலை மனனம் செய்து, ஒரு வார்த்தை கூட பிசகாமல் எழுதுவதும் சிறந்த முறையல்ல. கேள்வித்தாள்களை சிறிது மாற்றி, சிந்தித்து பதில் எழுதுவது போல அமைக்க வேண்டும்.

பெற்றோர்களே! ஏழாம் வகுப்பு வரை குழந்தைகளை வளர விடுங்கள். தேர்வுக்காக பாடங்களைப் படித்து, Rank வாங்குவதை ஊக்குவிப்பதை விடுத்து, அவர்களின் அறிவு விரிய உதவினால் (through reading different articles, newspaper etc. taking part in extra curricular activities, group discussions, debates etc.) அவர்களின் அறிவுத்திறன் மேம்படும். எட்டாவதிலிருந்து அவர்களே நன்கு படிக்க ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் தன் காலில் தானே நிற்க பழகிவிடுவதுடன், வருங்காலத்தில் முன்னேற வழி வகுக்கும். அந்த இளம் வயதில் வீட்டிலும் குழந்தைகளை வளர்ந்தவர்கள் என நினைத்து பொறுப்புள்ள சிறு, சிறு வேலைகளைச் செய்ய அனுமதி அளியுங்கள். அவர்களுடைய விருப்பு, வெறுப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். அவர்கள் எண்ணம் தவறாக இருப்பின், ஏன் தவறு? எப்படி செய்தால் இன்னும் நல்லது என்பதை விளக்கிய பிறகு, அவர்களே ஒரு முடிவு எடுக்க அனுமதியுங்கள்.

குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை மிக, மிக அவசியம். சிறு வயதிலிருந்தே அவர்கள் தன்னம்பிக்கையுடன் வளர வழி செய்யுங்கள். அதுவே வாழ்க்கையில் ஒருவன் வெற்றி பெறுவதற்கு அடிப்படை. குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்ட மூன்று வழிகள் :

**1)** குழந்தைகள் தங்களுக்குத் திறமை உள்ளது என்று உணர வாய்ப்பு. உங்கள் குழந்தைக்கு எந்த துறையில் ஆர்வம் உள்ளதோ, அதனை உரிய முறையில் கற்கவும், தேர்ச்சி பெறவும் உதவுங்கள்.

**2)** குழந்தைகளைத் தகுந்த முறையில் பாராட்டி, ஊக்குவிப்பது சிறு, சிறு தவறுகளை மன்னித்தீர்களானால், மிகக் குறைந்த பெரிய தவறுகளை உங்கள் மகன் செய்வான். ஒரு வேலையைத் திறமையாக, வெற்றிகரமாக முடிப்பதே பெரிய பரிசு. அதனால் அதற்கென்று ஒரு பரிசு கொடுத்து கெடுக்காமல், மனம் திறந்து பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.

**3)** சிறு சிறு பொறுப்புகளைக் குழந்தைகளுக்குத் தருவது, பொறுப்புகளைக் கொடுத்து விட்டு பின்னாலேயே நிற்காதீர்கள்; இப்படிச் செய்; அப்படிச் செய் என்று தொண, தொணக்காதீர்கள். பொறுப்பைக் கொடுக்கும் போதே உங்களுக்கு எப்படி நீங்கள் கொடுத்திருக்கும் வேலை முடிந்திருக்க வேண்டும் என்பதை விளக்கமாக கூறிவிடுங்கள், சிறு தவறு ஏற்பட்டாலும், பொறுத்துக் கொண்டு, நன்றாக செய்துள்ளாய்; இதற்குப் பதில் இப்படிச் செய்திருந்தால், இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என ஆழமாக, அன்பாக எடுத்துக் கூறுங்கள்.

இதற்கு மேல் குழந்தைகள் பதின்பருவத்தில் நுழைகிறார்கள். அவர்களின் ஹார்மோன் மாற்றங்கள், மற்ற அந்த வயது நண்பர்களின் எண்ண ஆக்கிரமிப்பு அதிகமிருக்கும். மேலும் தற்காலத்தில் அலைபேசி, கூகுள், யுட்யூப், இன்டர்நெட் போன்ற பலவிதமாக, மனதை அலையவிடுகிறார்கள். பதின் பருவத்தில் சுயக்கட்டுப்பாடு குறைந்து, உணர்ச்சிகளின் தொகுப்பு அதிகமாக இருக்கும். 13 வயதில் இருந்து 19 வயது வரை Critical teen எனக் கூறுவர். இது ஒரு சிக்கலான பருவம். பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் இணைந்து கையாண்டால், குழந்தைகளை நன் முறையில் வழி நடத்த முடியும். முடிந்த வரை Parents Teachers Meet ஐத் தவறவிடாதீர்கள். இந்த வயதில் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு, அவர்கள் சுதந்திரத்தை எதிர்பார்க்கும் நேரம். தனித்துவத்தை தேடும் நோக்கில், மற்றவர்களிடம் மரியாதையின்றி கோபப்பட்டு நடந்து கொள்ளும் வாய்ப்புகளும் அதிகம். குறுகிய மனப்பான்மை, சுயநலம், பெற்றோருடன் விவாதம் செய்வது, நிகழ்ச்சிகளில் பங்கேற்க மறுப்பது, குடும்பத்தினருடன் பேசுவதைத் தவிர்த்து, அறையில் தனியாக நேரம் செலவிடுதல், விதி முறைகளை மீறுதல் என அவர்களின் செயல்பாடுகள் இருக்கும்.

வீட்டிலுள்ள பதின்பருவத்தினரிடம் பெற்றோர் மனம் விட்டுப் பேசினாலே, இந்த பிரச்சனைகள் சரியாகிவிடும். அப்பருவத்தினரை தோழர், தோழிகளாக பாவித்து நட்பு பாராட்டுங்கள். அவர்களின் நண்பர்கள், அவர்களது பெற்றோர்கள் குறித்து விசாரித்து, அவர்களுடனும் நட்பு பாராட்டுவது நல்லது. நீங்கள் கூறும் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் குறைவாக இருக்கும். மிகவும் பொறுமையின்றி காணப்படும் குழந்தைகளை அன்புடன் அரவணைத்து நல்வழிப்படுத்துங்கள். தற்காலத்தில் இளைஞர்களை விட, பதின் வயதினர் போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

பெற்றோர்கள் அவர்களுக்கு சுதந்திரம் வழங்குவதுடன், கண்காணிக்கவும் வேண்டும். அவர்கள் கோபப்பட்டு கத்தினாலும், நீங்கள் பொறுமையாக கையாள வேண்டும். அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியவுடன், பொறுமையாக பேசிப் புரிய வைக்க வேண்டும். பதின் வயதினருக்கு மட்டுமன்றி, அனைத்து வயதினருக்கும் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவையானது அன்பும், அரவணைப்புமே. அவர்களுக்காக சில மணித்துளிகளையாவது பெற்றோர்கள் செலவிடல் வேண்டும். அவர்களிடம் வெளிப்படையாக உங்கள் எண்ணங்களைக் கூற வேண்டும். வீட்டின் முக்கிய முடிவுகளில் அவர்களை முன்னிலைப்படுத்தலாம். அவர்களை busy ஆக வைத்திருப்பதன் மூலம் தேவையற்ற பழக்க வழக்கங்களில் ஈடுபடுவதைத் தடுக்க இயலும். அவர்களைப் பல விளையாட்டுகள், சங்கீதம், instrumemtal music, நடனம் போன்ற கலைகளில் சிறு வயதிலிருந்தே ஈடுபடுத்தி வரலாம். படிப்பு, கலைகளில் நேரம் செலவழிப்பதில், எதிர்மறை எண்ணங்கள் தோன்ற நேரம் இருக்காது.

பெற்றோர்களே! குழந்தைகள் நமது கண்கள்; நமது செல்வம். அவர்களை நன்முறையில் வளர்த்து, சமுதாயத்திற்கு அளிப்போமாக!

நன்றி! வணக்கம்!

– திருமதி. வனஜா இளங்கோவன்.

## 40-ம் ஆண்டு பொங்கல் விழா கொண்டாட்டம் - 2015.

### பூவிழுந்தநல்லூர் (காட்டுமன்னார்கோயில்)

''வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்''.

– ஔவையார்.

எங்கள் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நிறுவனர் CREW Pvt Ltd. Sri. S. வெங்கடேசன், மற்றும் அவரது துணைவியார் திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன், Sri. A. முருகானந்தம், M.D. & Chief Scientific Officer, Affigenix Bio Solutions Pvt. Ltd., Smt.ராதா செல்வி முருகானந்தம் CEO, INTERLACE INDIA Pvt. Ltd., Smt. பத்மாவதி சிவகுமார் Director, CREW Pvt. Ltd., ஆகிய அனைவருக்கும் பொங்கல் விழா அன்று பூவிழுந்தநல்லூர் கிராம மக்கள் மற்றும் CREW- வில் பணிபுரிவோர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பொங்கலன்று சேலம் கனி குழுவினரின் கரகாட்டம், ஒயிலாட்டம் மற்றும் மயிலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உழவர் திருநாளன்று நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் ராமநாதபுரம் மகிழ் ரிதம்ஸ் (MAHIZH RYTHMS ORCHESTRA) குழுவினரால் நடத்தப்பட்டது.

மாட்டுப் பொங்கலன்று காலை கிராமத்தில் உள்ள அனைவருக்கும் எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் தங்க நாணயங்களை (குலுக்கல் முறையில்) CREW Pvt. Ltd., Chairman மற்றும் அவரது குடும்பத்தினர் வழங்கினார்கள். விழாவிற்கு வந்திருந்த ஏறத்தாழ 10–க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார கிராம மக்கள் அனைவருக்கும் தரமான போர்வைகள், மற்றும் ரொக்கம் ஆகியவை வழங்கப்பட்டன.

உழவர் திருநாளன்று காலை CREW Pvt. Ltd., Chairman மற்றும் அவரது துணைவியார் விளையாட்டு போட்டியினை துவக்கி வைத்தனர். முதலாவதாக நடைபெற்ற கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழல் கோப்பையையும், பரிசுகளையும் உடன் வழங்கினார்கள். தொடர்ந்து குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

அன்று மாலை, திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன், திருமதி. பானுமதி பாலகிருஷ்ணன், திருமதி. அருணா செந்தில்குமார், திருமதி. திரிபுரசுந்தரி பத்மநாபன், மற்றும் திருமதி. விஜயலெட்சுமி ஞானம் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி பரிசு வழங்கும் விழாவை தொடங்கி வைத்தார்கள். சென்னையை சேர்ந்த செல்வி. சாய் ஆத்மிகா இறைவணக்கம் பாடினார். ஆசிரியர் திரு. S. பூங்குன்றன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

CREW Pvt. Ltd Chairman அவர்களின் முன்னிலையில் CREW Pvt. Ltd., M.D., Sri. V.R. செந்தில்குமார் மற்றும் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்கள் Sri. V.M. சம்பந்தன், திருமதி. S. ஜெயலெட்சுமி ஆகியோர் CREW குழுமத்தின் சாதனைகளையும், Chairman அவர்களின் நிர்வாக திறமையினையும், வள்ளல் தன்மையையும் மற்றும் பூவிழுந்தநல்லூர் கிராமத்தின் வளர்ச்சி குறித்தும் சிறப்பாக சொற்பொழிவு ஆற்றினார்கள்.

இறுதியாக, காலை முதல் மாலை வரை நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு CREW Pvt. Ltd., Chairman அவர்களும் மற்றும் அவரது துணைவியாரும் ரூ. 3,75,000/– மதிப்புள்ள பரிசு பொருட்களை வழங்கினார்கள். மேலும் விழா முடிவில் 50 கிராம் தங்க நாணயங்கள், கைப்பேசி மற்றும் 10 பேருக்கு தலா ரூ. 1000/வீதம் குலுக்கல் முறையில் வழங்கப்பட்டது. பின்னர் ஆசிரியர் திரு. R. ஞானம் நன்றியுரை ஆற்றினார்.

மிகவும் சிறப்பான முறையில் பொங்கல் விழாவினை ஏற்பாடு செய்த திரு. S. இராமகிருஷ்ணன் CREW Pvt. Ltd., மற்றும் பூவை. திரு. R. பத்மநாபன் ஆகியோரின் பணி பாராட்டுதலுக்குரியது. சிதம்பரம் திரு. சோமசுந்தரம் மற்றும் அவரது குழுவினர் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மூன்று நாட்களும் தரமான உணவை வழங்கினார்கள்.

இறையருளால் தொடர்ந்து 40 ஆண்டுகளாக CREW Pvt. Ltd., Chairman மற்றும் அவரது குடும்பத்தினர், கிராமத்திற்கு வந்திருந்து, எங்களுடன் தங்கி பொங்கல் விழாவினை சிறப்பாக கொண்டாடி வருவது வாழ்வில் மறக்க முடியாத தருணமாக அமைந்துள்ளது. மேலும் இத்தருணத்தை ஏற்படுத்தி தந்தமைக்கு CREW Pvt. Ltd., Chairman அவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் கிராம மக்கள் மற்றும் விழாக்குழுவினர் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

- B. கலைச்செல்வி பாலகுரு,
கும்பகோணம்.
செல் :9443430811

# தடை உத்தரவுகள்
## INJUNCTION STAY ORDERS

மேலையூர் ச.அன்பழகன்

நீதி மன்றங்களில் வழக்குகள் நடந்து கொண்டிருக்கும் போது வழக்காடுபவர்கள் மற்றும் அவர்கள் வழக்கறிஞர்கள் பேசும் போது அந்த வழக்கில் ஸ்டே கொடுத்து விட்டார்கள் இந்த வழக்கில் இஞ்சங்ஷன் வாங்கி விட்டேன் என்றெல் லாம் சொல்லக்கேட்டிருப்போம். ஸ்டே” என்றும் ” இஞ்சங்ஷன்” என்றும் சொல்வதெல்லாம் நீதி மன்றத்தால் இடப்பட்ட தடை உத்தரவுகள்தான். இரண்டுமே தடை உத்தரவுதான் என்றால் ஏன் தனித்தனி பெயரில் அழைக்கப்படுகின்றன ? இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்பதைப் பற்றி சிறிது பார்ப்போம்.

இரண்டுமே தடை உத்தரவைத்தான் குறிக்கின்றன என்றாலும் இரண்டுமே வெவ்வேறு தடை உத்தரவுகள். அவற்றைப்பற்றி பார்ப்போம்.

**தடை உத்தரவு என்னும் ஸ்டே ஆர்டர்**

ஸ்டே ஆர்டர் என்பது நீதி மன்றம் இட்ட ஒரு ஆணையைக் குறிக்கும். அது இடப்படுவதன் காரணம் இஞ்சங்ஷன் எனப்படும் உறுத்துக்கட்டளையிலிருந்து மாறுபட்டதாகும். அதாவது ஒரு நீதிமன்ற நடவடிக்கையை முழுவதுமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நிறுத்தி வைத்தோ அல்லது இடை நிறுத்தம் செய்தோ நீதி மன்றம் இடும் ஆணையே ஸ்டே ஆர்டர் ஆகும். அத்தகைய ஆணைகள், சட்ட நடவடிக்கையை, ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடைபெறும் வரையிலோ அல்லது குறிப்பிட்ட நிபந்தனை பூர்த்தி அடையும் வரையிலோ நிறுத்தி வைப்பதற்காக இடப்படுகின்றன.

அவ்வாறு ஆணையிடும் நீதி மன்றம் பின்னால் அந்த தடையை நீக்கி விட்டு சட்ட நடவடிக்கை மீண்டும் தொடர உத்தரவிடலாம். பொதுவாக ஸ்டே ஆர்டர் என்பது . 1. தண்டனையைநிறுத்தி வைத்தல் 2. நடவடிக்கையை நிறுத்தி வைத்தல் என இரண்டு வகைப்படும் .

A Stay of Execution is a Stay Order issued by court suspending or delaying the enforcement of ajudgement against a person. Thus, for example, when the court awards damages to a plaintiff, the plaintiff is unable to collect the awarded sum from the defendant due to the Stay Order. This type of Stay Order can also refer to a postponement or halt in the enforcement of a death penalty

**உறுத்துக்கட்டளை INJUNCTION**

இஞ்சங்ஷன் என்னும் உறுத்துக்கட்டளை என்பது, ஒரு நபரையோ அல்லது ஒரு நிறுவனத்தையோ ஒரு குறிப்பிட்ட செயலை செய்யச் சொல்லியோ அல்லது அச் செயலலைச் செய்யாமல் இருக்கச் சொல்லியோ ஒரு நீதி மன்றம் இடும் ஆணை அல்லது நீதிப்பேராணை என சட்ட விளக்கம் கூறுகிறது. இது ஒரு செயலைச் செய்வதற்கோ அல்லது செய்யாமல் இருப்பதற்கோ நீதி மன்றம் கொடுக்கும் சமத்துவமான தீர்வாகும். அத்தகைய ஆணை வழக்கின் தன்மைக்கும் நீதி மன்றத்தின் விருப்பத்துக்கும் ஏற்ப அளிக்கப்படுவதால் வழக்குக்கு வழக்கு மாறு படக்கூடும்

உறுத்துக் கட்டளைக் கோரி விண்ணப்பிக்கும் நபர் ” வாதி ” எனப்படுவார். அவ்வாறு உறுத்துக்கட்டளை என்னும் இஞ்சங்ஷன் வழங்கும் முன்பாக நீதி மன்றம் வழக்கின் வாதியின் உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா, ஈடு செய்ய முடியாத இழப்புகள் ஏற்பட்டுள்ளனவா என்பதை எல்லாம் அறிய வழக்கின் உண்மைத் தன்மைகளை ஆராய்ந்து பார்க்கும். அதாவது அவருக்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவு ஈடு அளித்தாலும் போதாது என்ற நிலையா என்ப்தை அறியும். அத்துடன் நில்லாமல் நீதி மன்றம் நீதியை நிலை நிறுத்தும் முகமாக உறுத்துக்கட்டளையும் இஞ்சங்ஷன் வழங்கும். உறுத்துக்கட்டளை என்பது வாதிக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடு என்று சொல்ல இயலாது.

**உறுத்துக்கட்டளை வகைகள்**

**1. தற்காலிக உறுத்துக்கட்டளை ஆர்டர் 39 சி.பி.சி**

தற்காலிக உறுத்துக்கட்டளை என்பது ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அதன் பல தன்மைகளின் அடிப்படையில்,இருக்கும்நிலையிலேயே ஒன்றை தொடர்வதற்காக வழங்கப்படும் ஒரு வகை தற்காலிக நிவாரணம் ஆகும்

**2. தடுத்து அல்லது கட்டாயப்படுத்தி ஆணையிடுதல்**

வாதிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய ஒரு செயலைச்செய்யக்கூடாது என தடைசெய்தோ அல்லது வேறு ஒரு செயலைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியோ ஆணை பிறப்பித்தல்

**2. மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பிரிவு 38 – 42 ஸ்பெசிஃபிக் ரிலீஃப் ஆக்ட்**

இவற்றில் முதல் கட்டளை ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அதன் பல தன்மைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இரண்டாவதான நிரந்தர உறுத்துக்கட்டளை ஒரு நபரை குறிப்பிட்ட செயலை செய்வதை நிரந்தரமாக தடை செய்யவோ அல்லது கட்டாயமாக செய்ய வலியுறுத்தியோ ஆணை பிறப்பிக்கிறது.

**3. இடைக்கால ஆணை யிடுதல் இரண்டு வகை**

ஒரு மனு விசாரணையில் இருக்கும் போது கொடுக்கப்படும்இடைக்கால ஆணை அந்த மனு விசாரணை முடியும் வரை செல்லு படி யாகும்

ஒரு வழக்கு விசாரணையில் இருக்கும் போது அதில் ஒரு குறிப்பிட்ட மனு விசாரணை முடியும் போது கொடுக்கப்படும் இடைக்கால ஆணை அந்த வழக்கு முடியும் வரை செல்லுபடியாகும் .

கட்டாய உறுத்துக் கட்டளை மேண்டேடரி இஞ்சங்ஷன் என்பது ஒரு குறிப்பிட்ட செயலைக் கட்டாயமாகச் செய்யச்சொல்லும் உத்தரவு ஆகும்.

உ– ம் : மற்றொருவருக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தை இடிக்கச் சொல்லி நீதி மன்றம் உத்தரவிடுதல்.

நிரந்தர உறுத்துக்கட்டளை என்னும் பர்மனண்ட் இஞ்சங்ஷன் வழக்கு முடியும் தருவாயில் வழங்கப்படுகிறது அது ஒரு நிரந்தர தீர்வாக அமையும்

**உறுத்துக்கட்டளைக்குப் பொதுவான உதாரணங்கள்:**

கீழ்க்கண்டவற்றை நிறுத்தச் சொல்லும் உத்தரவுகள், தொல்லை கொடுத்தல், மாசு படிந்த தண்ணீர் விடுதல், மரங்களை வெட்டுதல், சொத்துக்களை அழித்தல் மற்றும் சேதப்படுத்துதல், மற்றவர்களுக்குக் காயம் ஏற்படுத்துதல், பொருட்களை திரும்ப ஒப்படைக்க ஆணை பிறப்பித்தல். நீதி மன்றத்தால் இடப்பட்ட உறுத்துக் கட்டளைகளை கீழ்ப்படியாவிட்டால் நீதி மன்ற அவமதிப்புக்கு ஆளாக நேரிடும்.

**தடை உத்தரவு எந்த நேரங்களில் பயன் படுகிறது**

தடை உத்தரவு என்பது ஒரு நபரைக் கைது செய்வதைத் தடுப்பதையோ அல்லது நீதி மன்ற நடவடிக்கையை நிறுத்தி வைப்பதையோ குறிப்பிடும். தடை உத்தரவினால் பல பயன்பாடுகள் இருந்தாலும் முக்கியமாக ஒரு நீதி மன்றத்தின் தீர்ப்பாணை என்னும் டிக்ரி நிறைவேற்றப்படுவதைத் தடுக்கப் பயன்படுகிறது ஜட்ஜ்மெண்ட் டெப்டார் என்னும் நீதி மன்றத் தீர்ப்புக் கடனாளர் தனக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாணையை எதிர்த்து மேல் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு அந்த தடை உத்தரவு பயன்படும் சி.பி.சி ஆர்டர் 21, ரூல் 26, ஆர்டர் 41 ரூல்5.

ஒரு கிரையத்தை சேல் எதிர்த்து கூட தடை உத்தரவு பிறப்பிக்கப் படலாம் ஆர்டர் 21 ரூல் 59 . ஒரு மாநகராட்சியை எதிர்த்தோ ஆர்டர் 30 வயது வராத மைனர் சம்பந்தப்பட்ட வழக்குகளிலோ ஆர்டர் 32 சம்மரி சூட்ஸ் எனப்படும் சுருக்கமான வழக்குகளிலோ ஆர்டர் 37 இத்தகைய தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம்.

**இஞ்சங்ஷன் எனப்படும் உறுத்துக் கட்டளைக்கும் ஸ்டே எனப்படும் தடை உத்தரவுக்கும் உள்ள வேறுபாடுகள்**

மேலே கூறப்பட்டவைகளிலிருந்து ஒன்று தெரிய வரும் உறுத்துக்கட்டளை மற்றும் தடை உத்தரவு என்ற இரண்டும் மாறு பட்ட சட்ட வார்த்தைகளாகும். இரண்டுமே நீதி மன்ற உத்தரவுகள் தான் என்ற போதிலும் அவற்றுக்கான காரணங்களில் இரண்டும் மாறு படுகின்றன.

" இஞ்சங்ஷன் என்னும் உறுத்துக் கட்டளை என்பது ஒரு தனி நபர் அல்லது நிறுவனத்துக்கு இடப்படுவது. ஆனால் ஒரு தடை உத்தரவு ஒரு நீதி மன்றத்துக்கு இடப்படுவது.

" உறுத்துக்கட்டளை அது இடப்பட்டவுடன் நடை முறைக்கு வருகிறது. ஒரு தடை உத்தரவு அந்த உத்தரவு குறிப்பிட்ட நீதி மன்றத்துக்கு தெரிவித்த பிறகுதான் அமுலுக்கு வரும்.

" ஒரு உறுத்துக்கட்டளை என்பது ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதைத் தடை செய்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது நிறுவனத்தை ஒரு செயலை செய்யச் சொல்லியோ அல்லது செய்வதைத்தடை செய்தோ போடப்படும் நீதி மன்ற ஆணையாகும்.

" உறுத்துக்கட்டளை என்பது வாதியால் சட்டத்தில் ஒரு நியாயமான தீர்வுக்காகக் கோரப்படுவது.

" ஒரு நபரின் செயல்பாடு வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும் என்ற நிலை இருக்கும்போது நீதிமன்றம் விருப்பப்பட்டால் உறுத்துக்கட்டளை இடப்படும்.

" பூர்வாங்கமானது, தடுத்து நிறுத்தச்செய்வது, சட்டப்படி கட்டாயமானது மற்றும் நிரந்தரமானது என உறுத்துக்கட்டளைகள் பல வகைப்படும்.

" இவற்றுக்கு மாறாக தடை உத்தரவு என்பது ஒரு நீதி மன்ற நடவடிக்கையை முழுமையாகவோ அல்லது தாற்காலிகமாகவோ நிறுத்தி வைத்தோ அல்லது தள்ளி வைத்தோ ஒரு நீதி மன்றம் இடும் உத்தரவு ஆகும்.

" நீதி மன்ற விசாரணை எல்லைக்கு ஏற்ப தடை உத்தரவுகள் மாறுபட்டாலும் தடை உத்தரவு முக்கியமாக இரண்டு வகைப்படும். அவையாவன: நிறை வேற்றுதலை நிறுத்தி வைத்தல், நடவடிக்கையை நிறுத்தி வைத்தல்.

" நிறை வேற்றுதலை நிறுத்தி வைக்கும் தடை உத்தரவு என்பது, ஒரு மரண தண்டனை அல்லது வாதிக்கு இழப்பீடு கொடுத்தல் போன்ற, ஒரு நீதி மன்றத்தின் தீர்ப்பினை நிறைவேற்றுவதைத் தாமதப்படுத்துவதையோ அல்லது நிறுத்தி வைப்பதையோ குறிக்கும்.

அதே போல் நடவடிக்கையை நிறுத்தி வைத்தல் என்பது நீதி மன்றத்தின் ஒரு குறிப்பிட்ட சட்ட பூர்வ நடவடிக்கையை நிறுத்தி வைப்பதையோ அல்லது தள்ளி வைப்பதையோ குறிக்கும்.

கோரா.காம், லாயர்ஸ்க்ளப்இந்தியா, மற்றும் டிஃபரன்ஸ் பிட்வீன்.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

## வாழ வைக்கும் வாழை இலை...

நம் பாரம்பரியத்தோடு நெருங்கியத் தொடர்புடையது வாழை இலை. விழாக்கள், திருமணம் உள்ளிட்ட வைபவங்களில் இதில் உணவு பரிமாறுவது மரியாதையின் வெளிப்பாடு. ஹோட்டல்களில் கூட இந்த இலையில் வைத்துக் கட்டித்தரப்படும் உணவுகளுக்கு மவுசு அதிகம். விசேஷங்களில் வாழை இலை விருந்துக்கு என்று தனிப் பிரியர்களே உள்ளனர். பல நூற்றாண்டு கால மரபும் பண்பாடும் இருக்கட்டும், இது சுகாதாரமானது; சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்பதையும் தாண்டி, இதன் மருத்துவக் குணங்கள் மலைக்கவைப்பவை. ஆரோக்கியப் பலன்களை அள்ளித் தருபவை!

தென்கிழக்கு ஆசியாவின் பெரும்பாலான பகுதிகளில் வாழை இலையில் உணவு வைத்து உண்ணவும், விழாக்களில் அலங்காரத்துக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, தென் இந்தியாவில் உணவும், வாழை இலையும் பிரிக்க முடியாதவை; கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்தவை. எவ்வளவோ இலைகள் இருக்கும் போது இதற்கு மட்டும் ஏன் இந்த தனிச்சிறப்பு? இவற்றின் ஆரோக்கிய நன்மைகள் என்னென்ன என்று பார்ப்போம் வாங்க...

**அப்படி என்ன இருக்கிறது?**

இதில் பாலிபினால்கள் (Polyphenols) நிறைந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஈ.ஜி.சி.ஜி. (Epigallocatechin gallate -EGCG) எனும் பாலிபினால் இதில் இருக்கிறது. இது ஓர் இயற்கை ஆண்டிஆக்ஸிடன்ட். காற்று மாசுபாடு, புகைபிடித்தல் போன்றவற்றின் மூலம் நம் செல்களைச் சிதைக்கும் இதய நோய், புற்று நோய், விரைவாக மூப்படைதல் போன்றவற்றுக்கு எதிராக இந்த ஆன்டிஆக்ஸிடன்ட் செயல்படுகிறது. கிரீன் டீயின் இலைகளிலும் இது இருக்கிறது.

**அப்படியே சாப்பிடக் கூடாதா?**

இவ்வளவு நன்மைகள் இருக்கும் இந்த இலையை அப்படியே பச்சையாகச் சாப்பிடலாமே என்று தோன்றலாம். ஆனால் இந்த இலையை அப்படியே சாப்பிட்டால், செரிமானமாகத் தாமதமாகும். சூடான உணவைப் பரிமாறும் போது இந்த இலையில் இருக்கும் பாலிபினால்கள் உணவால் உறிஞ்சப்படுகின்றன. இதன் மூலம் நம் உடலை வந்தடைகின்றன. கூடுதலாக,



பாக்டீரியாக்களுக்கு எதிராகச் செயல்படும் தன்மை (Anti-bacterial Properties), வைட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம், கரோட்டின் ஆகியவையும் இதில் இருக்கின்றன.

**வாழை இலையில் பரிமாறும் உணவைச் சாப்பிடுவதால் கிடைக்கும் பயன்கள் :**

முக்கியமாக, இது மிக ஆரோக்கியமானது. ஏனென்றால், சூடாக இந்த இலையில் உணவு பரிமாறப்படும் போது, இதில் இருக்கும் பல்வேறு விதமான ஊட்டச்சத்துக்கள் உணவோடு கலக்க வாய்ப்பு உள்ளது.

* இதில் உள்ள குளோரோபில் (Chlorophyel) அல்சர் மற்றும் தோல் நோய்கள் வருவதைத் தடுக்கும்

* ‘ஆரோக்கியம் காக்கவும் உதவும்.

* ரத்தத்தைச் சுத்திகரிக்கும்.

* சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கும்.

* சிறுநீர்ப்பை தொடர்பான நோய்களுக்கு நல்ல தீர்வு தரும்.

* நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

* உணவை எளிதில் செரிக்க உதவும்.

**ஏன் பெஸ்ட்?**

சூடான பொருள் இந்த இலையில் பரிமாறப்படும் போது உணவின் சுவை இன்னமும் கூடும். பிளாஸ்டிக் போல் அல்லாமல் இது சுற்றுப்புறத்துக்கு உற்ற, உகந்த தோழன்! இதை உபயோகித்துவிட்டு தூக்கி எறியும் போது நம் வளர்ப்புப் பிராணிகளுக்கும் பயனாகும்.

இயல்பாகவே இது தூய்மையானது, ஆரோக்கியக் கூறுகளை உள்ளடக்கியது. இதில் லேசாக நீரைத் தெளித்துவிட்டே பயன்படுத்தலாம். நாம் அன்றாடம் பயன்படுத்தும் தட்டு கூட சுத்தமில்லாமல் இருக்க வாய்ப்பு உண்டு; வாழை இலை சுத்தமாக இல்லை என்பதற்கு வாய்ப்பே இல்லை.

நச்சுப் பொருள்களோ, வேதிப் பொருள்கள் கலப்போ இதில் இல்லை. நீர்ப்புகாத் தன்மை உடையதாக இருப்பதால், இதில் குழம்பு, ரசம் போன்ற திரவ உணவுகளையும் பரிமாற முடியும்.

**சரும ஆரோக்கியத்துக்கு நல்லது :**

வாழை இலையில் உள்ள புரதச்சத்து, வைட்டமின் சி போன்ற ஊட்டச்சத்துக்கள் கொலாஜன் உற்பத்திக்கு மிகவும் முக்கியமானது.

இது சருமத்துக்கு நெகிழ்ச்சியைக் கொடுத்து சரும சுருக்கங்களைக் குறைக்கும். வாழை இலை சாறு கொண்ட கிரீம்கள் சரும சுருக்கங்களைத் தடுப்பதில் மிகுந்த பயனளிப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

**அழகுக்கு உதவும் வாழை இலை :**

வாழை இலைகளை உணவுக்கு மட்டுமின்றி அழகுக்கும் பயன்படுத்தலாம். வாழை இலையை அரைத்து அதனுடன் தேன் கலந்து முகத்தில் தடவி, 15 முதல் 20 நிமிடங்கள் வரை அப்படியே விடவும், பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவினால் போதும்.

இந்த பேஸ் மாஸ்க் எரிச்சலூட்டும் சருமத்தை ஆற்றுப்படுத்தவும், வயதான சரும அறிகுறிகளை எதிர்த்துப்போராடவும்,சருமவீக்கத்தைக்குறைக்கவும், சருமத்துக்குத் தேவையான நீரேற்றத்தை வழங்கவும், தெளிவான மற்றும் ஒளிரும் சருமத்தைப் பெறவும் உதவுகின்றன.

அதே போல் வாழை இலைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்த நீரில் குளிப்பது ஒட்டு மொத்த சருமத்தையும் மென்மையாக்க உதவும்.

**சமையல் பயன்பாடுகள் :**

உணவை வேக வைக்கவோ அல்லது கிரில் செய்யவோ வாழை இலைகளைப் பயன்படுத்தலாம். இது உங்களின் உணவுக்கு ஒரு தனித்துவமான சுவையை வழங்குவதோடு, தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களை அழித்து ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.

அதுமட்டுமின்றி, வாழை இலைகளில் உள்ள இயற்கையான பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள், தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளிலிருந்து உணவைப் பாதுகாக்கும்.

**மருத்துவ நன்மைகள் :**

வாழை இலையில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் தற்போது வரை பாரம்பரிய வைத்தியங்களில் பயன்படுத்தப்படுகிறது.

மூட்டுகளின் ஆரோக்கியத்தை காக்கவும், வீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வாழை இலையை மூட்டுகளில் கட்டி சிகிச்சை அளிக்கலாம்.

செரிமான மண்டலத்தை சீராக வைத்துக் கொள்ளவும், வயிறு வீக்கம் மற்றும் அஜீரணம் போன்ற குடல் பிரச்சனைகளைப் போக்கவும், ஊட்டச்சத்து உறிஞ்சுதலை ஊக்குவிக்கவும் வாழை இலையில் உணவு உண்பது நல்லது என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

சீரான செரிமானத்துக்கு வாழை இலைகளில் உணவு உண்பதை வழக்கமாக்கிக் கொள்ளலாம்.

**வாழை இலையின் பக்க விளைவுகள் :**

வாழை இலையால் நன்மைகள் இருந்தாலும் சிலருக்கு வாழை இலைகள் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். இதனால் அரிப்பு, சிவந்து போதல் அல்லது சொறி போன்ற பிரச்சனைகள் ஏற்படும்.

சிலருக்கு வாழை இலை சாறு பேஸ்பேக்கு முகத்தில் நேரடியாகப் பயன்படுத்துவது எரிச்சல் அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தலாம். சிலருக்கு வாழை இலையில் உண்பது அரிதாக செரிமான கோளாறுகளை ஏற்படுத்தலாம்.

இலைகளை சரியாக சுத்தம் செய்யாமல் சாப்பிட்டால், அவற்றில் உள்ள அழுக்குகள், பூச்சி கொல்லிகள் உடலுக்குள் சென்று ஆபத்தை ஏற்படுத்தலாம்.

**மேலும் சில பயன்கள் :**

* இந்த இலையைச் சாறாக அரைத்துப் பூசினால் சிறிய தோல் காயங்கள் நீங்கும்.

* பூச்சிக்கடி, தேனிக்கடி, சிலந்திக்கடி போன்றவற்றுக்கு இதன் மருத்துவக் குணங்கள் உதவுகின்றன.

* சரும பிரச்சனைகளான பொடுகுத் தொல்லை சொறி, சிரங்கு மற்றும் தீப்புண் போன்றவற்றிற்கு வாழையிலையை அரைத்து பூசி வந்தால், நல்ல பலன் கிடைக்கும் என கூறப்படுகிறது.

* வடிகட்டிய வாழையிலை சாற்றினை குளிர்பதன பெட்டியில் உறைய வைத்து ஐஸ்கட்டியாக்கி அதனை சருமத்தில் தேய்த்தால் சருமம் மென்மையடையும்.

* வாழையிலையில் அழகை கூட்டும் அலட்டாயின் எனும் சத்து உள்ளதால், அரைத்த வாழையிலையுடன் தயிர் அல்லது பன்னீர் சேர்த்து சருமத்தில் பூசி வந்தால் சரும பொலிவு அதிகரிக்கும்.

* வாழையிலையில் அதிக அளவு காணப்படும் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், சருமப் பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து வயதான தோற்றம் ஏற்படுவதை தடுத்து உதவுகின்றன.

* வாழையிலை சாற்றை தலையில் தடவி குளித்து வந்தால், பொடுகு தொல்லை நீங்கும் என சொல்லப்படுகிறது.

* வெயிலினால் சரும பாதிப்பு ஏற்பட்டு இருந்தால் அந்த இடத்தில் வாழை இலை விழுதை தடவினால் விரைவாகவே குணமாகும்.

**எளிதாக அகற்றுவது :**

பிளாஸ்டிக் தட்டுகளை அவ்வளவு எளிதாக அப்புறப்படுத்த முடியாது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், வாழை இலைகளை அப்புறப்படுத்துவது எளிதான மற்றும் சிரமமில்லாத ஒன்றாகும். மேலும், வாழை இலைகள் விரைவாகவும் இயற்கையாகவும் உடைந்துவிடும். இது எளிதாக அகற்றுவதுடன், கழிவு மேலாண்மை சிக்கல்களை குறைப்பது மட்டுமல்லாமல் தூய்மையான சூழலுக்கு வழிவகுக்கிறது.

இது போன்ற பல்வேறு நன்மைகளைப் பெற பிளாஸ்டிக் தட்டுகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, வாழை இலைகளைப் பயன்படுத்தலாம்.

முடிந்த வரை வாழை இலையைப் பயன்படுத்துவோம்; வாழை இலை வாழ வைக்கும்!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசண்ட் நகர், சென்னை–90.
செல் : 9943702054

உ
அருள்மிகு குளக்குடி மாரியம்மன் துணை



**கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், வடக்குகுளக்குடிகிராமத்தில்நூற்றாண்டுகாலமாக எழுந்தருளி அருள்பாளிக்கும் குளக்குடி மாரியம்மன் பாலாலயம் நடைபெற்று திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருக்குடமுழுக்கு விழா விரைவில் நடைபெற, அன்பர்களும் குலதெய்வ வழிபாட்டினரும் இயன்ற பொருள் உதவி செய்து அம்மன் அருள்பெற வேண்டுகிறோம்.**

தொடர்புக்கு
**S. செந்தில்வேலன்**
**S/o. சங்கர் பிள்ளை**
சாரதாராம் நகர், சிதம்பரம்
செல் : **94433 62757, 99445 32521**

இங்ஙனம்
**திருக்கோவில் நிர்வாகி**
**மற்றும்**
**கிராம பொது மக்கள்**

# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி Durga G |
| படிப்பு | B.E. (CSE) |
| வேலை | Software Engineer, Fidelity Investments, Chennai<br>Rs. 14 Lakhs / PA |
| பிறந்த தேதி | 19.08.1997 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | Sadayam |
| கோத்திரம் | Velaa |
| பூர்வீகம் | நத்தம், மயிலாடுதுறை |
| தகப்பனார் | Ganesan S<br>(Agriculture) |
| தாயார் | Selvi G<br>(Homemaker) |
| முகவரி | 10, North Street,<br>Natham,<br>Sirkazhi Taluk,<br>Mayiladuthurai - 609 118.<br>Cell : 86103 78864, 97512 66577, 84283 62339 |



| | |
|---|---|
| பெயர் | செல்வி R. அனுக்கிருபா |
| படிப்பு | B.Com., MBA., |
| வேலை | TCS, Chennai |
| பிறந்த தேதி | 10.05.1992 |
| உயரம் | 169 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | மருங்குட |
| பூர்வீகம் | ஆக்கூர் |
| தகப்பனார் | A. ராஜாராம் |
| தாயார் | R. கலைச்செல்வி |
| முகவரி | 7/4, கல்லூரி மேற்கு சாலை,<br>அரும்பாக்கம், சென்னை - 600 106.<br>Cell : 97908 80266, 93809 97467<br>044 - 2363 8205 |
| விருப்பம் | ஏற்ற வரன். |



# மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. சித்தார்த் (எ) பரத்** |
| படிப்பு | B.Tech (Chemical), M.S. (Chemical) USA |
| வேலை | Senior Consultant, Brevitas Consulting, Toronto, Canada |
| பிறந்த தேதி | 12.06.1992 |
| உயரம் | 6' |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | அரங்குட |
| பூர்வீகம் | ஆக்கூர் (மயிலாடுதுறை) |
| தகப்பனார் | **J. கோபாலகிருஷ்ணன்** (லேட்) |
| தாயார் | **G. தீபா** (கார்குடி - கும்பகோணம்) |
| முகவரி | 7, பாலமுருகன் தெரு, Flat No. 4, வேலாயுதம் அபார்ட்மெண்ட், வியாசர்பாடி, சென்னை - 600 039. Cell : 98402 74544, 98844 97111 E-mail : parkaveeg@gmail.com |
| விருப்பம் | சமபடிப்பு மற்றும் பணிபுரியும் / பணிக்கு செல்ல விருப்பம் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் சு. சுபாஷ்சந்திரபோஸ்** |
| படிப்பு | M.Sc., B.Ed. (Maths) |
| வேலை | Technology Analyst, Infosys Limited, Chennai Rs. 4,80,000/PA |
| பிறந்த தேதி | 14.09.1996 |
| உயரம் | 170 cm |
| நட்சத்திரம் | அஸ்தம் |
| கோத்திரம் | இறையுட |
| பூர்வீகம் | சத்தியவாடி - விருத்தாசலம் |
| தகப்பனார் | **தி. சுரேஷ்** |
| தாயார் | **சு. ரமா (எ) ஜெகதா** (கீழ்நத்தம் - சிதம்பரம்) |
| முகவரி | 2/8, பிள்ளையார் கோவில் தெரு, சத்தியவாடி (PO), விருத்தாசலம் (Tk), Cell : 88703 01558, 98430 52728 |
| விருப்பம் | பொருத்தமான வரன். |

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் ந. வசந்தகுமார் |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | IT Co-ordinator, O/o. Director of Medical and Rural Health Services, Chennai<br>Rs. 3 Lakhs / PA |
| பிறந்த தேதி | 17.03.1996 |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | ஆலத்துட |
| பூர்வீகம் | சேந்தங்குடி, மயிலாடுதுறை |
| தகப்பனார் | S. நடராஜன்,<br>நிர்வாக அலுவலர் (ஓய்வு) (சுகாதாரத்துறை)<br>மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை |
| தாயார் | N. நிர்மலா (இலையூர், குடவாசல்) |
| முகவரி | நெ. 67, துர்கையம்மன் கோவில் தெரு,<br>சேந்தங்குடி, மயிலாடுதுறை<br>Cell : 97151 69925 / 94425 27760 |
| விருப்பம் | படித்த / பணியில் உள்ள / வேலைக்கு செல்ல விருப்பமுள்ள பெண். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. குமரகணேஷ் |
| படிப்பு | DEEE |
| வேலை | தனியார் நிறுவனம்<br>Rs. 30,000/- + Rs. 50,000/- PM |
| பிறந்த தேதி | 23.12.1998 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | செம்புதரிய |
| பூர்வீகம் | சிதம்பரம் |
| தகப்பனார் | K. சுவாமிநாதன் |
| தாயார் | S. செல்வி (மயிலாடுதுறை) |
| முகவரி | 254, 11வது தெரு,<br>ஸ்ரீ சண்முகா நகர்,<br>மண்ணிவாக்கம்,<br>சென்னை - 600 048.<br>Cell : 98419 98551, 88254 00352 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. கௌசிக் |
| படிப்பு | B.Tech (Civil), MBA, |
| வேலை | Sr. Project Engineer, Doha, Qatar |
| பிறந்த தேதி | 21.05.95 |
| உயரம் | 181 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | மழவராயநல்லூர், சிதம்பரம் |
| தகப்பனார் | V. சங்கர், தலைமை மருந்தாளுநர் |
| தாயார் | S. வித்யா (இல்லத்தரசி - பாலாகுடி) |
| முகவரி | 53, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம் - 608 001. Cell : 94862 23517, 70100 41488 |
| விருப்பம் | சமபடிப்புடன் வெளிநாட்டில் பணியுரிய விருப்பமுள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் Dr. V. ஸ்ரீராம் |
| படிப்பு | M.B.B.S., M.D. (Gen. Med.) Presently doing II Year |
| பிறந்த தேதி | 21.12.1995 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | கேட்டை |
| கோத்திரம் | நெப்புகுட |
| பூர்வீகம் | பூம்புகார், மேலையூர் |
| தகப்பனார் | N. Venkatachalam, B.E., D.G.M. (Retired), NLC India Ltd., Neyveli |
| தாயார் | K. Latha, B.Sc. (CS), M.B.A., M.C.A., Data Supdt., DDE, Annamalai University |
| முகவரி | No. 2/91, சீனிவாசா கார்டன், C. கொத்தங்குடி, பொன்மணி அரங்கம் அருகில், சிதம்பரம் - 608 002. Cell : 94432 39478, 63793 81963 |
| விருப்பம் | Fair looking disciplined girl. Preferable Post Graduate Degree in Medical Field. |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் விக்னேஷ் S. |
| படிப்பு | B.Tech., M.S (USA) |
| வேலை | Software Engineer, USA |
| பிறந்த தேதி | 22-06-1998 |
| உயரம் | 5' - 11" |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | பல்லவராய |
| பூர்வீகம் | மேலையூர், பூம்புகார் |
| தகப்பனார் | செந்திற்குமார் S. |
| தாயார் | மேகலா S. (மயிலாடுதுறை) |
| முகவரி | 118, 2வது தெரு, ராம் நகர் வடக்கு விரிவு, வேளச்சேரி, சென்னை - 42. தொடர்புக்கு - திரு. திருஞானசம்பந்தம் (தலைமையாசிரியர் - ஓய்வு) Cell : 95008 88688 |
| விருப்பம் | அமெரிக்காவில் படிக்கும் அல்லது பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் P. ஸ்டாலின் |
| படிப்பு | B.E. (Civil) |
| வேலை | Project Engineer, SOBHA Ltd., Bengaluru Rs. 6,00,000/PA |
| பிறந்த தேதி | 16.03.1995 |
| உயரம் | 176cm |
| நட்சத்திரம் | பூரம் |
| கோத்திரம் | ஒகலுட |
| பூர்வீகம் | அவளிவநல்லூர், வலங்கைமான் (Tk) |
| தகப்பனார் | S. புஷ்பநாதன், M.A., துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு) |
| தாயார் | P. இந்திராணி (இல்லத்தரசி) மாடாகுடி, கும்பகோணம் Tk. |
| முகவரி | 86, செந்தமிழ் நகர், வலங்கைமான் Po & Tk., திருவாரூர் Dt. - 612 804. Cell : 94436 78542, 96008 48462 |
| விருப்பம் | படித்து பணியில் உள்ள (அ) படித்து பணியில் இல்லாத வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் KUMARAN .S |
| படிப்பு | B.E. (Computer Science) |
| வேலை | Technical Lead @ Synechron, Chennai Rs. 29,00,000 / PA |
| பிறந்த தேதி | 11.10.1995 |
| உயரம் | 6' - 2" |
| நட்சத்திரம் | Barani |
| கோத்திரம் | Paguvuda |
| பூர்வீகம் | Mayiladuthurai |
| தகப்பனார் | Senthilvelan (Late) |
| தாயார் | Lalitha (Kesingan) Home Maker |
| முகவரி | 2, South Street, Thiruindalur, Mayiladuthurai Cell : 75981 79139 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் A. அஜீத்குமார் |
| படிப்பு | +2 Dip in E.C.E., |
| வேலை | Veeyes Alloys Pvt. Ltd., Final Inspection Department Quantity |
| பிறந்த தேதி | 30.05.1997 |
| உயரம் | 6' |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | கடமுடையான் |
| பூர்வீகம் | சேத்தூர் |
| தகப்பனார் | V. அன்புபிள்ளை |
| தாயார் | A. கிரிஜா (சேத்தூர்) |
| முகவரி | கீழத் தெரு, 26, சேத்தூர் அஞ்சல், மயிலாடுதுறை மாவட்டம். Cell : 97900 62070, 97913 42461 |
| விருப்பம் | நல்ல வரன். |



# வாழ்க மணமக்கள்













# வாழ்க மணமக்கள்









மணமக்கள்

**K. சிவக்குமார்**, B.Tech, EEE - **S. ஜோதிவர்ஷினி**, B.Tech., CSE AI/ML

மண நாள் :

**16-02-2025, ஞாயிற்றுக்கிழமை**

**சிக்நேச்சர் திருமண மஹால்,** மயிலாடுதுறை.

**15–02–25** அன்று நடைபெற்ற திருமண வரவேற்பு மற்றும் **16–02–25** அன்று நடைபெற்ற திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி விழாவினை சிறப்பித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**மணமகன் பெற்றோர் :**
**கண்ணன் .S**
**அபிராமி .K**
ராஜகீழ்ப்பாக்கம்
சென்னை–73.

**தாத்தா – பாட்டி**
திரு. **ப. வரதராஜன் - கல்யாணி**
திரு. **R. சுவாமிநாதன் - மங்களம்**

**மணமகள் பெற்றோர் :**
**ஷண்முகராஜா .R**
**அனிதா .S**
செம்பாக்கம்
சென்னை–73

**தாத்தா – பாட்டி**
திரு. **இளந்தோப்பு சுப்பிரமணியன்**
திருமதி. **வனஜா ராமதாஸ்**

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் K. பிரவீன் குமார் |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | NTT Data Business Solutions, Bangalore |
| பிறந்த தேதி | 13.09.1990 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | திருவாதிரை |
| கோத்திரம் | பெண்ணாகடம் |
| பூர்வீகம் | அதிமானபுருஷன், மயிலாடுதுறை |
| தகப்பனார் | P. கிருஷ்ணமூர்த்தி (Late) |
| தாயார் | K. ராஜி (எ) சேது<br>திருச்சிற்றம்பலம், மயிலாடுதுறை |
| முகவரி | No. 2/122, வெள்ளாழத் தெரு,<br>அதிமானபுருஷன், காளி அஞ்சல்,<br>மயிலாடுதுறை<br>Cell : 78250 01437, 82174 57440 |
| விருப்பம் | IT துறையில் பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் கா. வருண் நேரு |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | Specialist - Software Engineering<br>L T I Mindtree, Chennai<br>Rs. 14.5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 22.11.1986 |
| உயரம் | 166 cm |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | எரவுட |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | மு. கார்த்திகேயன் |
| தாயார் | கா. தனலட்சுமி<br>(செந்துறை) |
| முகவரி | 174/2, கொத்தட்டை ரோடு,<br>இறையூர் – 606 111.<br>கடலூர் மாவட்டம்<br>Cell : 98844 91678<br>E-mail : dhanamkarthi76@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் K. PRAVEEN |
| படிப்பு | B.E. (Mech), MBA., |
| வேலை | Component Engineer,<br>(Flex India, Tharamani)<br>Rs. 4.2 Lakhs/PA |
| பிறந்த தேதி | 20.09.1998 |
| உயரம் | 167 cm |
| நட்சத்திரம் | Uthiram - 2 Paadham |
| கோத்திரம் | Nannuda |
| பூர்வீகம் | Meyyathur, Kumaratchi |
| தகப்பனார் | KANNAN, Manager in Private Company |
| தாயார் | KAVITHA, Pennadam |
| முகவரி | 1/200, Shakthi Avenue,<br>F1, Shakthi Enclave,<br>Gerugambakkam,<br>Chennai - 600 128.<br>Cell : 98417 77881, 98407 73713 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. மோகனசுந்தரம் |
| படிப்பு | M.Sc., (Computer Science)<br>Gold Medal |
| வேலை | CTS, Bangalore |
| பிறந்த தேதி | 23.01.2000 |
| உயரம் | 184 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | வில்வராய |
| பூர்வீகம் | பூம்புகார் |
| தகப்பனார் | R. சோமசுந்தரம் Teacher |
| தாயார் | S. கோமதி<br>நெடுந்தெரு, பாபநாசம் |
| முகவரி | 1/261, வெள்ளையனிருப்புத் தெரு,<br>பூம்புகார், சீர்காழி (Tk),<br>மயிலாடுதுறை (Dt)<br>Cell : 94425 87294, 89396 17585 |
| விருப்பம் | வேலையில் உள்ள வரன். |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி M. தீபதாரணி |
| படிப்பு | B.E. (ECE) |
| வேலை | LTI Mindtree, Chennai<br>Rs. 16.5 Lakhs/PA |
| பிறந்த தேதி | 10.11.1996 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | சுவாதி |
| கோத்திரம் | களப்பாள |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | G. முருகேசன், Design Engineer, Oragadam |
| தாயார் | P. நிர்மலா, ஆசிரியை<br>அரசு மேல்நிலைப் பள்ளி<br>பள்ளிக்கரணை, சென்னை - 100. |
| முகவரி | 1/980, சௌமியா நகர்,<br>பெரும்பாக்கம், சென்னை - 600 100.<br>Cell : 94444 25342 (Whatsapp)<br>81225 88342 |
| விருப்பம் | சமபடிப்பு, சமவேலையில்,<br>சென்னையில் பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வி S. NIVEDHITHA |
| படிப்பு | MCA |
| வேலை | Software Engineer at TCS, Chennai<br>Rs. 10,00,000/PA |
| பிறந்த தேதி | 06.04.1999 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | Kettai |
| கோத்திரம் | Paguvuda |
| பூர்வீகம் | Mayiladuthurai |
| தகப்பனார் | Senthilvelan (Late) |
| தாயார் | Lalitha (Kesingan)<br>Home Maker |
| முகவரி | 2, South Street,<br>Thiruindalur,<br>Mayiladuthurai<br>Cell : 75981 79139 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. VIVEKANANDHAN |
| படிப்பு | B.E (Mechanical) |
| வேலை | Working in private company<br>Rs. 50,000/pm |
| பிறந்த தேதி | 06.12.1995 |
| உயரம் | 190 cm |
| நட்சத்திரம் | Rohini |
| கோத்திரம் | Thenavaraya |
| பூர்வீகம் | Kavalagidi |
| தகப்பனார் | S. SELVARAJ |
| முகவரி | 53, Anandeswaran Koil Street,<br>Chidambaram.<br>Cell : +91 93445 79760 |
| விருப்பம் | Any Degree and Good Habits and Fairness Bride. |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் R. ராஜேஷ்குமார் |
| படிப்பு | B.E. (Aeronautical) |
| வேலை | Wipro, Chennai<br>Rs. 70,000/PM |
| பிறந்த தேதி | 27.05.1994 |
| உயரம் | 176 cm |
| நட்சத்திரம் | பூராடம் |
| கோத்திரம் | வளமுடையான் |
| பூர்வீகம் | இளையபெருமாள்நல்லூர் |
| தகப்பனார் | A. இராஜாராமன் (லேட்) |
| தாயார் | R. இராசாத்தி (இல்லத்தரசி) |
| முகவரி | 53/19, சன்னதி தெரு,<br>ஜெயங்கொண்டம் - 621 802.<br>Cell : 78454 51327, 88255 58292 |

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி. **கமலா அம்மாள்**

மறைவு : 21–12–2024

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், உடையார் குடியைச் சேர்ந்த எறவுட திரு. **அறவாழி** (எ) **வைத்தியநாதன் பிள்ளை** அவர்களின் மனைவியும் எனது தாயாருமான திருமதி. **கமலா** அவர்கள் 21–12–2024 சனிக்கிழமை இரவு இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகள் : **ரா. ஷர்மிளா**

மருமகன் : **ந. ராம்குமார்**

பேரன் : **ரா. கிருத்திக்** (எ) **ஆதவ்**

8508518566 – 8946063816

புதுப்பத்தூர், திருவாரூர் மாவட்டம்,

கணவர் :

திரு. **அறவாழி** (எ) **வைத்தியநாதன் பிள்ளை**

உடையார்குடி.

9500890289

மற்றும் **உறவினர்கள், நண்பர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி

சூரியநாராயணார் கோவில் தெய்வத்திருவாளர்கள் திரு. இராஜமாணிக்கம் பிள்ளை – அன்னம்மாள் ஆச்சி அவர்களின் அருமை மகளும், மோவூர் தக்கனுட தெய்வத்திருவாளர்கள் ரெ. மாணிக்கம் பிள்ளை – அன்னம்மாள் ஆச்சி அவர்களின் மருமகளும், தெய்வத்திரு. மா. சோமசுந்தரம் பிள்ளை (Southern Railways) அவர்களின் துணைவியாருமாகிய திருமதி. **S. சரோஜா அம்மாள்** அவர்கள் 04–02–2025 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

தோற்றம் :
16–12–1939



மறைவு :
04–02–2025

அனைவருக்கும் என்றும் தாய் அன்புடன், தன்னிகரற்ற பொறுமையுடன், ஆசீர்வாதங்களே இன்சொல்லாய், மிக்க மனித நேயத்துடன், நற்பண்புகளுக்கு உறைவிடமாய், வழிகாட்டியாய் வாழ்ந்து, இறைவனடி சேர்ந்த தாங்கள் என்றும் எங்களுக்கு வழிகாட்டி, ஆசீர்வதிக்க வேண்டி பிரார்த்திக்கும் – பிரிவால் வருந்தும்

**மகள் - மருமகன்**

**S. உஷா ராணி – சாரங்கபாணி**
திருவரங்கம்

**S. பத்மாவதி – சுப்பராயன்**
தஞ்சாவூர்.

**மகன் - மருமகள்**

**S. கிருஷ்ணமூர்த்தி** (UK)
**K. விஜயலஷ்மி**
கீழ கொண்டயம் பேட்டை, திருவானைக்கோவில்.

**பேரன் - பேத்திகள்**

**K. அஷ்வின் குமரன்** (UK)
திருமதி. **தன்யா**
**K. அருண் சுந்தர்** (UK)
**S. மகேஷ்வரன்** (USA)
திருமதி. **லஷ்மி பிரியா**

**கொள்ளு பேர குழந்தைகள்**

**M. மாதினி** (USA)
**M. மாதங்கி** (USA)
**A. மாயா லக்ஷ்மி** (UK)

தொடர்பு எண் : 9940742112, 9894527773

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்த நாள்
16.1.1950

உதிர்ந்த நாள்
24.3.2010

மயிலாடுதுறை கணபதி நகர் திரு. D. சுப்ரமணியன் அவர்களின் அருமைத் துணைவியாரும் மாநில கார்காத்த வேளாளர் சங்கத்தின் மகளிர் உறுப்பினரும், மயிலாடுதுறை நகர கார்காத்தார் மகளிரணித் தலைவியும் எங்களது பாசத்திற்குரியவருமான திருமதி. **ஜெயலட்சுமி** அவர்கள் 2010 ஆம் ஆண்டு மார்ச் 24ம் தேதியன்று மறைந்தார்கள்.

15 ஆண்டுகள் உருண்டோடிவிட்டது நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து. ஆயினும் எங்களது நெஞ்சங்களில் நீங்கள் நீக்கமற நிறைந்துள்ளீர்கள். என்றென்றும் நீடிக்கும் இந்நிலை.

*மகள்*
திருமதி. **P. ஆண்டாள்**
*மருமகன்*
B. **பாரிவேந்தன்,** B.E.
பேரன்
**P. கௌதமன்**

*மகள்*
திருமதி. **R. கிருத்திகா**
*மருமகன்*
திரு. **S. ராஜசேகர்** M.D.S.
பேத்தி
**R.K. தீபிகா**

## வார்த்தைகள் பிரயோகம்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

வார்த்தைகள் மகத்துவமானவை, வார்த்தைகளுக்குள் ஒரு உலகம் இருக்கிறது. நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் பலருக்கும் நன்மை பயக்கக்கூடிய வார்த்தைகளா என்பதை சுயபரிசீலனை செய்வது நல்லது. வார்த்தைகளில் பல்வேறு வகைகள் இருந்தாலும் அவற்றினை உற்சாகப்படுத்தும் வார்த்தைகள், தன்னம்பிக்கையூட்டும் வார்த்தைகள், புண்படுத்தும் வார்த்தைகள் என முக்கியமான மூன்றாக வகைப்படுத்தலாம். நம் செயல்பாடுகளுக்கும், சிந்தனைக்கும், மனமாற்றத்துக்கும் சிறு வார்த்தையே தூண்டுதலாக இருக்கும். எப்போதும், எந்தச் சூழலிலும் நாம் தேர்ந்தெடுக்கும் வார்த்தைகள் முக்கியமானவை. சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்ற பொன்மொழிக்கு ஏற்ப நல்லதாக நாம் கூறும் சிறு வார்த்தை, மிகப்பெரிய எதிர்மறை செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் சக்தி கொண்டது. குறிப்பாக, குழந்தைகளிடம் பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகம், அவர்களின் மன நிலையை எளிதில் மாற்றக்கூடியவை.

ஏதேனும் ஒரு சிறு முயற்சியில் ஈடுபடும் பலரும், 'நான் நினைக்கும் காரியம் எப்போதும் நிகழாது. அவற்றுக்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்தாலும் நினைத்தபடி நடக்காது' என்று கூறுவதுண்டு இவர்கள் எளிதில் எதிர்மறை மனநிலைக்கு வந்து விடுவார்கள். அப்படியானவர்களைச் சுற்றி எப்போதும் நேர்மறையான வார்த்தைப் பயன்பாடுகளில் கவனம் வேண்டும். நமது வார்த்தைகளைக் கேட்டு குழந்தைகள் வளர்கிறார்கள். கேட்கும் அனைத்து வார்த்தைகளும், அவர்களின் மனதில் எளிதில் பதிந்துவிடும் பின்னர், அவையே அவர்களின் இளமை காலத்தையும் வழி நடத்தும்.

பரம்பரை நம்பிக்கை ஒன்று நமது நாட்டில் உண்டு. நம்மைச் சுற்றி கண்ணுக்கு தெரியாமல் தேவதைகள் பறந்து கொண்டிருப்பார்கள். நாம் எதையாவது உணர்ச்சி வசப்பட்டு சொன்னால் அப்படியே ஆகட்டும் என்று விடுவார்கள். அது நடந்துவிடும் எனவேதான் நல்ல விஷயங்களைப் பற்றியே பேசுங்கள் என்கிறார்கள் பெரியவர்கள். மற்றவர்களை நோக்கி தகாத வார்த்தைகளைச் சொல்லித் திட்டிய எவரும் தன்னளவில் நலமாக இருந்ததாக சரித்திரம் கிடையாது. ஆகவே நல்ல வார்த்தைகளை பேசுங்கள் நீங்கள் நல்லவர்களாக மாறுவீர்கள். நாகாஸ்திரம் என்பது நாக்கில் இருந்து வரும் நஞ்சு தடவிய வார்த்தைகளே என்பதை உணர வேண்டும். தீமை தரும் வார்த்தைகளை ஒரு காலமும் உணர்ச்சி வசப்பட்டு சொல்லக்கூடாது. சொன்னால் இதயத்தின் ஆழத்தில் விழுந்து அது தீமைகளை விளைவிக்கும் இயல்பாகவோ எதிர்மறையாகவோ உணர்ச்சிவசப்பட்டு பேசினால் அதை கட்டளையாக எடுத்துவிடும் ஆழ்மனம். ஆகவே உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை விடவேண்டாம்.

உடல் மனதைச் சீரழிப்பதைவிட மனம் உடலைச் சீரழிப்பதே அதிகமாக நடைபெறுகிறது. எனவேதான் மனத்தை எரிச்சலடையவும் வெறுப்படையவும் வைக்கக்கூடாது. உடலை ஆராதிக்க வேண்டும். உடம்பை வளர்த்து உயிர் வளர்க்க வேண்டும். உடம்பு இழுக்கல்ல. உடலுக்கு மனமும் மனதிற்கு உடலும் ஆதாரம் ஆனால் இரண்டுக்குமே நல்லெண்ணங்களே ஆதாரம் என்பதை என்றும் மறக்கக்கூடாது எரிச்சல் தரும் வார்த்தைகளை உடல் உறுப்புக்களின் மீது செலுத்தவே கூடாது. அவன் வந்தாலே தலைவலிதான் என்று கூறினால் அவன் வரும்போது தலைவலி வந்துவிடும். நமது உற்சாகம் குன்றிய வார்த்தைகளை உடல் உறுப்புக்கள் சுமக்கும்படியாக பேசக்கூடாது. அவன் பேசுவதைக் கேட்டால் இரத்தம் கொதிக்கிறது என்று நினைத்தால் அவ்வளவுதான் இரத்தக் கொதிப்பு தானாக வந்துவிடும்.

நாம் சாதாரணமாக பேசுகின்றபோது நமது வார்த்தைகள் தொண்டையில் இருந்து வெளிப்படுவதுபோல் தோன்றினாலும் அது முற்றிலுமாக அங்கே இருந்து வருவதில்லை. அடிவயிறு மார்பு மற்றும் தொண்டையில் இருந்து கிளம்புகிற உத்வேகம் தான் வார்த்தைகளாக வெளிவருகிறது. ஒரு வார்த்தை எதிலிருந்து கிளம்புகிறதோ அதை பொறுத்து அந்த வார்த்தைக்கு வலிமை வந்தடைகிறது. உதாரணமாக அன்றாட நடப்புகளை பேசுகின்ற போது நமது மனம் நாலாவிதமான சிந்தனைகளுக்கு ஆட்பட்டு கிடக்கிறது. அதனால் வாய் ஒன்று பேசினாலும் மனது மற்றொன்றிய இருக்கிறது. இந்த பேச்சில் ஆழமிருக்காது.

அவ்வளவாக அர்த்தமிருக்காது. இதனால் எந்த பயனும் இருக்காது. நாம் ஆசை வசப்படும்போது, எதையாவது ஒன்றை எதிர்பார்த்து பேசும்போது அந்த வார்த்தை மார்பிலிருந்து கிளம்புகிறது. இதில் தடுமாற்றம் இருந்தாலும் குறிக்கோளை அடைகின்ற உறுதி இருக்கும் இத்தகைய உறுதிமிக்க வார்த்தைகள் எப்போதெல்லாம் நம்மிடமிருந்து புறப்படுகிறதோ, அப்போதெல்லாம் நாம் எதிர்நோக்கும் காரியங்கள் ஓரளவு வெற்றியாகவே முடியும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு சமயத்தில் தான் அடிவயிற்றில் இருந்து அதாவது நாபியில் இருந்து வார்த்தைகள் புறப்படுகின்றன. அதீதமான சந்தோஷமோ, சோகமோ அல்லது இவைகளை போன்ற உணர்ச்சி பொங்கும் சூழலில் தான் இங்கேயிருந்து சொற்கள் பிறக்கின்றன. அப்படி பிறக்கின்ற சொற்கள் மந்திரமாகவே ஆகிவிடுகிறது. அந்த சொல் எதை நோக்கி பிரயோகம் செய்யப்படுகிறதோ அங்கே அது நிச்சயமாக பலித்துவிடுகிறது அல்லது செயலாக நடந்து விடுகிறது. இப்படி நாபியில் இருந்து புறப்படுகிற வார்த்தை தான் அமங்கலமாக இருந்தால் சாபம் என்றோ மங்களமாக இருந்தால் வரம் என்றோ அழைக்கப்படுகிறது. எனவே முனிவரின் வார்த்தைகள் சாபமாக, வரமாக இருப்பதற்கு இதுதான் மூலக்காரணமாக இருக்கிறது. இப்படி நாபியிலிருந்து சாதாரண மனிதர்களுக்கு அடிக்கடி சொற்கள்பிறக்காது.முறைப்படி மூச்சுப்பயிற்சி செய்தவர்களுக்கே இது அவ்வப்போது சாத்தியமாகும். அதனால்தான் எதிரியின் ஆயுதப்படைக்கே அஞ்சாத அரசர்கள், முனிவர்களின் சாபங்களுக்கு பயந்தனர். முனிவர்களும் அர்த்தமில்லாமல் சுயநலத்திற்காக யாரை வேண்டுமானாலும் சபிப்பதில்லை. இது முனிவர்கள் மகான்கள் சம்பந்தப்பட்ட விஷயம்.

முனிவர்கள் சாபம் கொடுக்கலாம் அதேபோல் சாதாரண மனிதர்களும் சாபம் கொடுக்க முடியுமா? வெந்ததை தின்று வேளை வந்தால் சாகும் சாதாரண மனிதனுக்கு கூட நாபியிலிருந்து வார்த்தைகள் வருமா? என்று சிலர் நினைக்க கூடும். நமது இந்து மத ஞானிகள் யோக பயிற்சி செய்து பெறுகின்ற சித்துக்களை உண்மையான பக்தியின் மூலமும் பெறலாம் என்கிறார்கள். அதாவது யோகாப்பியாசம் என்பது வெற்றி அடையும் போது மனதை குவிய செய்து விடுகிறது. அதன் மூலம் சித்துக்கள் வந்தடைகிறது. அதே போலவே உணர்வுகள் கூர்மையாகி குவியும்போது மனதும் ஒருநிலைப் பட்டுவிடுகிறது. அதாவது பக்தி காதலாகி கசிந்துருகி கண்ணில் நீர் மல்க நிற்கும்போது மனம் குவிந்து சித்துக்கள் கைவந்துவிடுகிறது. இதே போல் தான் ஒரு சாதாரண மனிதன் இன்னொரு மனிதனால் தேவையற்ற முறையில் அல்லது அதர்ம வழியில் தாக்கப்படும்போது தன்னையும் மீறிய சோகத்திற்கு ஆட்படுகிறான். அந்த நேரம் அவனது மனம் கடந்தகாலம், எதிர்காலம் ஆகிய இரு காலங்களையும் மறந்து நிகழ் காலத்திலேயே நிலைத்துவிடுகிறது. சுற்றுப்புற சூழல்கள் அனைத்தும் மறந்து தனக்கு ஏற்பட்ட அதர்மத்தை மட்டுமே நினைத்து நினைத்து மனம் உருகி நிலைப்பட்டு விடுகிறது. அப்போது அவனிடமிருந்து வருகின்ற வார்த்தை அடிவயிற்றிலிருந்து ஒரு ஓநாயின் ஓலம் போல வெளிப்பட்டு எதிராளியை தாக்குகிறது. எதிரியை மட்டுமல்ல எதிரியின் வம்சத்தை கூட தாக்குகின்ற அளவுக்கு அந்த வார்த்தை சக்தி மிகுந்த சாபமாகிவிடுகிறது. இதனால் பல தலைமுறைகள் காரணமே இல்லாத சோதனைகளை சந்தித்து வாழ்வில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலை உள்ளது.

கன்னடத்தில் ஒரு பழமொழி உள்ளது. யாரோ ஒருவர் ஏதாவது தவறு செய்து பிறர் அதைப் பற்றிப்பேசினால், அதன் எதிர்மறையான தாக்கம் தவறு செய்தவர்களை விட அதைப் பற்றி பேசியவர்களைத் தான் அதிகம் பாதிக்கும். அதனால் உங்களைப் பற்றி பேசுபவர்கள் உங்கள் சுமைகளை சுமந்து கொள்ளட்டும். யாரோ ஒருவர் உங்களைத் திட்டினால், அவர்கள் வாயில்தான் மாசுபடிகிறது. அது உங்கள் பிரச்சனை கிடையாது. இன்னொருவர் சொல்வதும் செய்வதும் சிந்திப்பதும் உங்களை பாதிக்கக்கூடாது. உங்கள் சிறந்ததையே நீங்கள் எப்போதும் கொடுக்கிறீர்கள் என்றால், அவர்கள் என்ன சொன்னாலும் அதை உங்களால் ஊடுருவிப் பார்க்க முடியும். அதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதை உங்களுக்கான ஆலோசனையாக எடுத்துக்கொள்ளலாம். மற்றதை விட்டுவிடலாம்.

இக்காலத்தில் வெளிவரும் சினிமா மற்றும் வெப்–சீரீஸ் மட்டுமின்றி, பள்ளிக்கூடத்திலும் தகாத

வார்த்தைகளின் பிரயோகம் தலைவிரித்தாடுகிறது. காரணம் அவ்வாறு பேசுவதினால் தங்களுடைய தைரியமும் துணிச்சலும் கூடுவதாக அவர்கள் எண்ணுவதுதான். 'கோபம் வருதுன்னு ஒரு காரணத்துக்காக தகாத வார்த்தைகளை உபயோகம் பண்றது சரியா ?'

திருமணமான தம்பதி அல்லது திருமணமாகவிருப்போர் அல்லது காதலர்கள் என யாராக இருந்தாலும் எந்நேரமும் பாசத்துடன் இருப்பதில்லை. ஒரு சில நேரங்களில் இருவருக்குமிடையில் மனக்குழப்பங்கள் ஏற்பட்டு சண்டையிட்டுக்கொள்வதும் உண்டு. வெறுமனே அன்பு மாத்திரம் காணப்பட்டால் சலித்துப்போய்விடும் அல்லவா ? இடைக்கிடையே அன்போடு கலந்த சிறிது குறும்புத்தனமான சண்டைகளும் இருக்கத்தான் வேண்டும். சண்டை வரும்போது எந்நேரமும் ஒரே மாதிரியாக இருக்காது. சில நேரங்களில் வார்த்தைப் பிரயோகங்கள் மிகவும் காரசாரமாக இருக்கும். அப்படி வார்த்தைகளை விடும்போது, அதுவும் ஒரு தம்பதியினராக இருக்கும் போது வார்த்தைகளையும் ஒரு கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். சில காரசாரமான வார்த்தைகள் விவாகரத்து வரை சென்ற சந்தர்ப்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆகவே சண்டையிடும்போது யாருடைய மனதையும் புண்படுத்திவிடாதீர்கள்.

சண்டை ஏற்பட்டால் இந்த வார்த்தைகளை கூறாதீர்கள் : 1. "உன்னை திருமணம் செய்தது நான் செய்ததவறு" 2. இதெல்லாம் எனது பணத்தில் வந்தவை 3. "செத்துப்போ, நான் உன்னை கொல்லுவேன்" 4. உன்னைக் கண்டால் எரிச்சல் 5. இதெல்லாம் உன்னால் வந்த வினை 6. உனக்கு மனநோயா ? 7. ஒரு வேலையை உருப்படியாக செய்ய முடியாது.

யாராக இருந்தாலும், தனது பேச்சில் நிதானமும், ஒவ்வொரு வார்த்தையிலும் கவனமுடனும் இருப்பது அவசியம் ஏனெனில் நாம் பேசும் விஷயமும், அந்த வார்த்தைகளும் தான் நம் எதிரிக்கோ அல்லது நமக்கு நாமே எதிரியாகவோ வாய்ப்புள்ளது. சரியான வார்த்தை பிரயோகம் இருப்பது அவசியம். இல்லையேல் உறவு மோசமடையும். மோசமான பேச்சால் உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உங்களை விட்டு விலகத் தொடங்குவார்கள். மோசமான பேச்சை உடையவர்களிடமிருந்து மற்றவர்கள் விலகி இருக்க விரும்புவார்கள். அதனால் எப்பொழுதும் யாரிடம் பேசினாலும், கனிவாக மரியாதையுடன் பேசுவது அவசியம். வார்த்தைகள் உண்மை நிலையைக் காட்டுவது மட்டுமல்ல; அவையே உண்மை நிலையையும் படைக்கின்றன. உடன்பாட்டு வார்த்தைகள் என்ற டானிக் உருக்குலைந்த மனிதனை சீராக்கும். மனம் திருந்திய மனிதனாகவும் மாற்றிவிடும்.

ஆகையால், நல்லதைப் பேசுவோம்! நல்வாழ்வு வாழ்வோம்.


## சென்னை ஒரகடம் அருகில் தங்கும் வசதி

சென்னை ஒரகடம் – ஸ்ரீபெரும்புதூர் அருகில் 100 பேர் தங்கும் வசதியுடன் (ஆண்கள் மட்டும்) விடுதி உள்ளது. ஒரகடம் மற்றும் ஸ்ரீ பெரும்புதூர் ஆகிய இடங்களில் வேலைக்கு செல்பவர்கள், புதிதாக வேலைக்கு சேருபவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நமது கார்குல இளைஞர்களுக்கு முன்னுரிமையும், சலுகையும் வழங்கப்படும். மேலும் வேலை தேடி வருபவர்களுக்கு உதவிகள் செய்து தரப்படும்.

மண்ணிவாக்கம் **S. சுவாமிநாதன்,**

**S. குமரகணேஷ்** செல் : ***9841998551***

விடுதி : செல் : ***8825400352***

## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் :** ஆண்டாள், மீனா, பிரியா, கோமதி, தீபிகா, சித்ரா, வசுமதி, கௌரி.

**இடம் :** பெசன்ட் நகர், அறுபடை வீடு முருகன் கோவில்.

மாலை சுமார் 5 மணி அளவில் அனைவரும் கோவிலில் நியூயார்க் வல்லப கணபதி சந்நிதியில் கூடுகின்றனர். இன்றைய கூட்டத்திற்கு இரு பெண்மணிகள் புதிதாக வந்திருந்தனர். அவர்கள் திருமதி. மீரா மற்றும் திருமதி. காந்திமதி ஆகும். அனைவரும் அவர்களை மிக்க மகிழ்ச்சியுடன் கைதட்டி வரவேற்றனர்.

மீரா : எல்லா சந்நதியிலும் கும்பிட்டு வரலாமா ? அதன் பின் பிரகாரத்திலோ, பழமுதிர்ச்சோலை சந்நிதியிலோ அமருவோம்.

அனைவரும் அதனை ஆமோதிக்க, எல்லா முருகனையும், விநாயகரையும் வழிபட்டு வந்து பிரகாரத்தில் அமருகின்றனர்.

சித்ரா : ஆண்டாளக்கா! முதலில் மாசி மாத விழாக்களைப் பார்ப்போமா ?

ஆண்டாள் : எப்போதும் போல அனைவரும் கலந்து பேசுவோம். மாசி மாதம் மார்கழியைப் போலவே இறைவழிபாட்டிற்கு உரிய மாதம். அனைத்து தெய்வங்களுக்கும் உரிய மாதம் இதுவாகும். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்தது மாசி மக நட்சத்திரத்தில்தான் என்கிறது புராணம்.

மீனா : அக்கா! எங்களுக்கு மகாசிவராத்திரியும், மகாமகமும் தான் தெரியும். குடந்தையில் நடைபெறும் மாசி மகத்திருவிழாவும், மாமாங்க குளமும் தான் நினைவில் நிற்கிறது.

ஆண்டாள் : அது மட்டுமல்ல; மாசி மாதத்தில் வருகின்ற சங்கடஹர சதுர்த்தி மிகவும் விசேஷமானது. குலசேகர ஆழ்வார் மாசி மாத புனர்பூச நட்சத்திரத்தில் தான் அவதரித்தார். மாசி மாதத்திற்கு அதி தேவதை மகாவிஷ்ணு. இம்மாதம் முழுதும் துளசியால் அவரை வழிபட, இல்லத்தில் சுபகாரியங்கள் நிறைவேறும் என்று கூறுவர்.

பிரியா : மாசி மகத்தன்னைக்கு அண்ணாமலையார் பள்ளிகொண்டாப்பட்டு எனும் ஊரில் வல்லாள மகாராஜனுக்கு மகனாக, அவரின் நீத்தார் கடனை தீர்த்ததாக புராணங்கள் கூறுகிறது.

கோமதி : மாசி மாசம் மந்திர உபதேசம் பெறுவதற்குரிய மாதம் எனவும், பூணூல் அணியும் விழா இம்மாதத்தில் நடைபெறுவது விசேஷம் எனவும் எனது தோழி பத்மினி கூறி இருக்கிறாள்.

தீபிகா : மாசி பூச நட்சத்திரத்தில் தான் முருகப்பெருமான் தகப்பன் சாமியாக, சுவாமிமலையில் சிவபெருமானுக்கு பிரணவப் பொருளை உபதேசித்தாராம்.

சித்ரா : மாசி மகம் தான் வடக்கில் ஹோலி பண்டிகை என கொண்டாடப்படுகிறது. கலர் பொடி தூவி அனைவரும் கொண்டாடுவார்கள். பிரகலாதனை அழிக்க வந்த ஹோலிகா என்ற பெண் பூதம் அழிக்கப்பட்ட நாள் என கூறுவர். ஹோலி விளையாட வீட்டிற்கு வருபவர்களுக்கு இனிப்பு கொடுப்பது வழக்கம். மன்மதன் சிவபெருமானால் எரிக்கப்பட்டதும் மாசி பவுர்ணமியில்தான்.

வசுமதி : உயர்படிப்பு, ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்கள் மாசி மக நாளில் தொடங்கினால் சிறந்து விளங்கலாம். அன்றைய நாளில் எதைத் தொடங்கினாலும் வளர்ச்சியுறும் என்பர்.

காந்திமதி : எனக்கு தெரிஞ்சதையும் சொல்றேன்ப்பா. பிரம்மஹத்தி போன்ற பெரும்பாவங்களைப் போக்கி, பேய்க்கும் நற்கதி கொடுக்க வல்ல இரு ஏகாதசிகள் வருவது மாசியில்தான்.

கௌரி : என்னென்னவோ சொல்றீங்க! காரடையான் நோன்பும், சாவித்ரி விரதமும் இந்த மாதத்தில் வரும் மாங்கல்யம் காக்கும் விசேஷ விரதங்கள்.

மீரா : இந்த மாசத்தில் வீடு கிரகப்பிரவேசம் செய்வது விசேஷம் எனக் கூறுவர். அகத்தியர் தவம் இருந்து அருள் பெற்றது மாசி மாதத்தில்தான் என கூறப்படுகிறது. எனக்குத் தெரிஞ்சு மாசி மகத்தில் பிறப்போர் ஜகத்தை ஆள்வர் என்பதும், மாசிக்கயிறு பாசி படியும் என்பதும் பழமொழி.

ஆண்டாள் : எல்லாம் சொல்லிட்டீங்க! மாசி மகத்தில் அம்பிகையை குங்குமத்தால் வழிபட இன்பமும், வெற்றியும் தேடிவரும்; மாசி மாச சுக்லபட்ச பஞ்சமியில் சரஸ்வதி தேவியை மணமுள்ள பூக்களால் வழிபட, கல்வியில் சிறந்து விளங்கலாம்.

சித்ரா : மாசி மகத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்துவிட்டோம். மாசியில் வரும் மகாசிவராத்திரி தற்சமயம் மிகுந்த கோலாகலமாக நாட்டியாஞ்சலியாக பெரும்பான்மையான சிவன் கோவில்களில் நடைபெறுகிறது. தற்சமயம் இதில் கலந்து கொள்ள வெளிநாடுகளிலிருந்து நடனக்கலைஞர்கள் தமிழகம் வருவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

ஆண்டாள் : மயூரநாதர் கும்பேஸ்வரர், சிதம்பரம் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகளை ஒவ்வொரு வருடமும் ஒரு group ஆக சென்று கண்டு மகிழ்வோம். சென்னையிலும் மயிலை கபாலீஸ்வரர் கோவிலில் நடைபெறுகிறது.

காந்திமதி : நான், நான்கு கால பூஜை தரிசிக்க குழுவாக நான்கு கோவில்களுக்குச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளோம். முதல் நாள் இரவு ஆரம்பித்து மறுநாள் காலை 8 மணிக்குத்தான் வீடு திரும்புவோம். அது ஒரு ஆன்மீக அனுபவம். எழுத்தில்வடிக்கஇயலாது. அம்பிகைசிவனைவழிபட்டு வரங்கள் பெற்ற நாளே மகாசிவராத்திரியாகும்.

மீரா : பிப்ரவரி 16–ஆம் தேதியும், மார்ச் 3–ஆம் தேதியும் ஏகாதசிகளாகும். பிப்ரவரி 18– மகாசிவராத்திரி மார்ச் 6 ஆம் தேதி மாசி மகம். மார்ச் 7ஆம் தேதி பௌர்ணமி, மார்ச் 10ஆம் தேதி மகாசங்கடஹரசதுர்த்தி தினங்களாகும். நீங்களெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் போதே என்னைக்கு வருதுன்னு பார்த்துட்டேன்.

சித்ரா : அக்கா, இந்த மாசம் நம் போன வருஷத்தில் நடந்த முக்கிய நிகழ்வுகளைப் பற்றி பார்க்கலாமா ?

ஆண்டாள் : அதெல்லாம் எனக்கு ரொம்ப தெரியாதுப்பா நீங்கெல்லாம் பேசுங்க! நான் கேட்டுக்குறேன்.

வசுமதி : ஜனவரி 1ஆம் தேதி குஜராத்தில் 108 இடங்களில் ஒரே நேரத்தில் 50000 பேர் சூரிய நமஸ்காரம் செய்து கின்னஸ் சாதனை படைத்தனர். ஜனவரி 11 ஆம் தேதி இந்தியாவின் நீளமான, கடல் மீது அமைந்த 21.8 கிமீ பாலமான சீவ்ரி பாலம் மும்பையில் பிரதமர் மோடியால் திறக்கப்பட்டது.

கௌரி : மைக்ரோசாப்ட் விண்டோஸ் சர்பேஸ் பிரிவுக்கு தலைவராக சென்னை ஐ.ஐ.டி. முன்னாள் மாணவர் பவன் டவுலூரி நியமிக்கப்பட்டார். தொடர்ந்து மூன்றாவது முறை பிரதமராக மோடி ஜூன் 9 அன்று பதவியேற்றார். ஆந்திர முதல்வராக தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபு நாயுடு மற்றும் துணை முதல்வராக பவன் கல்யாண் பதவியேற்றனர்.

சித்ரா : ஜனவரி 22ல் அயோத்தி ராமர் கோயில்கும்பாபிஷேகம்மிகவும்சிறப்பாகநடந்தேறியது. கருவறையில் மிகவும் அம்சமான பாலராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டார். அபுதாபியில் 27 ஏக்கர் பரப்பளவில் முதல் ஹிந்து கோயிலான சுவாமி நாராயண் மந்திரை பிரதமர் மோடி திறந்துவைத்தார். 'This Moment' இசை ஆல்பத்துக்காக தமிழக இசைக்கலைஞர் செல்வகணேஷ், பாடகர் சங்கர்மகாதேவன், தபலா இசைக்கலைஞர் மறைந்த மாமேதை ஜாகீர் உசேன் உட்பட ஐந்து பேருக்கு சர்வதேச கிராமி விருது வழங்கப்பட்டது.

தீபிகா : பாரதரத்னா விருது முதல் முறையாக ஒரே ஆண்டில் 5 பேருக்கு வழங்கப்பட்டது. உயர்திருவாளர்கள் அத்வானி, நரசிம்மராவ், சரண்சிங், எம்.எஸ். சுவாமிநாதன் மற்றும் கர்ப்பூரிதாக்கூர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நமது பாரத பிரதமர் திரு. மோடிக்கு இந்த ஆண்டு ஏழு சர்வதேச விருதுகள் கிடைத்தன.கடைசியாகடிசம்பர்22அன்றுகுவைத்தின் உயரிய விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். தாதாசாகேப் பால்கே விருது இந்த விருஷம் நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு வழங்கப்பட்டது.

கோமதி : மார்ச் 5ஆம் தேதி நீருக்கு அடியில் அமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் மெட்ரோ ரயில் போக்குவரத்து கோல்கட்டாவில் துவக்கப்பட்டது. மார்ச் 9 அன்று அருணாசல பிரதேசத்தில் உலகின் உயரமான இடத்தில் (13,000 அடி) அமைக்கப்பட்ட இருவழி சுரங்கப்பாதையை பிரதமர் மோடி துவக்கினார். சீனாவின் புஜியான் மாகாணத்தில் உலகின் உயரமான (1115 அடி) காற்றாலை அமைக்கப்பட்டது.

பிரியா : லடாக்கில் 15 ஆயிரம் அடி உயரத்தில் பாராசூட் வாயிலாக தற்காலிக மருத்துவமனையை தரையிறக்கி ராணுவம் சாதனை புரிந்தது. சென்னை மெரீனாவில் அக்டோபர் 6ஆம் தேதி நடந்த போர் விமான சாகசத்தை 15 லட்சம் பேர் நேரில் பார்த்தனர்.

இது 'லிம்கா' சாதனையானது. ஆனால் வெப்ப அலையால் 5 பேர் பலியானதுதான் வருத்தத்தைத் தந்தது.

மீரா : சுற்றுலாவிற்காக கேரளாவின் கொச்சி – மூணாறு இடையே கடல் விமான சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இராமேஸ்வரம் பாம்பன் புதிய ரயில் பாலம் 2.08 கி.மீ. நீளத்திற்கு கட்டப்பட்டு சோதனை ஓட்டம் நடந்தது. இது நாட்டின் முதல் செங்குத்து தூக்குப்பாலமாகும். கன்னியாகுமரியில் விவேகானந்தர் மண்டபம் – திருவள்ளுவர் சிலை இடையே 253 அடி நீளமும், 33 அடி அகலமும் கொண்ட கண்ணாடி கூண்டு பாலம் திறக்கப்பட்டுள்ளது.

மீனா : பசிபிக் கடலில் சாலோமன் தீவில் உலகின் பெரிய பவளப்பாறை (நீளம் 105 அடி, அகலம் 112 அடி, உயரம் 18 அடி) கண்டுபிடிக்கப்பட்டது. சர்வதேச விண்வெளி மையத்துக்கு அமெரிக்காவின் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆய்வுக்கு (எட்டு நாள்) சென்றனர். அவர்கள் பயணித்த 'ஸ்டார்லைனர்' விண்கலம் தொழில்நுட்ப கோளாறால் பூமிக்கு திரும்ப இயலவில்லை. இருவரும் 2025 மார்ச்சில் பூமிக்குத் திரும்புவர் என நாசா தெரிவித்துள்ளது. ஜூன் 3ஆம் தேதி வியாழன், புதன், யுரேனஸ், செவ்வாய், நெப்டியூன், சனி என ஆறு கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் தோன்றின. அது போன்றே ஜனவரி 25ஆம் தேதி இரவும் தோன்றுகிறது.

காந்திமதி : செவ்வாய்க் கோளில் திரவ நிலையில் தண்ணீர் இருக்குனு கண்டுபிடிச்சிருக்காங்க. 'சி/2023 ஏ3' என்ற வால் நட்சத்திரம் பூமியைக் கடந்து சென்றது. அடுத்து 80,000 ஆண்டுக்குப் பின்தான் மீண்டும் வரும். சூரியனை ஆராய இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) அனுப்பிய 'ஆதித்யா எல் 1' விண்கலம், 15 லட்சம் கி.மீ. தொலைவில் 'லாக்ராஞ்ஜியன் பாயின்டில்' நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

கௌரி : கார்பன் – டை – ஆக்ஸைடை மெத்தனாலாக மாற்றும் உலகின் முதல் ஆலை நவம்பர் 9ஆம் தேதியன்று உ.பி. விந்தியாச்சலில் துவங்கப்பட்டது. நவம்பர் 18ஆம் தேதி டென்மார்க்கின் விக்டோரியா கேர் 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டம் வென்றார். நூறு சதவீத சூரிய ஒளி மின்சாரம் பயன்படுத்தும் முதல் எல்லை கிராமமாக ஆனது மசாலி. 40 கி.மீ. தூரத்தில் பாகிஸ்தானின் எல்லை உள்ளது.

வசுமதி : செப்டம்பர் 17 அன்று டில்லி முதல்வர் கெஜ்ரிவால் ராஜினாமா செய்ததால், புதிய முதல்வராக அதிஷி முதல்வராக பதவியேற்றார். பிரிட்டன் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றதை அடுத்து, பிரதமராக கெய்ர் ஸ்டார்மர் பதவியேற்றார். இந்தோனேஷியாவில் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து நுசந்தராவுக்கு ஆகஸ்ட் 17ஆம் தேதி மாற்றம் செய்யப்பட்டது.

சித்ரா : இதெல்லாம் சொல்லிட்டீங்க! நம்ம விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை விக்கிரவாண்டியில் நடந்த மாநாட்டில் கட்சி கொடியுடன் அக்டோபர் 27 அன்று தொடங்கியுள்ளார். இலங்கை பார்லிமெண்ட் தேர்தலில் அதிபர் அனுரா குமார திசநாயகேவின் தேசிய மக்கள் சக்தி கட்சி பெரும்பான்மையான இடங்களில் வென்று அதிபரானார். இலங்கை பிரதமராக ஹரிணி அமரசூர்யா பதவியேற்றார்.

தீபிகா : ஸ்போர்ட்ஸ் பற்றி கூறலாமே! பெங்களூரு தேசிய தடகளம் 400 மீ ஓட்டத்தில், தங்கமகள் பி.டி. உஷாவின் சாதனையை முறியடித்து, தமிழகத்தின் வித்யா தங்கம் வென்றார். 22 கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற நடால் டென்னிஸ் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார். டெஸ்ட் அரங்கில் 537 விக்கெட் வீழ்த்திய ஸ்பின்னர் அஷ்வின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு என அறிவித்தார். இந்தியாவின் குகேஷ் 18 வயதில் உலகின் இளம் செஸ் சாம்பியன் ஆனார்.

காந்திமதி : சரி! சரி! தமிழகத்தில் வீட்டு சமையல் காஸ் சிலிண்டர் ரூ. 100 குறைந்தது. அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு காலை உணவு திட்டம் விரிவாக்கப்பட்டது. அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வியில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 1000 வழங்கும் தமிழ் புதல்வன் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ஆண்டாள் : நிறைய தெரிந்து கொண்டேன். இரண்டு முக்கியமான விஷயங்களை மறந்து விட்டீர்களே! ஜூலை 30 அன்று கேரளாவின் வயநாடு முண்டக்கை, சூரல் மலை கிராமத்தில்

கனமழையால் ஏற்பட்ட மலைச்சரிவு; மற்றொன்று கொல்கட்டாவில் ஆகஸ்ட் 10ஆம் தேதி நடந்த ஆர்.ஜிகர் அரசு மருத்துவக் கல்லூரி படுகொலை. இவ்விரண்டும் கடந்த ஆண்டில் மிகுந்த மனவருத்தத்தை அளித்த துயர சம்பவங்கள். உலகளவில் லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத்தீ பலத்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளதும் கவலை தரும் செய்தி. மற்றபடி 2024 நன்முறையில் கடந்து சென்று, 2025ஆம் வருடம் சிறப்பான முறையில் துவங்கி உள்ளது. இந்த வருடம் நமது அனைவருக்கும் சிறந்த ஆண்டாக விளங்க இறைவனைப் பிரார்த்திப்போம். அடுத்த மாதம் எங்கு என்று முடிவு செய்து நாம் கலையலாம்.

மீனா : அக்கா, நாம் இன்னொன்றையும் மறந்து விட்டோம். கடந்த ஆண்டில் காலம் சென்ற ஆளுமைகளை மனதில் நினைத்து, ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்திய பின் கலையலாம். எனக்கு நினைவில் வருபவர்கள் திருவாளர்கள் மன்மோகன்சிங், ஜாகிர்உசேன், ரத்தன் டாடா, ஆர்.எம். வீரப்பன், ஈரோடு இளங்கோவன், டில்லிகணேஷ் மற்றும் பலர். மறைந்த அனைவருக்கும் மௌன அஞ்சலி இப்போ செலுத்துவோம்.

பிரியா : இந்த கோவில் பிரசாதம் நன்றாக இருக்கும். நான் போய் வாங்கி வருகிறேன் என்று கூறி பிரசாதம் உண்ட பின், அடுத்த முறை மெரினா பீச்சில் காந்தி சிலை அருகில் சந்திப்போம் எனக் கூறி தோழிகள் அனைவரும் விடை பெற்றனர்.

நன்றி! வணக்கம்!!

---

## வாழ்த்துகிறோம்

சீர்காழி தாலுகா, ஆமங்குடிபள்ளம் திரு. கோ. பாரி பிள்ளை – திருமதி. கஜலெட்சுமி இவர்களின் புதல்வன் திரு. பா. ஜீவா (எ) விநாயகம் அவர்களுக்கும், சிதம்பரம், பரமேஸ்வர நல்லூர் திரு. ச. முத்துக்குமரன் பிள்ளை – திருமதி. அருள் அரசி இவர்களின் புதல்வி மு. சத்யா (எ) சத்யப்பிரியா அவர்களுக்கும் 2–2–2025 சிதம்பரம் ஆருத்ரா திருமண மண்டபத்தில் திருமணம் இனிதே நடைபெற்றது. சங்கத்தின் சார்பாக மணமக்களுக்கு சந்தனமாலை அணிவித்து, வாழ்த்து மடல் வாசித்து அளிக்கப்பட்டது.

## “கார்காத்தார் ஒப்புரவு” கட்டண விபரங்கள்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 300/– |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்) | ரூ. | 2000/– |
| கலர் (¼ ) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 1500/– |
| கலர் (½) அரைப்பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 3000/– |
| மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | ரூ. | 500/– |
| கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம் | ரூ. | 750/– |
| கருப்பு வெள்ளை (½) அரைப்பக்கம் | ரூ. | 1500/– |
| கருப்பு வெள்ளை முழுப்பக்கம் | ரூ. | 3000/– |
| கலர் முழு பக்கம் | ரூ. | 7000/– |
| முன் அட்டை உட்புறம் | ரூ. | 8000/– |
| பின் அட்டை உட்புறம் | ரூ. | 8000/– |
| பின் அட்டை வெளிப்புறம் | ரூ. | 10,000/– |

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/3** செல்வி **கவிஸ்ரீ**<br>சித்திரை<br>வஞ்சரமட<br>பூர்வீகம் : கூடுவெளி – சிதம்பரம்<br>விருப்பம் : முதுநிலை படித்த அரசு / தனியார் வேலை | **12.6.2000** | M.Com.,<br>Ph.D., | | திருமதி. R. சுமதி,<br>21/78, பொன்னம்பல நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 98653 24653 |
| **B 2/3** செல்வி **M. ப்ரித்தி**<br>பூராடம்<br>களப்பாள<br>செந்துறை | **06.08.98**<br>5' | M.Sc.,<br>B.Ed. (Phy)<br>PGDCA | தனியார் பள்ளி<br>ஆசிரியை | திரு. T. முருகேசன்,<br>சக்தி ஆட்டோ மொபைல்ஸ்,<br>அரியலூர் மெயின் ரோடு,<br>செந்துறை (PO),<br>அரியலூர் (Dt.) – 621 714<br>Cell : 98436 11082 |
| **B 3/3** செல்வி **கு. ஷாந்தினி**<br>பூரட்டாதி<br>குமாரகுட<br>விருப்பம் : 1996 (அ) அதற்கு பின் பிறந்த வரன் | **22.10.1999**<br>160 cm | BCA | B.P.M. - வழுவூர்<br>மயிலாடுதுறை<br>இந்திய அஞ்சல்<br>துறை | திரு. கி. குருமூர்த்தி,<br>81, மேல வெள்ளாள தெரு,<br>கழனிவாசல், மங்கைநல்லூர் அஞ்சல்,<br>குத்தாலம் தாலுகா – 609 404.<br>Cell : 94863 10635, 94432 29109,<br>75982 60635 |
| **B 4/3** செல்வி **J. ஸ்ரீரஞ்சனி**<br>உத்திரட்டாதி<br>வேளா<br>பூர்வீகம் : இடையன்பால்சொரி–சிதம்பரம்<br>குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ள ஜாதகம் | **11.08.98**<br>5' - 4" | B.E. (Mech). | IT Software<br>Company<br>Rs. 4.5 Lakhs/PA | திரு. G. ஜெகன்னாதன்,<br>184, காசு கடைத் தெரு,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 94875 20819 |
| **B 5/3** செல்வி **M.V. Mathumitha**<br>கார்த்திகை<br>பரஞ்சோதி<br>பூர்வீகம் : Sirkali - Mayiladuthurai<br>விருப்பம் : சமபடிப்பு பணியில் உள்ள வரன் | **15.9.95**<br>151 cm | B.E., | Employee's<br>Provident Fund<br>Organisation<br>(Central Govt.) | Mr. Manivasagam,<br>Mugappair,<br>Chennai<br>Cell : 90940 91096, 77100 34422 |
| **B 6/3** செல்வி **ம. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **7.5.98**<br>154 cm | B.Tech.<br>(CSE) | Software Engineer<br>Epsilon<br>Bangalore<br>Rs. 12,00,000/PA | திரு. க. மணிகண்டன்,<br>5/2, காளமேகம் தெரு,<br>கிழக்கு தாம்பரம்,<br>சென்னை – 600 059.<br>Cell : 99416 20355, 79041 97546,<br>94447 11045 |
| **B 7/3** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : நிரந்தர வேலை, நல்ல குணம் | **9.9.98**<br>160 cm | M.E., | Asst. Professor (CSE)<br>Pvt. Engineering<br>College<br>Rs. 5.5 Lakhs/PA | திரு. P.G. இராமமூர்த்தி,<br>55/18, வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம் – 606 105.<br>கடலூர் மாவட்டம்.<br>Cell : 99761 77910 |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/3** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை – 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்)<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன் | **21.11.98**<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer,<br>Fresh Works<br>Chennai | திரு. T. Ramesh,<br>D.No. 11, SNR Flats,<br>Viswanathapuram Main Road,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell : **90801 87596, 94445 56972** |
| **B 9/3** செல்வி **T.A. அனுராதாஸ்ரீ**<br>மூலம் 4ம் பாதம்<br>காவனுட<br>பூர்வீகம் : கீழ்நத்தம் – சிதம்பரம்<br>விருப்பம் : வெளிநாட்டு பணி தவிர்த்து | **19.12.98**<br>5' - 5" | B.E.,<br>Aeronautical Engineer | Design Engineer<br>Boeing India P. Ltd.,<br>Chennai<br>Rs. 7.4 Lakhs/PA | திரு. இரா. அசோக்குமார்,<br>94, அனந்தீஸ்வரன் கோயில் தெரு,<br>சிதம்பரம் – 608 001,<br>Cell : **97892 27987, 70103 17969** |
| **B 10/3** செல்வி **R. சுவாதிகா**<br>மூலம் – 3ம் பாதம்<br>சென்னிமலையான்<br>பூர்வீகம் : கல்லக்குடி – டால்மியாபுரம்<br>விருப்பம் : பட்டம் பயின்று நல்ல வேலையில் உள்ள மணமகன் | **17.3.2001**<br>150 cm | B.E., (EEE) | | திரு. S. இராஜாராமன்,<br>5, கர்ணம் தெரு,<br>கல்லக்குடி – டால்மியாபுரம்,<br>லால்குடி Tk.,<br>திருச்சி Dt. – 621 652.<br>Cell : **99430 39473, 97877 83735** |
| **B 11/3** செல்வி **N. ஸ்ரீநிதி**<br>ஹஸ்தம்<br>தீவித்திரிய<br>பூர்வீகம் : மல்லியகொல்லை<br>விருப்பம் : மத்திய–மாநில அரசு துறையில் பணியில் உள்ள வரன். | **31.8.2000**<br>150 cm | M.Com.,<br>2 year HDCA | | திரு. R. நடராஜன்,<br>362, வைரம் நகர்,<br>டவுன்டேஷன் தென்புரம்,<br>மயிலாடுதுறை – 609 001.<br>Cell : **98943 46181** |
| **B 12/3** செல்வி **M. வைஷ்ணவி**<br>ரோகிணி<br>வேளா<br>விருப்பம் : படித்து வேலையிலுள்ள (அ) தொழில் செய்யக்கூடிய நல்ல வரன் தேவை | **25.11.96**<br>167 cm | M.Sc., | Lead Analyst<br>Citi Corp. Services India Pvt. Ltd.,<br>Bangalure<br>Rs. 22 Lakhs/PA | திரு. S. மதிவாணன்,<br>92, நேதாஜி தெரு,<br>மின் நகர் மேற்கு,<br>அரியலூர் (அம்பாப்பூர்)<br>Cell : **91598 60709, 91506 30626** |
| **B 13/3** செல்வி **சி. தர்ஷினி**<br>பூராடம் முதல் பாதம்<br>பூவனுட<br>பூர்வீகம் : புலியூர் விருத்தாசலம்<br>விருப்பம் : சமபடிப்பு மற்றும் பணியில் உள்ள, 1996க்கு பிறகு பிறந்த வரன். | **7.9.2000**<br>168 cm | B.E. (E&I) | System Engineer<br>Accenture<br>Bangalure<br>Rs. 8 Lakhs/PA | திரு. K.K. சோமசுந்தரம்,<br>41, ஆசிரியர் நகர்,<br>சிதம்பரம்<br>Cell : **98940 97753, 96003 67491** |
| **B 14/3** செல்வி **R. புவனேஸ்வரி**<br>புனர்பூசம் – 4ம் பாதம்<br>நெப்புகுட | **23.06.2001**<br>5.6' | B.E.<br>(Comp) | Schneider Electric<br>Bengalure<br>Rs. 40,000/PM | திரு. R. ராஜசேகரன்,<br>58, V.S.R நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : **9629503222, 94427 80650** |



| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/3** செல்வன் **பாஸ்கரன்**<br>பூராடம்<br>களப்பாள<br>பூர்வீகம் : செந்துறை | **7.9.92**<br>170 cm | B.E | Siritel System Pvt. Ltd., Chennai<br>Rs. 60,000/PM | திரு. A. இராமசாமி,<br>பிளாட் எண். 71A, 2வது கிராஸ்,<br>சக்தி நகர், பழையூர்,<br>அழகிய மணவாளம் Post,<br>மணச்சநல்லூர், திருச்சி<br>Cell : **99434 06831** |
| **G 2/3** செல்வன் **அர்விந்த செல்வன்**<br>திருவாதிரை<br>சாத்தனுட<br>பூர்வீகம் : பெருந்தோட்டம்<br>விருப்பம் : சம கல்வி தகுதி USA –ல் பணிபுரியும் பெண் | **11.11.95**<br>5' - 7" | M.S. Robotics Boston USA | Robotics Engineer, PDW Inc New York<br>H1B Visa | Dr. Thamilchelvan,<br>Plot No. 57, HIG II, 3rd Main Road,<br>4th Cross Street,<br>Nolambur Scheme Phase I,<br>Mogappair West, Chennai - 600 037.<br>Cell :98406 95820, 73582 81856 |
| **G 3/3** செல்வன் **R. ஹரிஹரன்**<br>உத்திராடம்<br>வங்காரமுட<br>V. குமாரமங்கலம் | **09.05.96**<br>168 cm | B.E., Mechanical | T.L. Quality Engineer<br>Suylon Energy<br>Puducherry<br>Rs. 5,00,000/PA | திரு. S. இராதாகிருஷ்ணன்,<br>157-D, Type - II.<br>வட்டம் – 22, நெய்வேலி – 7.<br>Cell : **99421 44157, 94428 60650** |
| **G 4/3** செல்வன் **V. கார்த்திபன்**<br>அவிட்டம்<br>அதுக்கனுட<br>பூர்வீகம் : கருவாழக்கரை, மேலையூர் | **18.11.96**<br>175 cm | B.E., (CSE) | Software Engineer<br>Hexware Technologies<br>Chennai<br>Rs. 6 Lakhs/PA | திரு. V. வெங்கடாசலம் (LIC Advisor)<br>144, வண்டிக்காரத் தெரு,<br>லட்சுமி நகர், சித்தர்காடு,<br>மயிலாடுதுறை – 609 003.<br>Cell : **94431 09443, 94877 09443** |
| **G 5/3** செல்வன் **இரா. விவேக்**<br>ஆயில்யம் 3ம் பாதம்<br>இடைய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : படித்த வேலைக்குச் செல்லும் பெண் | **31.05.98**<br>5' - 6" | B.E. (Mech.) | Senior Testing Engineer<br>HCL, Chennai<br>Rs. 9.5 Lakhs/PA | திருமதி. இரா. லதா,<br>356-1, மேல தெரு, அம்பாபூர்,<br>நாகமங்கலம்,<br>அரியலூர் Dt. 621 701.<br>Cell : **98849 38924, 80126 82125** |
| **G 6/3** செல்வன் **V. வித்யா சாகர்**<br>ரோகிணி<br>சேவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **12.11.92**<br>174 cm | B.Tech (ECE) | Data Analyst,<br>Puducherry,<br>(Chennai Branch) | திரு. T. விவேகானந்தன்,<br>22, விநாயகர் தெரு,<br>திருவேணி நகர் East,<br>வி. மணவெளி, புதுச்சேரி<br>Cell : **97876 89798, 77085 57846** |
| **B 7/3** செல்வன் **S.K. Abishek**<br>Pooradam (Patham 2)<br>Vallatharaya<br>பூர்வீகம் : Thiruvannamalai<br>விருப்பம் : Any Degree, வேலைக்குச் செல்லும் பெண் | **22.2.98**<br>173 cm | B.E. (Civil), | Ocean Life Spaces India Pvt. Ltd., Chennai<br>Rs. 4.2 Lakhs / PA | Mr. V. Karunakaran,<br>No. 10, C.V. Moses Street,<br>Pasumpon Nagar, Pammal,<br>Chennai - 600 075.<br>Cell : **94453 61083** |
| **G 8/3** செல்வன்**S. ஹரி (எ) சபரிநாதன்**<br>திருவாதிரை<br>காளிங்கராய<br>பூர்வீகம் : இளையமதுகூடம்<br>விருப்பம் : படித்த பெண் (அல்லது) வேலையில் உள்ள பெண். | **21.5.96**<br>5' - 5" | B.E (CSE) | Asst. Manager<br>Reliance JIO Infotech, Chennai<br>Rs. 40,000/PM | திரு. T. செந்தில்,<br>333, வெள்ளாழத் தெரு,<br>திருமாந்துறை,<br>மணலூர் அஞ்சல்,<br>திருவிடைமருதூர் தாலுகா<br>தஞ்சை மாவட்டம் – 609 804.<br>Cell : **94427 41499, 63673 22261, 97870 63336** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/3** செல்வன் **G. விஜய்**<br>பரணி<br>எருக்கலுட<br>பூர்வீகம் : திருவாவடுதுறை<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **14.09.95**<br>180 cm | B.E.<br>(Mech.) | Business | திரு. G. கணேசன்<br>54, ராஜா தெரு, சுப்ரமணியபுரம்,<br>திருச்சி – 20.<br>Cell : **75025 56085, 97883 77104** |
| **G 10/3** செல்வன் **S.A. பிரபாகரன்**<br>கேட்டை – 2ம் பாதம்<br>பங்களதரிய<br>பூர்வீகம் : பின்னலூர் (சிதம்பரம் வட்டம்) | **23.08.96**<br>170 cm | M.Tech<br>(Mechanical<br>CAD - CAM)<br>VIT-Chennai | L & T Technology<br>Services Ltd.,<br>Bangalore | திரு. மு. செந்திலதிபன்,<br>103, வாகீசன் நகர்,<br>பார்வதிபுரம்,<br>வடலூர் – 607 303.<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **94449 03240, 94432 89639** |
| **G 11/3** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | **30.01.96**<br>180 cm | B.Tech<br>MBA | Java Developer<br>Hexaware<br>Technologies<br>Chennai<br>Rs. 50,000/PM | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – 605 008.<br>Cell : **94425 80571, 86108 73478** |
| **G 12/2** செல்வன் **ப. ஸ்ரீராம்**<br>ஆயில்யம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : வயலூர், பெரம்பலூர் மாவட்டம்<br>விருப்பம் : தகுந்த வரன் | **28.10.94**<br>170 cm | B.E. (CSC) | IT Analyst<br>TCS, Chennai<br>Rs. 6 Lakhs/PA | திருமதி. உமா பரஞ்ஜோதி,<br>5-A/84C,1A, ரோஸ் நகர்,<br>பெரம்பலூர் – 612 212.<br>Cell : **97874 84028,**<br>**97505 29615** (W) |
| **G 13/3** செல்வன் **S. விவேக்**<br>அஸ்தம்<br>வில்வராய<br>பூர்வீகம் : இராஜேந்திரப்பட்டனம் | **05.07.95**<br>5' - 5" | D.M.E., | ராதா<br>என்ஜினியரிங்<br>பெங்களூரு | திரு. மா. செந்தில்நாதன்,<br>70, நடுத் தெரு,<br>இராஜேந்திரப்பட்டினம் – 608 703<br>Cell : **97887 99110, 96264 91588** |
| **G 14/3** செல்வன் **ராம் ராதாகிருஷ்ணன்**<br>பரணி 2ம் பாதம்<br>குருகுலராய<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **3.6.97**<br>176 cm | B.E.<br>(ECE) | Zoho Corporation<br>Chennai<br>Rs. 30 Lakhs/PA | திரு. R. சோமசுந்தரம்,<br>341, மெயின் ரோடு,<br>பெண்ணாடம் – 606 105.<br>கடலூர் மாவட்டம்.<br>Cell : **94423 78143** |
| **G 15/3** செல்வன் **அ. விக்னேஷ்**<br>மிருகசிரிடம் – 2ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : அரியலூர் | **16.06.96**<br>172 cm | B.E. | Q.A. Engineer,<br>Chainsys India<br>Pvt. Ltd., Chennai<br>தற்சமயம் மதுரை<br>Rs. 6 Lakhs/PA | திரு. செ. அனந்தன்,<br>4/1, இராஜாஜி நகர்,<br>2வது கிராஸ்,<br>அரியலூர் – 621 713.<br>Cell : **9626857585, 82483 02931** |
| **G 16/3** செல்வன் **G. ஆதித்ய முகில்**<br>உத்திரம் (பாகம் 3)<br>முனிதரிய<br>பூர்வீகம் : குரும்பகரம் (நெடுங்காடு)<br>விருப்பம் : சென்னையில் பணியில் உள்ள வரன் | **30.4.96**<br>5' - 8" | B.E. (Mech)<br>MBA | Carisma Solutions<br>Pvt. Ltd., Chennai<br>Rs. 6 Lakhs/PA | Mr. S. Ganeshkumar,<br>24, SAS Nagar, New Town,<br>Thiruverumbur,<br>Trichy - 620 013.<br>Cell :99524 11462, 99524 11346 |



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

என்ன செய்யலாம் என்பது சாமர்த்தியம் . எப்படிச் செய்யலாம் என்பது சாதுர்யம்

**அறிவுடைமை**

காட்டு ராஜாவான சிங்கத்துக்கு உடல் நலமில்லை என்று அதனிடம் யாரோ சொல்லிவிட்டார்கள். குறிப்பாக அது வெளிவிடும் மூச்சுக்காற்றில் துர்நாற்றம் வீசுவதாக அதனிடம் சொல்லப்பட்டுவிட்டது. காட்டுராஜாவான சிங்கம்தனது பிரஜைகளான மற்ற மிருகங்களை அழைத்து உண்மை நிலையை அறிய விரும்பியது.

முதலில் ஆடு ஒன்றினை அழைத்து அதனருகில் வரச்சொல்லி வாயைத்திறந்து வேகமாக கர்ஜித்தது. பின்னர் ஆட்டைப்பார்த்து என் மூச்சுக்காற்றில் துர்நாற்றம் வீசுகிறதா ?எனக் கேட்டது. உண்மையை சொல்ல நினைத்த ஆடு ஆமாம் என்று கூறியது. கோபம் அடைந்த சிங்கம் ஆட்டின்மீது பாய்ந்து அதன் உடலைப் பல துண்டுகளாகக் கிழித்துப் போட்டது.

அடுத்து ஓநாயை அழைத்து இதே கேள்வியைக் கேட்டது. ஏற்கனவே ஆடு கொல்லப்பட்டுக் கிடப்பதைப் பார்த்த ஓநாய் சிங்க மகாராஜா நீங்கள் விடுகின்ற மூச்சுக் காற்றில் மலரின் அற்புதமான வாசனையல்லவா வீசுகிறது என்றது. ஓநாய் பொய் சொல்லுவதாக எண்ணிய சிங்கம் அதையும் கொன்றது. கடைசியாக நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது. ஆட்டுக்கும் ஓநாய்க்கும் நேர்ந்த கதியைப் பார்த்த நரி விழித்துக்கொண்டது. மிகவும் பணிவுடன் சிங்கத்தைப் பார்த்து மகாராஜா எனக்கு ஜலதோஷம் பிடித்திருக்கிறது. அதனால் எனக்கு வாசனையே தெரியவில்லை என்றது. சிங்கமும் ஏதும் கூறமுடியாமல் நரியை மன்னித்து அனுப்பியது.

ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலையில் மௌனமாக இருந்து விடுவதே அறிவுடைமை. இது கதையே ஆனாலும் ஒரு உண்மையினை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

---

**இந்த மாத புதிர்கள்!!**

**இது எப்படி ?** தனக்குப் பிடிக்காத ஒரு மந்திரியை வேலையை விட்டு அனுப்பப் பார்த்தார் ராஜா. மந்திரியைக் கூப்பிட்டார் . ஒரு தொப்பிக்குள் இரண்டு சீட்டுகளை எழுதிப் போட்டார் ஒரு சீட்டில் டிஸ்மிஸ் என்று எழுதியிருக்கிறேன். இன்னொன்றில் நீடிக்கலாம் என்று எழுதியிருக்கிறேன். ஏதாவது ஒரு சீட்டை எடும். அது சொல்கிறபடியே ஆகட்டும் ! என்றார் ராஜா. எப்படியும் ஒழித்துக்கட்டவேண்டும் என்று இரண்டு சீட்டுகளிலும் டிஸ்மிஸ்என்றே ராஜா எழுதி வைத்த சதி மந்திரிக்குத் தெரிந்து விட்டது. தொப்பிக்குள் இருந்து ஒரு சீட்டைதான் ராஜாவிடம் எடுத்துக்காட்டினார். ஆனாலும் மந்திரி வேலையில் நீடித்தார். மந்திரி சமாளித்தது எப்படி ?

**கணக்குப்புதிர் : 1**

ஒரு கிராமத்தில் 800 பெண்கள். அவர்களில் மூன்று சதவிகிதத்தினர் கையில் ஒரு வளையல் அணிந்திருந்தார்கள். பாக்கி 97 சதவிகிதத்தினரில் பாதிப்பேர் இரண்டு வளையல்களும், மீதிப்பேர் வளையலே அணியவில்லை . கிராமத்தில் மொத்தம் எத்தனை வளையல்கள் ?

---



**பயனில்சொல் பாராட்டு வானை மகன் எனல்**
**மக்கட்பதடி யெனல். – குறள்**

பயனில்லாத சொற்களை பல முறையும் சொல்லுகின்ற ஒருவனை மனிதன் என்றுசொல்லக் கூடாது.மக்களுள் பதர் என்று சொல்லவேண்டும்.



**விடுகதைகள்**






1. நாலு காலுண்டு.வீச வாலில்லை. அது என்ன ?

2. கடல் நீரில் வளர்ந்து மழைநீரில் மடிவது எது ?

3. இந்தமானால் நடக்கமுடியாது. எந்த மான் ?

4. கூனிக் கிழவிக்கு வயிறு நிறைய பற்கள். அது என்ன ?

5. எல்லா இடத்திலும் இருப்பேன் ஆனால் என்னைப் பிடிக்கமுடியாது. நான் யார் ?

6. அடித்தால் வலிக்கும். கடித்தால் இனிக்கும், அது என்ன ?

7. குரல் இல்லாமலே கூப்பிடுகிறான், அவன் யார் ?

8. உரசினால் போதும் உயிர் முடிந்து போகும், அதுஎன்ன ?

9. ஊர் முழுக்க ஒரே பந்தல், அது என்ன ?

10. கை பட்டதும் சிணுங்குவான், கதவு திறந்தால் அடங்குவான். அவன் யார் ?

**இவை தெரியுமா?**



**1.ஒட்டகம்** ஒட்டகம் ஒரு மைலுக்கு அப்பால் தண்ணீர் இருந்தாலும் மோப்ப வலிமையால் கண்டுபிடித்துவிடும். அரபுநாடுகளின்தேசிய விலங்கு. உப்புநீரை விரும்பி அருந்தும். ஏறக்குறைய 110லிட்டர் நீர் அருந்தும். படைவீரர்கள் போல் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்துச் செல்லும் இதற்கு வியர்க்காது. ஒட்டகம் 40 ஆண்டுகள் வாழ்ந்தாலும், வாழ்நாளில் ஒரே ஒரு குட்டிதான் போடும். 300கிலோ எடையை சுமந்து செல்லக்கூடியது. இதன் பால் கறந்தவுடன் கெட்டியாகிவிடும்.



**2.ஆபத்தான உயிரி** உலகிலேயே மிக ஆபத்தான உயிரியாக வீட்டு ஈ (மஸ்கா டொமஸ்டிகா) குறிப்பிடப்படுகிறது.இதுடைபாய்டு , காசநோய், பேதி, காலரா போன்ற பல நோய்க்கிருமிகளை சுமந்து செல்கிறது. ஒரு தனித்த வீட்டு ஈ மட்டும் தனது வயிற்றில் 33 மிலியன் கிருமிகளை இயக்குமதி செய்கிறது.பல 100 மிலியன் கிருமிகளை தனது உடலிலும் கால்களிலும் தாங்கிச்செல்கிறது.



**3. இரத்தம் உறிஞ்சும் வௌவால்கள் :** தென் அமெரிக்காவின் பெரு நாட்டில் சிவப்பிந்தியர்கள் வசிக்கும் பகுதியில் மனித இரத்தம் குடிக்கும் பெரிய வெளவால்கள் (வம்பயர்) மிகுதியாக உள்ளன. அவர்கள் தூங்கும்போது அவர்களின் உள்ளங்கால்களில் ஓட்டைபோட்டு இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. வெளவால்களின் வாயினின்று வரும் ஒருவகை உமிழ்நீர் மனிதனின் காலில் பட்டவுடன் கால் உணர்வு இழந்துவிடும். தனது இறக்கைகள் விசிறியாகச் செயல்பட்டு நல்ல உறக்கத்தை ஏற்படுத்தி இரத்தவேட்டையை நடத்திவிடுகிறது.

**4.இப்படியொரு சட்டம்:** பண்டைகிரேக்கக் கவிஞர்களில் புகழ்பெற்றவர் வர்ஜில். இவரது தோட்டத்தை அரசு பறிமுதல் செய்ய முடிவுசெய்தது. இதை அறிந்த வர்ஜில், ஒரு ஈயைக்கொன்று தன்தோட்டத்தில் புதைத்து அதற்கு நினைவுத் தூண் எழுப்பினார். அந்த ஈ தனது செல்லப்பிராணி என்று கூறியதால், கிரேக்க சட்டப்படி நினைவுத்தூண் எழுப்பப்பட்ட தோட்டத்தை அரசால் பறிமுதல் செய்ய முடியவில்லை

**5.கண்ணீர்:** குழந்தை பிறந்து நான்கு மாதங்களுக்குப்பிறகுதான் கண்ணீர் உற்பத்தி செய்யும் லாக்கிரீமல் சுரப்பி வேலை செய்யத் துவங்குகிறது. எனவேதான் பிறந்த குழந்தை அழும்போது கண்ணீர் வருவதில்லை

**6.செவிப்பறை:** 1. இறந்தவர்களின் செவிப்பறையை எடுத்து காது கேட்காதவர்களுக்குப் பொருத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள் ஜெர்மனியில் மருத்துவ நிபுணர்கள்.

**7.இதயம்:** கருப்பையில் உருவாகும்போது குழந்தையின் இதயம்தான் முதலில் வளர்கிறது.

## வாலினால் ஆன பயன் என் சொல் ?



வாலை ஆட்டினால் ஒட்ட நறுக்கிவிடுவேன் என்று அடிக்கடி பயமுறுத்துகிறோம், இல்லையா ?. வாலை ஆட்டுதல் என்பது விஷமம் செய்தல் எனும் அர்த்தத்தில்தானே அப்படிச்சொல்கிறோம். வால் உள்ள பிராணிகளெல்லாம் அதற்காகவா வாலை ஆட்டுகின்றன ?நாய்வாலை ஆட்டினால் அது தன் அன்பை வெளிப்படுத்துகிறது என்றுதான் கொள்கின்றோம். ஆனால் பூனை வாலைஆட்டினால்தனது இரைமீது பாய்ந்து கடிக்கப் போகிறது என்றுதான் அர்த்தம். மேலும் ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொருசெயலுக்கும் எவ்வாறு தனது வரலைப் பயன்படுத்துகின்றன என்பதைப்பாருங்கள். ஒருவகைக்குரங்கு மரக்கிளைகளிடையே தாவும்போது கிளைகளை இறுகப் பிடித்துக்கொள்ளப் பயன்படுத்துகின்றது. அதற்கு வால் ஒருகூடுதல் கையாகப் பயன்படுகிறது. பீவர் என்ற விலங்கின் வால் தட்டையாக இருக்கும். எதிரிகள் வருவதைக் கண்டால் தரையை வேகமாகத் தட்டி தனது எச்சரிக்கையை வெளிப்படுத்தும். முதலைக்கு நீரில்தான் பலம் அதிகம். இது தன் இரையாகும் விலங்குகளை தனது வாலைச்சுழற்றி அடித்து வீழ்த்தி, பின்னர் அவற்றை ஆற அமர உண்ணும் பழக்கம்கொண்டது. அணில் உயரத்தில் வேகமாகத் தாவி ஓடும்போது, நிலைதவறி விழுந்துவிடாது இருப்பதற்காக தனதுவாலை இப்படியும் அப்படியும் ஆட்டுகிறது. சர்க்கஸ்களில் கம்பிமீது நடக்கும்போது கைகளை இப்படியும் அப்படியும் ஆட்டி பேலன்ஸ் செய்கிறார்களே அதுபோல. கங்காருவும் வேகமாகத் தாவிப்பாயும்போது சமநிலைத்தவறாமல் இருப்பதற்கு வால் இதேபோலப்பயன்படுகிறது. அதுமட்டுமல்ல,பின்னங்கால்களில்உட்கார்ந்துகொள்ள இதனை மூன்றாவது காலாக ஸ்டூல் போலப் பயன்படுத்துகிறது.முயலின் வாலைப் பார்த்தால் முதலில் பயனற்றதாகத்தான் தோன்றும். ஆனால் உண்மையில் தாய்முயல் எதிரிகளிடமிருந்து தப்பிக்க தனதுகுட்டிகளுடன் ஓடும்போது தாய்முயலின் வால் அசைவைப்பார்த்துத்தான் குட்டிமுயல்கள் தாங்கள் எப்படி ஓடவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கின்றன. மயிலின்தோகை கவருவதற்காக தோகையை விரித்து ஆடுகின்றன.வாலின் பயன்கள்தான் எத்துனை பார்த்தீர்களா ?அழகில் மயங்காதோர் இல்லை. மயிலின்வாலைத்தான் தோகை என்கின்றோம். தனது இணையைக் கவர தோகையை விரித்தாடுகிறது.



**நகைச்சுவை**

சர்ச்சில் இங்கிலாந்து பிரதமராக இருந்தபோது மன நல மருத்துவமனை ஒன்றை பார்வையிட்டார். அப்போது மனநல நோயாளி ஒருவன் நீங்கள் யார் ? என்று சர்ச்சிலைப் பார்த்து கேட்டான். நான் பிரதமர் என்றார் சர்ச்சில். அதைக்கேட்டதும் அந்த நோயாளி பலமாக சிரித்தான் .இங்கே வந்த புதிதில் நானும் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தேன். போகப்போக குணமாகிவிடும் என்றான் .அதிர்ந்துவிட்டார் சர்ச்சில்.

**பய உணர்வில் நகைச்சுவை**

அமரர் தென்கச்சி சுவாமிநாதன் ஒருமுறை தனது நண்பர்களுடன குற்றாலத்திற்குச் சென்றிருந்தார். நண்பர்கள் ஒரு உயரமான பாறை ஒன்றைக்காட்டி அவரை அதில் ஏறி நின்னு தங்களுக்கு இன்று ஒரு தகவல் சொல்லுமாறு கேட்டார்களாம். அதற்கு தென்கச்சியார் தனது வழக்கமான பாணியில் சொன்ன பதில். அதன் மேல் நான் ஏறினா நீங்கள்தான் தகவல் சொல்லவேண்டி வரும் !

கலைவாணர் என் எஸ்.கே சென்னை ஜி எச் சில் அட்மிட் ஆகியிருந்தார். அவரைப் பார்க்கப்போனவரில் ஒருவர் டாக்டர் என்ன வந்தாரா ? பார்த்தாரா ? ன்னு கேட்டார்.அதற்கு கலைவாணர் வந்தார். கையைப்பிடித்தார். கையை விட்டுட்டார்ன்னு சிரித்துக் கொண்டே சொன்னாராம்.

**தன்னம்பிக்கை:** நமக்குத் தன்னம்பிக்கை வளரவேண்டுமானால் அதற்கு மூன்று விஷயங்கள் மிக மிக முக்கியம். 1. கவலை, சோகம், சுய பச்சாதாபம் போன்றவற்றுக்கு நாம் இடம் தரவே கூடாது. 2. திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். திறமை இல்லாவிட்டால் தன்னம்பிக்கை வராது. திறமை என்பது அக்கௌன்டிங், கம்ப்யூட்டர், மெக்கானிக் வேலை, தையல் வேலை, தட்டச்சு, சுருக்கெழுத்து, ஓவியம், இப்படி நமக்கு அதிக ஈடுபாடு உள்ள குறிப்பிட்ட ஏதாவது ஒரு துறையைத் தேர்ந்தெடுங்கள். அத்துறையில் உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள. 3. எதிலும் பொறுப்பேற்றுக்கொள்ளும் குணம். தன்னம்பிக்கைதான் வெற்றிக்கே அடித்தளம்.

**நீங்கள்தான்**



உங்களது எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டியது நீங்கள்தான்.ஜோதிடர்கள் இல்லை. உங்களுக்கு உண்மையாக எப்போதும் இருங்கள்.உங்கள் இலட்சியங்களுக்கு உண்மையாக இருங்கள்.உங்கள் கனவுகளுக்கு உண்மையாக இருங்கள்.

**நமது தேசியக் கொடிபற்றி சில வரிகள்**

போராட்டங்கள் ,தியாகங்கள் செய்து பெற்ற விடுதலையை, மக்களாட்சியைப் பறைசாற்றும் விதமாக அமைந்தது நமது தேசியக்கொடி. கொடிக்குக் காட்டும் மரியாதை நமது நாட்டினுக்குக் காட்டுவதாகும்.நமது தேசியக்கொடியை வடிவமைத்துக் கொடுத்தவர் டிக்கா ஜிருஸ்தம் காமா என்ற பெண். மூன்று நிறங்கள் கொண்ட நமது தேசியக்கொடி மூன்று பங்கு நீளமும் இரண்டு பங்கு அகலமும் உடையது.மேலாக உள்ள காவி நிறம் நமது தியாக மனப்பான்மையையும்,வெள்ளை நிறம் மனத்தால் தூய்மையாகவும்,சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதாகவும்,அடியிலுள்ள பச்சை நிறம் நாட்டின் பசுமையைக் காக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் நடுவே உள்ள 24 ஆரங்கள் கொண்ட அசோகச்சக்கரம் தர்மங்களை உணர்த்துவதாகவும் உள்ளது.

இக்கொடியை சுதந்திர தினம்,குடியரசு தினம் ஆகிய நாட்களில் பொது இடங்களில் ஏற்றி வணங்குதல் வேண்டும்.சூரிய உதயத்திற்குப் பின் ஏற்றி சூரிய அஸ்தமனத்திற்கு முன் இறக்கி விடுதல்வேண்டும். தேசிய அளவில் துக்கம் ஏற்பட்டால் மட்டும் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடவேண்டும். கொடியைத் தரையில்போடக்கூடாது.கொடியேற்றிய பின்னர் கொடி வணக்கம் செய்தல்வேண்டும்.நாட்டுக்காக தனது உயிரையே அர்ப்பணித்த முப்படைவீரர்களுக்கும் மரியாதைசெலுத்தும் நாள் கொடி நாள் டிசம்பர்07.தேசிய கீதத்தை (நாட்டுப்பண்) இயற்றியவர் இரவீந்திர நாத் தாகூர்.13 வரிகள் கொண்ட இதனை 52 நொடிகளுக்குள் பாடிடவேண்டும் என்பதுதான் முறை..

**இவை கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?**

உலகப் புகழ்பெற்ற கூடைப்பந்தாட்டவீரர் மைக்கேல் ஜோர்டான் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்!

அவர் பள்ளிக்கூடத்தின் கூடைப்பந்தாட்ட டீமில் விளையாடுதற்குத் தகுதியில்லாதவர் என்று தவிர்க்கப்பட்டவர். அவர் அப்போது சோர்ந்திருந்தால் ,உலகுக்கு மிகப்பெரிய கூடைப்பந்தாட்ட வீரர் கிடைத்திருக்கமாட்டார் !

ஐன்ஸ்டின் அவரது ஆசிரியரால் மண்டு; சாமர்த்தியம் போதாது ! என்று ப்ராகிரஸ் ரிப்போர்ட் குறிப்புடன் பள்ளிக்கூடத்திலிருந்தே வெளியேற்றப்பட்டவர். ஐன்ஸ்டின் அப்போது கன்னத்தில் கை

வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் ,உலகம் ஒரு மாபெரும் விஞ்ஞானியை நழுவ விட்டிருக்கும் !

ஒரே ஒரு தகுதி மட்டும். உங்களுக்குத் தேவை என்ன என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். எரிகின்ற எண்ணங்களால்தான் முடியும் .மற்றவர் ஒன்றை வெற்றிகரமாகச் செய்கின்றார் என்றால் நம்மால் ஏன் செய்யமுடியாது ?

**எல்லை**

உடலின் ஆற்றலுக்கு எல்லை உண்டேதவிர மனத்தின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை.மனது தூய்மை அடைய அடைய அதற்கான ஆற்றலின் எல்லையும் விரிவடைந்து கொண்டே போகும் .பொறாமை ,கோபம், பேராசை, அடுத்தவர் துன்பத்தில் இன்பம் போன்ற குணங்களை நீக்குவதன்மூலம் எல்லைகள் விரிவடையும்.

எழுத்துக்கு எல்லை சொல்,கவிதைக்கு எல்லை ஓசை,கல்விக்கு எல்லை பண்பாடு, வயதுக்கு எல்லை மனநிறைவு,இந்த எல்லைகள் மீறப்படுகிற போது ஆங்கே ஒரு சுனாமியே உருவாகி எல்லை யாவற்றையும் கலைத்து குலைத்துப் போட்டுவிடுகிறது. எதிலும் எல்லை தெரிந்து நடந்துகொள்வதும்,எதையும் எல்லைக்குள் வைத்துக்கொள்வதும்தான் எல்லையில்லாத நிம்மதியைக் கொடுக்கும்.– நன்றி நமது நம்பிக்கை

**இது எப்படி ? விடை** ஒரு சீட்டைதொப்பிக்குள்ளிருந்து எடுத்த மந்திரி உடனே அதை நம்ம டாங்கி ஸ்டைலில் வாயில்போட்டு விழுங்கிவிட்டார் .தொப்பிக்குள்ளிருக்கும் மற்றொரு சீட்டை மக்களிடம் காண்பியுங்கள் மன்னா ! என்றார்.அசடு வழிந்ததை வெளியில் காட்டிக்கொள்ளாமல் டிஸ்மிஸ் என்று எழுதியிருந்த சீட்டைக் காட்டினார் மன்னர்.ஓ அப்படியானால் நான் நீடிக்கலாம் என்று எழுதியிருந்த சீட்டைத்தான் நான் எடுத்து விழுங்கிவிட்டேனா ? மிகவும் நன்றி மன்னா ! என்று விஷமத்தனமாக வணங்கிவிட்டு போய்க்கொண்டே இருந்தார் மந்திரி.

**கணக்குப்புதிர் விடை :** 800 வளையல்கள்

**விடுகதை விடைகள்**

1. நாற்காலி 2.நீர்க்குமிழி 3.அந்தமான் 4.சீப்பு 5.காற்று 6.கரும்பு 7.இடி 8.தீக்குச்சி 9.வானம்10.கண்

## ‘‘நன்மைக்கு உதவும் தீமை’’

– வழிப்போக்கன்.

நள்ளிரவு அது. எங்கும் பனி. சீறும் குளிர்காற்று. புஞ்சிபண்டா மிகுந்த கவலையில் உறக்கமின்றி புரண்டு கொண்டிருந்தான். படுக்கை அவனுக்குத் தீக்குழியாக இருந்தது. அப்பொழுது ஆந்தை அலறியது. கோட்டான் கூவியது. நரி ஊளையிட்டது. நாய் அழுதது. மொத்தத்தில் கேட்ட ஒலிகள் யாவும் தீக்குறிகளாக அவனுக்குத் தோன்றின. தான் குடியிருக்கும் இடம் ரத்தினபுரவா அல்லது நரகலோகமா என்ற வினா எழுந்தது. தன் ஊர் அருகே ஓடும் ‘கலு கங்கா’ ஆறு நீர் ஓடும் ஆறா அல்லது நெருப்பு ஓடும் ஆறா என்ற ஐயம் அதிகமானது. தன் குடியிருப்பு அருகே உள்ள காடு இடுகாடாகவே அவனால் உணரப்பட்டது. இப்படிப்பட்ட அந்த நிலையில் வீட்டுக்கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. புஞ்சிபண்டாவின் உடல் சில்லிட்டது. ‘‘யார் அது ?’’ என்றான். நான்தான் ‘ரண் மேனிகா’! கதவைத்திற புஞ்சிபண்டா! ‘‘குளிர் தாங்கவில்லை.’’

புஞ்சிபண்டாவின் குருதி உறையத் தொடங்கியது. ‘‘இல்லை ! நீ என் ரண்மேனிகா இல்லை. அவள் இறந்துவிட்டாள். இன்று மாலை தான் அடக்கம் செய்தேன். அதெல்லாம் சரிதான் புஞ்சிபண்டா! குளிரின் கொடுமை தாங்கவில்லை. கதவைத்திற.!!

‘‘இல்லை, முடியாது. நீ பேய்’’

‘‘என் குரல் கூடவா உனக்குப் புரியவில்லை’’

‘‘பேய் யார் குரலில் எப்படி வேண்டுமானாலும் பேசும்’’

‘‘என்னை நம்பு புஞ்சிபண்டா’’

‘‘முடியாது, நீ பேய் தான். என் ரண் மேனிகா இல்லை. அவள் இறந்து விட்டாள்.’’

‘‘சரி, நீ நம்பவேண்டாம். விடிந்ததும் பார்த்துக் கொள்வோம். எனக்கு இப்பொழுது என் போர்வையையாகிலும் கொடு. போர்த்திக் கொள்கிறேன்.’’

‘‘பொய் சொல்லாதே! பேய்க்கு எப்படி குளிரும்!’’

‘‘இனி உன்னிடம் பேசி ஆகப் போவது ஒன்றுமில்லை விடியட்டும் பார்க்கலாம்.’’

தூண்டில் சிக்கிய மீன் போல, பொறியில் மாட்டிய எலிபோல தணலில் விழுந்த புழுபோல புஞ்சிபண்டா துடிக்கிறான். ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிய மெல்ல மெல்ல நேற்றைய நிகழ்வுகள் மனத்திரையில் காட்சிகளாக நகர்ந்தன.

‘‘மணி இரண்டாகப் போகிறது. இன்னும் ரண்மேனிகா வரவில்லையே. பசி வயிற்றைக் கிள்ளுகிறதே என்று எண்ணிய புஞ்சிபண்டாவுக்கு உள்ளுக்குள் ஏதோ தோண பரபரத்தான். உடனே ஓடினான் வீட்டை நோக்கி. மரக்கேட்டைத்திறந்தவன் கண்ணில் மயங்கிக்கிடக்கும் தன் மனைவி ரண்மேனிகா பட, பதறினான், துடித்தான், வாயில் சிறு நுரை. கண்களில் நீலம். முட்டை கீழே கிடக்கிறது. கையில் பாம்புப் பல்கடி அடையாளம். ஊகத்தில் ஓரளவு உண்மை புலப்பட்டது .

தனக்கு அவித்த முட்டை பிடிக்கும் என்பதால் முட்டை எடுக்க வந்தவள் கைகளில் விரியன் தீண்டி இருக்குமோ ? ஒரு குச்சியை எடுத்து கோழி முட்டையிடும் இடத்தில் கிண்டினான். ஆம் ஒரு பாம்பு உச் என்றது. வெளி வந்தது. முதலில் அதனை அடித்துக் கொன்றான். அதற்குள் அக்கம் பக்கம் கூடினர். இதனை அறிந்த புஞ்சிபண்டாவின் மரப்பட்டறையில் பணி செய்த குல வீரசிங்க, காமினிதிசநாயக, ரனவீரகுலதிலக எல்லாம் ஓடி வந்துவிட்டனர்.

இனி ஆகப் போவதென்ன ? அடக்கம் செய்ய ஆக வேண்டியதைபார் என்று ஒருவர் சொல்ல அங்குள்ளோர் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தனர்.

‘‘ஏ வீரசிங்க, ரண்மேனிகா நீருற்றி ஆசையாய் வளர்த்த மரம் இது. இதனை அறுத்து பெட்டி செய்யுங்கள். அவள் அதிலேயே உறங்கட்டும் என்றான் புஞ்சிபண்டா.

சம்பிரதாயப்படி சடங்குகள் நடந்தன. ரண்மேனிகாவை நல்லடக்கம் செய்ய முன்பு அவள் அணிந்திருந்த நகைகளைக் களைய ஒருவர் முற்பட, அவளுக்கு அண்ணன் முறையான ராசபட்ச ‘‘வேண்டாம். அவள் அணிந்த நகைகளைக் களைய வேண்டாம்’’ என்று கூறி அழுதான். புஞ்சிபண்டாவும் அதை ஏற்கச் செய்தான். அவளே இல்லை. இனி இந்த நகை எதற்கு என்று தெளிவாகிவிட்டான். முறைப்படி அடக்கம் செய்யப்பட்டாகிவிட்டது.இந்தநிலையில்தான் ரண்மேனிகா என்று பெயர் சொல்லி ஒரு பேய் கதவைத் திறக்கச் சொல்கிறது. போர்வை கேட்கிறது. இவையெல்லாம் என்னவென்றே புரியவில்லையே என்று மனம் குழம்பிக்கிடந்தான் புஞ்சிபண்டா.

பொழுது விடிந்தது. வாயிற்கதவைத் திறந்தான் புஞ்சிபண்டா. யாருமில்லை. கொல்லைக் கதவைத் திறந்தான். விறகு அறைப்பக்கம்.... அதிர்ந்தான். ஒரு பெண். தன் மனைவி போலவே! தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டான். கனவல்ல, வலித்தது. மெல்ல ரண்மேனிகாவிடம் கையைக் கொண்டு போனான். அவள் விழித்துக் கொண்டாள். உற்றுப் பார்த்தான்

பேயல்ல, தன் பெண்சாதிதான். மனம் உறுதி செய்தது. ''ரண்மேனிகா நீ வந்து விட்டாயா? உண்மையா? என்றான்.

'ரண்மேனிகா பேசலுற்றாள். உனக்கு முட்டை எடுக்க முட்டைப் பொந்தில் கையை விட்டேன். சுறுக்கென்றது. பாம்பு கடித்துவிட்டது. மயக்கம் வந்தது. அது வரை நினைவுக்கு வருகிறது. பிறகு இரவு என் நெஞ்சில் ஒரு கால் நன்றாக மிதித்து கையில் உள்ள மோதிரத்தைக் கழட்ட முயற்சி செய்தது போலும். நான் விழித்துக் கொண்டேன். அண்ணா என்றேன். ராசபட்ச. பேய்! பேய்! என்று அலறி அவன் ஓடினான். மெல்ல மெல்ல நடந்தவையாவும் விளங்கின. மயங்கி இறந்த நான் அவன் நெஞ்சில் மிதித்த நிலையில் உயிர் பெற்றேன். நான் படுத்திருந்த பெட்டியில் இருந்து எழுந்தேன். நான் அடக்கம் செய்யப்பட்ட பெட்டி மரம் நான் வளர்த்த நஞ்சி நீக்கி மரம். அதன் வாசனையை வைத்துக்கண்டுபிடித்துவிட்டேன்.பெட்டியைஉடைத்து என் நகையை எடுக்கும் முயற்சியில் அண்ணன் நெஞ்சில் மிதித்திருப்பான் போலும். காலால் நெஞ்சில் மிதித்து நான் எழாமல் செய்து கையில் உள்ளதைக் கழட்ட முயற்சித்துள்ளான். நான் உணர்ந்து எழுந்ததும் பேய் என்று அலறி ஓடிவிட்டான். வீட்டுக்கு வந்தால் நீ என்னைப் பேய் என்று கூறி கதவைத் திறக்கவில்லை. போர்வை தர மறுத்தாய். குளிர் கம்மியாக இருக்கும் என்பதால் விறகு அறையில் வந்து ஒதுங்கினேன். அப்படியே அயர்ந்து விட்டேன் போலும்.

ஒவ்வொன்றாக உண்மை விளங்க புஞ்சிபண்டா ரண்மேனியை அள்ளி எடுத்து அணைத்துக்கொண்டான். அண்ணன் ராசபட்ச ரத்தவாந்தி எடுத்து சாலையில் உயிரிழந்து கிடக்கும் செய்தி வந்து கொண்டிருக்கிறது.

பிரடரிக் என்ற ஆசிரியர் தமக்குச்சொன்ன இக்கதையைத் தென்மொழி ஆசிரியர் பூங்குன்றன் எனக்குக் கூறினார் என்று கதை வந்த வரலாற்றைக் கூறிய வைரவன், சித்தரைப்பார்த்து இவை எல்லாம் சாத்தியமா சுவாமி என்றார்.

சிவகாமிசித்தர் மெல்ல சிரித்துக்கொண்டே பேசலுற்றார். ''எதுவும் நடக்க வாய்ப்புண்டு. இது உணர்த்தும் செய்தியை மட்டும் சிந்திப்போம்.

நல்லது உள்ள வரை தீயதும் இருக்கும். ஒன்றை வைத்தே ஒன்றை உணர முடியும். தீய அண்ணன் சவப்பெட்டியைத்திறந்து நெஞ்சில் மிதித்து மோதிரம் கழட்டி அதிர்ச்சியூட்டிட அவள் உயிர்த்தெழுகின்றாள். அண்ணனின் பொன்னாசை அப்பாவிப் பெண்ணை உயிர்த்தெழ வைத்தது. நஞ்சு முறிப்பான் மரப்பலகை அவள் உயிரைத் தக்கவைத்தது. இப்படி எண்ணினால் தீமையை வைத்து ஒரு நன்மையைச் செய்யும் சிவனின் திருவிளையாடலைத்தான் எண்ண வேண்டும். தீமை தரும் தொல்லை நம் பாவத்தைக் கழிக்கிறது என்று கொள்க. தீயோர் நம் தீவினைகளைக் கழித்துப் புனிதப்படுத்த வந்தவர்கள் என்று கொள்க. வாழ்வின் ரகசியம் விளங்கும் என்ற சிவகாமி சித்தர் பாடத் தொடங்கினார்.

''பாடு பூவே கூத்தாடு பூவே!
பாவத்தால் புண்ணியமுண்டு
கசப்பு மருந்தாகும்
கைப்பு நஞ்சாகும்
வாய்மை வாழவைக்க
தீமை நன்மைசெய்யும்
என்று கூத்தாடு பூவே
இதுதான் உண்மை என்று பாடுபூவே''

என்று ஆடிப்பாடிக் கொண்டே சிவகாமி சித்தர் புறப்பட்டார்.

---

## வருந்துகிறோம்

செம்பனார் கோவில் ஒன்றியம், தலைச்சங்காடு கிராமம் கார்குல செயல்வீரர் திரு. சொ. கருணாநிதி பிள்ளை அவர்களின் துணைவியார் திருமதி. ஜெயகாந்தம் அம்மையார் அவர்கள் 12–02–2025 அன்று சிவலோக பதவி அடைந்தார்கள். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

✡✡✡✡✡✡✡✡✡

சீர்காழி, சட்டநாதபுரம் திரு. அருணாச்சலம் பிள்ளை அவர்கள் 17–2–25 அன்று இயற்கை எய்தினார் என்பதையும், சீர்காழி தாலுக்கா, அகனி திரு. கண்ணதாசன் பிள்ளை அவர்கள் 22–1–25 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

✡✡✡✡✡✡✡✡✡

அரியலூர் – ராஜாஜி நகர், புலவர் திரு. வி. இளங்கோவன் திட்டக்குடி வட்டார கார்காத்தார் வெள்ளாளர் சங்கத் தலைவர், ஆசிரியர் (ஓய்வு), அரியலூர் – வாலாஜாநகரம், ராஜீவ் நகர், திரு. வி. துரைராஜன் VAO (Rtd.) இவர்களின் அன்புத் தாயார் திருமதி வி. லோகாம்பாள் ஆச்சி அவர்கள் 15.02.2025 அன்று அரியலூரில் இறைவனடி சேர்ந்தார்கள். அவரது ஆன்மா இறைவன் நிழலில் இளைப்பார பிரார்த்திக்கிறோம்.

# அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும் அஷ்ட லிங்கங்கள்

**நினைத்தாலே முக்தி தரும் திருத்தலம்.**

**திருவண்ணாமலை:**

அது பஞ்ச பூத தலங்களில் அக்னி தலமாக திகழ்கிறது. பவுர்ணமியில் கிரிவலத்திற்கு பெருமை பெற்ற திருவண்ணாமலையில் கிரிவலப்பாதையில் இருக்கும். அஷ்ட லிங்கங்கள் குறித்து காண்போம்.

**இந்திரலிங்கம்:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் கிரிவலம் தொடங்கியதுமே முதலில் கிழக்கு திசையில் அமைந்திருக்கிறது இந்திரலிங்கம். ஐராவதம் எனும் யானையில் வஜ்ஜிராயுதம் தாங்கியவராக வந்து அருள் தரும் இந்திரன், பிரதிஷ்டை செய்து வழிபட்ட லிங்கம் இதுவாகும். இந்த லிங்கத்தை வழிபட்டால் செல்வம் பெருகும். பதவி உயர்வு, பணியிடமாற்றம் கிடைக்கும்.

**அக்னி லிங்கம்:**

கிரிவலப் பாதையில் தென் திசை நோக்கி 2–வது லிங்கமாக அமைந்த அக்னிலிங்கம், தென்கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. மற்ற அனைத்து லிங்கங்களும் வலது புறம் அமைந்திருக்க, அக்னி லிங்கம் மட்டுமே இடப்புறம் அமைந்திருக்கும். இந்த அக்னி லிங்கத்தை வழிபட்டால் நோய், பிணி, பயம், எதிரிகள் தொல்லை ஆகியவை நீங்கும்.

**எமலிங்கம்:**

கிரிவலப் பாதையில் தென் திசை நோக்கி 3–வது லிங்கமாக, எமலிங்கம் அமைந்துள்ளது. எமராஜன் அங்க பிரதட்சணமாக கிரிவலம் சென்று சிவனை வழிபட்டு, நிறைவு செய்த இடத்தில் தாமரை மலர்ந்தது. அதிலிருந்து ஜோதிமயமாக தோன்றிய லிங்கம் தான் எமலிங்கம். எம லிங்கத்தை வழிபட்டால் பொருளாதார கஷ்டங்கள் நீங்கி செல்வ வளம் பெருகும். சகோதரர்களின் உறவு நீடிப்பதோடு எம பயமும் நீங்கும்.

**நிருதி லிங்கம்:**

கிரிவலப் பாதையில் தென்கிழக்கு திசையில், ‘4–வது லிங்கமாக நிருதி லிங்கம் அமைந்துள்ளது. ஹரியை நிருதீஸ்வரர் வலம் வந்து வழிபட்டபோது குழந்தையின் அழுகுரலும், பெண்ணின் சலங்கை ஒலியும் கேட்ட இடத்தில், நிருதீஸ்வரருக்கு எதிரில் பிரதிரூப லிங்கமாக நிருதி லிங்கம் தோன்றியது. இங்கு வழிபாடு செய்தால் குழந்தை பாக்கியம் கிடைப்பதோடு, ஜென்ம சாபங்கள் நீங்கி புகழ் கிடைக்கும்.

**வருண லிங்கம்:**

கிரிவலப் பாதையில் மேற்கு திசையில் 5–வது லிங்கமாக வருண லிங்கம் உள்ளது. நீருக்கு அதிபதியான வருணபகவான், அண்ணாமலையை முழங்கால் பிரதட்சணமாகவும், ஒற்றைக்கால் பிரதட்சணமாகவும் கிரிவலம் வந்து வழிபட்ட போது சிவபெருமான் நீரின் வடிவில் காட்சி லிங்கம் உருவானது. இந்த லிங்கத்தை வழிபட்டால் கொடிய நோயில் இருந்து விடுதலையும், புகழும் கிடைக்கும்.

**வாயு லிங்கம்:**

கிரிவலப் பாதையில் 5–வது லிங்கமான வாயு லிங்கம் வட மேற்கு திசையில் அமைந்துள்ளது. மூச்சுக்காற்றை நிலை நிறுத்தியபடியே வாயுபகவான் கிரிவலம் வந்தபோது, அடி அண்ணாமலை அருகே சுகந்த மான நறுமணம் வீச, வாயுபகவான் நிலை தடுமாறிய போது பஞ்சக்ருத்திகா மலர்களின் நடுவே சுயம்பாக லிங்க வடிவில் சிவன் காட்சி கொடுத்தது. தான் வாயுலிங்கம். இந்த லிங்கத்தை வழிபட்டால் கண் திருஷ்டி, இதய நோய்கள் நீங்கும். மன நிம்மதி உண்டாகும்.

**குபேரலிங்கம்:**

கிரிவலப் பாதையில் 7–வது லிங்கமான குபேர லிங்கம் வடக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. சிவனின் அருள் வேண்டி குதிகால் நடையுடன் குபேரன் கிரிவலம் சென்று வழிபட்ட போது விஷ்ணுவும், லட்சுமியும் சேர்ந்து அண்ணாமலையாரை தரிசிக்கும் காட்சியை குபேரன் கண்டார். அந்த இடத்தில் சுயம்புவாக தோன்றியதே குபேர லிங்கம். இந்த லிங்கத்தை வழிபட்டால் செல்வம் செழிக்கும்.

**ஈசான்ய லிங்கம்:**

கிரிவலப் பாதையில் 8–வது லிங்கமான ஈசான்ய லிங்கம் வடகிழக்கு திசையில் அமைந்துள்ளது. கண்களை மூடியபடி ருத்திர முனிவர் கிரிவலம் சென்றபோது ஈசான்ய மூலையில் ஒருவரின் அழுகுரல் கேட்டது. அங்கு சென்ற போது சுயம்பு லிங்கமாக காட்சியளித்தது. இந்த லிங்கத்தை வழிபாடு செய்தால் மனம் ஒருநிலை அடையும். வெற்றி கிடைக்கும் நினைத்த காரியம் கைகூடும்.

தகவல் :

நெ. ஆ. சிவகுருநாதன்,

S.R. நகர்,

சிதம்பரம்.

# விடை பெற்ற தாய்

**உடலில் சுமந்தாய்**
**உயிரை பகிர்ந்தாய்**
**உருவம் தந்தாய்**
**ஆதலின் தாய்!**
சபாபதி – சேதுவுக்கு
இளைய மகளாய் உயிர்பெற்றாய்
இலையூரில் இல்லத்தரசி ஆனாய்
அவதரித்த நாள் முதல் அந்திம காலம் வரை
ஆஸ்த்துமாவின் பாதிப்பால் அல்லலுற்றாய்
அத்தனை இன்னல்களுக்குமிடையே
இல்லத்து தேவைகளை இடையறாது நிறைவேற்றினாய்
சொந்த பந்தங்களை நேசித்தாய்,
உறவினர் விருந்தோம்பலை விருப்பமாய் கடைபிடித்தாய்
நகைகள் மீது மோகம் கொண்டவர்கள் மத்தியில்
உன் வளையல்களை கொடுத்து வயல்களை காப்பாற்றினாய்.
எங்கள் வாழ்வில் தடம்பதித்து வாழ்ந்திடவே கண்டிப்பாய் வழிநடத்தினாய்
குடும்பத்தை கட்டுகோப்பாய் வைத்திருந்தாய்
சாஸ்திர சம்பிரதாயங்களை முறையே அறிந்திருந்தாய்
இளைய தலைமுறைக்கு உன் வாழ்க்கையை பாடமாக்கினாய்
வாழ்க்கை முழுதும் இன்னல்களை எதிர்கொண்டு
வெற்றி பெற்று தைரியலட்சுமியாய் விளங்கினாய்
அப்பாவும் நீயும் அன்பை அளவோடு காட்டினீர்கள்
கண்டிப்பை கடலளவு காட்டினீர்கள்
உங்களின் அந்த கண்டிப்பே எங்களை
பொறுப்பான குடும்ப தலைவனாய் பரிணமிக்க வைத்தது.
விடைபெற்றாய் தாயே
விண்ணுலகில் தந்தையோடு இணைந்தாய்.



**V. பங்கஜம்**
தோற்றம் : 06.01.1934
மறைவு : 25.11.2024

உங்கள் நினைவுகளுடன்

**V. எழில்வாணன்** – சென்னை
**V. வாகீசன்** – இராணிப்பேட்டை
**V. மகேந்திரன்** – இலையூர்.

**சிரிப்பிற்கு சில**

1. இன்னிக்கு பாங்க் இருக்கே! அப்புறம் ஏன் பணம் எடுக்க முடியாதுங்கறே?

   என் அக்கவுண்ட்ல பணம் இல்லையே!

2. கட்சி மேலிடம் எதுக்கு அவசரமா கட்சித்தொண்டர்கள் எல்லாரையும் வரச் சொல்லி இருக்காங்க?

   மின்வாக்கு எந்திரத்தில் எப்படி கள்ளஓட்டு போடறதுன்னு பயிற்சி கொடுக்கத்தான்!

3. என்னங்க! செயின் கம்பெனில வேலை செய்யறதா சொல்றீங்க, ஒரு செயின் எடுத்துகிட்டு வந்து நம்ம பெண் கழுத்துல போடக்கூடாதா?

   அடியே! நான் வேலை செய்யறது சைக்கிள் செயின் தயாரிக்கும் கம்பெனி.

4. இந்த ஏரியாவுல இருக்கிறவங்க மட்டும் பிரமாதமா டென்னிஸ் விளையாடறாங்களே?

   கொசுத் தொல்லை அதிகம் உள்ள ஏரியா ஆச்சே. கொசு அடிக்கிற பேட்டைப் பயன்படுத்தி, பயன்படுத்தி எல்லாரும் நல்லா விளையாட ஆரம்பிச்சுட்டாங்க..

---

**கோபத்தில் முடிவு எடுக்காதே!**

நூற்றுக் கணக்கானோர் பணியாற்றும் ஒரு பெரியநிறுவனம். ஒருநாள் அதன் மேலாளர் திடீரென்று ஒவ்வொரு துறையாகச்சென்று சோதனையிட்டார். அப்போது ஒரு அறையில் மேஜை மறைவில் யாரோ படுத்து உறங்குவதுபோலத் தெரிந்தது. வேகமாக அங்கே சென்று பார்த்தார்.

ஒருவன் கும்பகர்ண உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். மேலாளர் வந்திருப்பதாக சிலர் உரக்கக் கத்தியும் அவன் உறக்கம் கலையாமல் ஆழ்ந்திருந்தான். அவருக்குக் கடுமையாகக் கோபம் வந்துவிட்டது. அவனைக் காலால் உதைத்து எழுப்பினார். உறக்கக் கலக்கத்தில் எழுந்தவன். பேந்த பேந்த விழித்தான்.

தம்பி நீ மாதம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறாய்? என்று பற்களை நற நறவென்று கடித்தவாறு கேட்டார். மூவாயிரம் ரூபாய் சார்! என்றான் அவன். அப்படியா! என்றவர் ,தனது சட்டைப்பையில் இருந்து நூறு ரூபாய்க் கட்டு ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார். இதில் பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது. நீ வாங்கும் சம்பளத்தைவிட மூன்று மடங்கு அதிகம். உடனே இடத்தைக் காலிசெய். நன்றாக நீட்டி மடக்கிக் கிடந்து உறங்குவதற்காக இந்த நிறுவனத்தை நான் நடத்தவில்லை. புரிந்ததா? என்று சீறினார்.

அந்த இளைஞனும் சந்தோஷமாக அந்தப்பணத்தை வாங்கி கால் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டு கிளம்பிச் சென்றுவிட்டான். ஒருவாறாகக் கோபம் அடங்கிய மேலாளர், அப்புறம் அக்கவுண்ட்ஸ் மேலாளரிடம் யார் இந்தப் பையன்? அவனுடைய கணக்கு முழுவதையும் முடித்துவிடு என்று உத்தரவிட்டார்.

அதற்கு அக்கவுண்ட்ஸ் மேலாளர், அவன் ஊழியர்களுக்கு டீ கொண்டு வந்த பையன் சார் என்றார். மெதுவாக. இப்படித்தான் கோபத்தோடு எழுந்தால் நஷ்டத்தோடு அமர்வாய். கோபத்தின்போது எந்த முடிவையும் எடுக்கக் கூடாது.


**Press declaration under the press act, 1957**
**Statement of the Ownership of**
**"KARKATHAR OPPURAVU"**
**under Rule 8 (Form IV)**
**Newspaper 9 Control) Rules.1956**

1. Palce of Publication: The Karkarthar Association (Madras), 64,10th Street, Sowrashtra Nagar, Choalaimedu, Chennai-600094.
2. Periodicity of Publication: Monthly
3. Publisher's Name (Whether Citizen of India? If foreigner, the Country of origine & address) K. SHANMUGAM, No. 2-C, Amirtham Flats, New No. 4, Old No. 13, 1st Cross Street, Seethammal Extension, Teynampet, Chennai - 600 018.
4. Editor's Name (Whether Indian Citizen? If foreigner, the Country of origine & address) S. ANBALAGAN. No. 58, 7th Street, Sakthi Nagar, Thoraipakkam, Chennai - 600 097.
5. Printer's Name (Whether Indian Citizen? If foreigner, the Country of origine & address)

   M. NATARAJAN at MAYUR PRINTERS, No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026.
6. Names and address of individuals, who own the newspaper and Partners and shareholders holding more than one percent share.

   Sole Owners, The Karkarthar Association (Madras), 64,10th St., Sowrashtra Nagar, Choolaimedu, Chennai-600094.

# இரண்டாம் ஆண்டு

# நினைவஞ்சலி



மண்ணில் : 24-04-1958

திருமதி. **S. திலகம்** அவர்கள்
(Rtd. Assistant Registrar, A.U,CDM)

விண்ணில் : 01-03-2023

**ஏழ்மையில் பிறந்து !**
**கல்வியில் சிறந்து !!**
**பணியில் உயர்ந்து !!!**
**கலங்கரை விளக்காய் நின்று !!!!**
**எங்களை விட்டுப் பிரிந்தாலும்**
**நினைவில் இருந்து பிரியவில்லை...**

நீங்கா நினைவுகளுடன்

கணவர். **T. கல்யாணராமன் மற்றும் குடும்பத்தினர்**

சாரதாராம் வைகுந்தம் அப்பார்ட்மெண்ட்,

38/17, S.2, கமலீஸ்வரன் கோயில் தெரு, சிதம்பரம். செல் : 9442866105

# புகழ் அஞ்சலி



மலர்ந்தது
28.11.1953

உதிர்ந்தது
11.02.2025

எங்கள் மாமா

## திரு. ஐ. இரத்தினசபாபதி M.B.A., அவர்கள்

Petrofac Ltd., Sharjah. (Retired)

---

பெருந்தோட்டம்
பிரியமுடன்
பெற்றெடுத்த
பேராளுமையே....

ஐராவதம்
அலமேலுவின்
பாசமிகு
புதல்வரே....

பத்தினிலே
ஒன்றாகி
பகலவனாய்
ஒளி வீசி....

உடன்பிறப்பு
அனைவரையும்
உயர்வாய்
மதித்தவரே....

மலர்விழியின்
மணாளனாய்
மலரின்
நறுமணமாய....

பாசமிகு
கணவராய்
பக்குவமாய்
வாழ்ந்தவரே....

பெற்றெடுத்த
குழந்தைகளை
பக்குவமாய்
வளர்த்தெடுத்து....

ஒப்பற்ற
தந்தையாய்
ஆசானாய்
விளங்கிட்டாய்

இவ்வினிய
தருணத்தை
ஏகமாய்
அனுபவிக்க

ஏனோ
மறந்திட்டாய்
எங்களைப்
பிரிந்திட்டாய்....

நல்லுறவாய்
நட்பாய்
எல்லோர்க்கும்
இனித்தாயே....

மாடித்தோட்டமே
உன்னை
மகிழ்வித்த
மாமருந்தோ....

அனைவரின்
மனதினையும்
அன்பினால்
ஆண்டவரே....

மென்மையாய்
பேசுகின்ற உன்
மேன்மையான
பழக்கத்தால்....

உண்மையாய்
அனைவருமே
உமதடிமை
ஆகிவிட்டோம்....

அன்பினை
பொழிவதிலே
அன்னையையே
மிஞ்சிடுவாய்....

அனைவரையும்
அனுசரித்து
அரவணைக்கும்
அதிசயம் – நீ

உதவிக்கு
முதல் ஆளாய்
உருபொருள்
தருபவரே....

இன்சொல்லும்
இன்முகமும்
உன்னுடன்
பிறந்தனவோ...

வன்சொல்லை
ஒருநாளும்
உன் நாக்கு
சொன்னதில்லை....

குடும்பநலன்
கருதி
நெடுந்தொலைவு
பயணித்து....

கடுமையாய்
உழைத்து
கனவினை
வென்றெடுத்தாய்....

உறவுகள்
அனைவரையும்
உயிரெனவே
நேசித்து....

மனிதம்
போற்றி
மகிழ்ச்சியில்
திளைத்தாயே....

அறவழியில்
பொருளீட்டி
நிறைவாக
வாழ்ந்தவரே....

உற்றார்
உறவினர்கள்
குடும்பத்தார்
அனைவரையும்

சோகத்தில்
ஆழ்த்திவிட்டு
சொர்க்கம்
புகுந்தாயோ....

நினைத்தாலே
இனிக்கின்ற
நேர்மைமிகு
ஆருயிரே....

நினைவற்ற
மௌனமாய்
பொருளற்ற
சொல்லாய்

உயிரற்ற
உடலாய்
உலவுகின்றோம்
உன் நினைவாய்...

---

என்றென்றும் தங்களின் பசுமையான நினைவுகளுடன்....

C.அல்லி சந்திரசேகரன்.

K.செந்தில்நாதன்-அனுபமா.

M.லல்லி மணிகண்டன்.

மற்றும்

C. கார்த்திக் - உதயசங்கரி,
M. சபாராம் & S நரேன் கைலாஷ்,
K. ஆருத்ரா & K. ஆதிரன்.

KSN AGENCY **K.S.N.AGENCY**, Sirkazhi.
( Dealer : BPCL )

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**
28.11.1953

**மறைவு**
11.02.2025

## திரு. அய். இரத்தினசபாபதி M.B.A., அவர்கள்

Petrofac Ltd., Sharjah. (Retired)

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், பெருந்தோட்டம், தெய்வத்திருவாளர்கள் ஐராவதம் பிள்ளை-அலமேலு அம்மாள் அவர்களின் குமாரரும், சென்னை, விருகம்பாக்கம், இளங்கோ நகர் நெ.8. ஆரோக்கியா தெருவில் வசித்துவந்த, திரு. **அய். இரத்தினசபாபதி** அவர்கள் 11.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை 1.00 மணி அளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மீளாத் துயரில் :

மகள் :
R.**இந்துமதி.**

மனைவி :
திருமதி, R.**மலர்விழி**

மகன் – மருமகள் :
R.**இளங்கோ,**
E.**தீபிகா,**
விருகம்பாக்கம்–சென்னை.

பெயர்த்தி :
குட்டீஸ் : E. **யுகபாரதி.**

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 15.01.1952

மறைவு : 12.02.2020

## திரு. J.P. (எ) கோ.ஜெயபிரகாஷ் பிள்ளை

### J.P. பழமண்டி, போஸ்ட் மாஸ்டர் (ஓய்வு)

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தருமபுரம்

தெய்வத்திரு. **க. கோவிந்தராஜ் பிள்ளை** – தெய்வத்திருமதி. **கோ. சாரதாம்பாள்**

அவர்களின் மூத்த குமாரரும், திருமதி. **J. மாலா** அவர்களின் கணவருமான

திரு. J.P. (எ) **கோ.ஜெயபிரகாஷ் பிள்ளை** அவர்களின்

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

*என்றும் அவர்கள் நினைவில் வாழும்...*

மகன் : **J. பிரேம்குமார்,** M.C.A
Software Engineer, (U.S.A)

மருமகள் : திருமதி. **P. சிந்துஜா,** B.C.A

பேத்திகள் : **P. ஹரிணி, P. யாழினி**

மகள் : **P. சீத்தா (எ) மூகாம்பிகை,** D. Pharm., M.B.A.
தி. பெஸ்ட் மெடிக்கல்.

மருமகன் : **K. பிரகாஷ்,** D. Agri
சக்தி சுகர்ஸ், காரைக்குடி

பேரன் : **P. ராகுல் (எ) அஸ்வின்குமார்**

# நான்காமாண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
20–01–1933



மறைவு :
25–03–2021

## சு. இராமலிங்கம் பிள்ளை

### பெரிய பண்ணை, சித்தர்காடு

மயிலாடுதுறை மாவட்டம், மேமாத்தூர் தெய்வத்திருவாளர்கள் இராமசாமி பிள்ளை, பர்வதவர்த்தினி அவர்களின் இளையமகனும் சித்தர்காடு பெரியபண்ணையாரும், சித்தர்க்காடு, மூவலூர், மாப்படுகை ஆகிய ஊர்களின் முன்னாள் கார்காத்தார் சங்கத்தலைவரும் ஆகிய திரு. ஆர். இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு நாளில் நாங்கள் அன்புடன் நினைவு கூர்ந்து வழிபடுகிறோம்.

**என்றும் எங்கள் மனதில் வாழும் மாமனிதரே!**

**நினைத்துப் போற்றும்**

மனைவி **R. தனலெட்சுமி**

| மகள்கள் | மருமகன்கள் | அண்ணன் மகன்கள் | மருமகள்கள் |
|---|---|---|---|
| **S. ஆண்டாள்** | முனைவர் **S.A. சம்பத்குமார்** கும்பகோணம் | **G. பாலசுப்பிரமணியன்** | **B. சுமதி** |
| | | **G. திருமேனி** | **T. சுபஸ்ரீ** |
| **K. மாலா** | **B. கண்ணன்,** மேலப்பெரும்பள்ளம் | L.B. நகர், மயிலாடுதுறை. | |

**தெய்வத்திருவாளர்கள் :**

**R. மங்களம் – A. இராஜாமணி,** கொற்கை.

**இவர்கள் வழி பெயரன்கள் – பெயர்த்திகள்**

**R. முத்துக்குமார் – M. தேன்மொழி**

**R. கோகுலக்கண்ணன் – G. நிவேதா**

**R. அழகுசுந்தரம்**

**மற்றும் பெயரன்கள், பெயர்த்திகள், கொள்ளு பெயரன்கள், கொள்ளு பெயர்த்திகள்.**

பெருமாள் கோவில் தெரு, சித்தர்காடு,
மயிலாடுதுறை மாவட்டம்.
செல் : **9788776225 / 9443677943**

# 14-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு :
**23–08–1946**

நிறைவு :
**22–02–2011**

## Dr. S. பாலகிருஷ்ணன், M.Sc., M.Phil., Ph.D.

சீர்காழி வட்டம் இலையமுதுகூடம் தெய்வத்திரு. M.S. சம்பந்தம் பிள்ளை, தெய்வத்திருமதி. வேதநாயகி அம்மாள் அவர்களின் மூத்த மகன் தெய்வத்திரு. **முனைவர் ச. பாலகிருஷ்ணன்** தாவரவியல் துறைத்தலைவர் பணி நிறைவு (2004) பூண்டி புட்பம் கல்லூரி, தஞ்சாவூர், தலைவர் – தஞ்சை நகரக் கார்காத்தார் சங்கம், தஞ்சாவூர். (2004–2006)

தங்கள் நினைவுகளில் என்றென்றும் நாங்கள்

மனைவி. முனைவர். **சாவித்திரி பாலகிருஷ்ணன்** (பணி நிறைவு)

மகள் :
Dr. **அபூர்வம் சரவணன்,** M.B.B.S.
சர்க்கரை நோய் நிபுணர்.
Dr. சிதம்பரம் நினைவு மருத்துவமனை

மருமகன் :
Dr. **சி. சரவணன்,** M.B.B.S., M.S.
K.A.P.V. அரசு மருத்துவக்கல்லூரி, திருச்சி.

பேத்தி:
செல்வி. **ச. லாவண்யா,** M.B.B.S.

பேரன் :
செல்வன் **ச. ராகவேந்தர்**

**பாசமிகு தம்பியரும் - தங்கைகளும்.**




SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

## WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

**CUT DOWN YOUR ELECTRICITY COST**

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th March 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

- **Experience our new centralized AC dining hall.**
- **The first hotel from the temple is very closest walkable.**
- **Direct connection between the room and dining hall, making it elder-friendly**



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**